
www.tamilarangam.net



# MANITHAM

29

JULI
&
AUGUST

1994

மனிதம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவிஸில் புலிகளின் ஜனநாயகமறுப்பின்

# ஓர் எதிர்ப்புக் குரலாக....

சில வாரங்களுக்கு முன்பு "இது எங்கே போய் முடியும்?" என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளிவந்துள்ளது. இது சுவிற்சர்லாந்தில் பிரதான நகர்ப்புறங்களிலும் பல பகுதிகளிலும் விநியோகிக்ப்பட்டுள்ளமையை அறியக்கூடியதாக இருக்கின்றது. (Basel, தபால் பெட்டி இலக்கம்–23) சுவிஸ்வாழ் தமிழர் நலன்புரிச் சங்கம் என்ற பெயரிலேயே இப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்புப் பற்றியோ, இவர்கள் யார் என்பது பற்றியோ சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை என்றபோதும் இப்பிரசுரம் சுவிஸ்வாழ் தமிழர்களிடையே பலத்த செல்வாக்கையும், பெரும் பாதிப்பையும் உண்டுபண்ணியுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஒரு சில மாதங்களுக்கு முன்பு அநாதைப் பிள்ளைகளுக்கான பணம் சேர்ப்பு என்ற பெயரில் தமது வருகையுடன் கூடிய நிகழ்சியின் மூலம் பணம் சேகரிக்கும் நோக்குடன் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த தமிழ்நாடு திரைப்பட நடிகர் ரஜனிகாந் மிகுந்த எதிர்ப்பின் மத்தியில் வெறுங்கையுடன் திரும்பியது அனைவரும் அறிந்ததே.

தமிழ்நாட்டு அநாதைப் பிள்ளைகளுக்கு பணம் திரட்ட ரஜனிகாந் ஈழத்தமிழரிடமா வரவேண்டும்? இந்தியச் சினிமா கலைஞர்களின் வருகையை எதிர்க்க வேண்டும் போன்ற காரணங்களை முன்வைத்து பிரச்சாரத்தின் மூலமாகவும், மண்டபத்திற்கு முன்பாக நின்று நிகழ்ச்சிக்கு வருபவர்களை (VDO கமரா மூலம்) படம் பிடிப்பதன் மூலம் ஒருவித நிர்ப்பந்தத்தையும் பயமுறுத்தலையும் உண்டுபண்ணியும் இவ் "எதிர்ப்பு" முயற்சியில் விடுதலைப் புலிகள் பலத்த "வெற்றியை" ஈட்டியுள்ளனர்.

ஆனால் இந் நிகழ்சியை அடுத்து குறிப்பாக சுவிற்சர்லாந்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றமே இப் பிரசுரம் வெளிவந்திருப்பதற்கான காரணம் என்பதை பிரகரமே உணர்த்துகிறது.

ரஜனியின் வருகையை எதிர்ப்பதில் வெற்றிகண்ட சுவிற்சர்லாந்து விடுதலைப் புலிகள் ஈழத்தமிழர்களின் சகலவிதமான நடவடிக்கைகளையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் நோக்கில் சுவிற்சர்லாந்தில் நிகழ்ச்சிகளை நடாத்த விரும்பும் தமிழர்கள் தம்மிடம் (புலிகளிடம்) அனுமதி பெறவேண்டும் என்ற கருத்தினைப் பரவவிட்டதுடன் சில நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

ரஜனியின் வருகையை அடுத்து வர இருந்த ஜேசுதாஸின் இசை நிகழ்ச்சியை இவர்கள் தடுத்தனர். அடுத்து வந்த அருண் மொழியின் இசை நிகழ்ச்சியை தடைசெய்வதற்கான முயற்சியில் இறங்கியபோது ஏற்கனவே ரஜனியின் வருகையை எதிர்ப்பதற்கு ஆதரவாக இருந்தவர்கள் (புலிகளின் ஆதரவாளர்கள் உட்பட) உட்பட பலர் இதில் புலிகளின் "வேண்டுதலை" ஏற்கமறுத்தனர்.

↗49

www.tamilarangam.net

**JULI**
**+**
**AUGUST**

**1994**

Zwei Monatlich Einmal

***Impressum***
***&***
***Herausgeber :***

Manitham
Postfach-212
3000 Bern -11
SCHWEIZ



# மனிதம்

**29**

***Redaktion :***
V.Logadas
M.Narendran
S.Ragavan
&
Manitham Redaktion komitee

***Abonnament :***
**22 SFr**
(pro Jahr)

***Post Konto :***
Manitham
3000 Bern-11
PC : **30-37152-1**

***Bank Konto :***
Schweizerische Kreditanstalt
3001 Bern
**Manitham**
**220348-70**

***Druck :***
Offset Druckerei AG
Förrlibuck str-66
8005 Zürich

## உள்ளே ....

- தாய் மண்ணுக்கு ஒரு பயணம்
- ருவண்டா
- உளவியல் பார்வையில் நாசிசம்–2
- ஏனிந்த வெட்கம் ?
- சாதனையும் வேதனையும்
- அருமை மகனிற்கு முதல் கடிதம்

**கவிதைகள்**

**நேர்காணல்**
- சுனில் மாதவ உடன்....

www.tamilarangam.net

கடந்த 5.6.94 இல் பிராங்போர்ட் விமான நிலையத்தில் இருந்து எயர்லங்கா விமானம் மூலம் கொழும்பு போய்ச் சேர்ந்தோம்.

கொழும்பில் கோட்டல் ஒன்றில் தங்கிய நாம் கோட்டல் உரிமையாளரிடம் எங்கள் அடையாள அட்டைகளைக் கொடுத்து பொலிஸில் பதிவு செய்தோம். பொலிஸில் பதிவு செய்த போதும், பொலிசாரின் சோதனை கெடுபிடிகளும், கைதுகளும் எம்மை வெளியில் வரத் தடுத்தன. சோதனைக்குட்படும் போது கையில் பணம் இருந்தால் பணத்தை வாங்கிக் கொண்டு விடுவார்கள். பணம் இல்லை என்றால் வா ஸ்டேசனுக்கு என்பார்கள். பின்பு இரண்டு நாட்கள் கழித்துத்தான் விடுவார்கள். அதற்கிடையில் உறவினர் யாராவது பணத்தைக் கொடுத்து ஆளை வெளியே மீட்டு விடுவார்கள்.

6.6.94 திங்கள் அன்று இரவு 10..00 மணிக்கு வவுனியா செல்வதற்காக கோட்டை புகையிரத நிலையத்தில் நின்றோம். நீண்ட நாட்களின் பின்பு கோட்டை புகையிரத நிலையத்தில் நிற்கும் போது ஓர் புல்லரிப்பு. அங்கு தமிழில் ஒலிபரப்பு (அறிவித்தல்கள்) நடைபெற்றன. "முடிச்சு மாறிகள், திருடர்கள்.... ஜாக்கிரதை!" என்று அறிவிப்புச் செய்தார்கள். 9.30 இற்கு புகையிரதம் வந்து நின்றது. தமிழர்கள் முண்டியடித்துக் கொண்டு கோணர் சீட் பிடிக்க ரயிலில் ஏறினார்கள். 10 நிமிடம் கழித்து ரயிலுக்கு வேறு எஞ்சின் மாற்றினார்கள். ரயிலுக்கு லைட் இல்லை. இச்சந்தர்ப்பத்தைப் பார்த்து திருடர்கள் கைவரிசை மறுபுறம். ஒவ்வொருத்தரும் தங்கள் உடமைகளையும் நகைகளையும் பாதுகாத்துக் கொண்டார்கள். அப்படி இருந்தும் ஓர் பெண்ணின் நகை பறிப்பு.

ஒருவாறாக காலை 5.30க்கு வவுனியாவை வந்தடைந்த நாம் 6.00 மணியளவில் தாண்டிக்குளம் புகையிரத நிலையம் வந்து சேர்ந்தோம். இதுதான் வடபகுதியில் உள்ள கடைசி புகையிரத நிலையம். தாண்டிக்குளத்திற்குப் அப்பால் ரயில் தண்டவாளங்களைக் காணமுடியாது.

அங்கிருந்து 1 கிலோ மீட்டர் துாரத்திற்குப் போக ஓர் ஆளுக்கு 50ரூபா. மினிபஸ், மோட்டார் சையிக்கிள் அல்லது ஆட்டோ எதில் போனாலும் ஆளுக்கு 50ரூபா. செக்பொயின்ட்க்கு முன்னால் ஓர் தேநீர் கடை. தேநீர், பால் 10ரூபா, பணிஸ் 5ரூபா. 6 மணிமுதல் நாங்கள் கியூவில் நின்றோம். கியூ என்றால் ராணி தியேட்டரில் எம்.ஜி.ஆர் படத்திற்கு

# தாய் மண்ணுக்கு ஒரு பயணம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போன்றது தான். 9 மணியளவில் இராணுவம், பொலிசார் வந்தார்கள். புளொட் உறுப்பினர்கள் ஒவ்வொருவராக பரிசோதித்து அனுப்ப... அங்கே சந்தை போல் ஒரு மண்டபம், அதில் பிரயாணிகள் தங்கள் பொதிகளை கவிழ்த்துக் கொட்டி, பின்பு அள்ளிக் கொண்டு போக வேண்டும். பேப்பர், மருந்துவகை, சோப், பிளாஸ்ரிக் பொருட்கள், பற்றரிகள், அலுமினியப் பானைகள், சட்டிகள், கமரா, றேடியோ போன்றவை எடுத்துச் செல்லத் தடைசெய்யப்பட்ட பொருட்கள்.

நாங்கள் நிற்கும் போது நடந்த சம்பவம் ஒன்று. ஓர் வயதான டாக்டர் மோட்டார் சையிக்கிளுக்கு பயன்படுத்தும் சாம்பியன் புளொக் 6 கொண்டு வந்தார். அவற்றை புளொட் உறுப்பினர்கள் பறித்து, ஒரு சட்டியில் போட்டு அந்த வயதான டாக்டரின் தலையில் சுமத்தி, வரிசையில் நிற்கும் ஒவ்வொருவரிடமும் சென்று தடைசெய்யப்பட்ட பொருட்களை இரண்டாவது தடவையாகக் கொண்டு வந்ததற்காக புளொட் இயக்கம் எனக்கு இந்தத் தண்டனையை வழங்குகிறது என்று கூறிக்கொண்டு அடி விழவிழ நடந்து சென்ற காட்சி மிகவும் பரிதாபத்தை உண்டு பண்ணியது.

மதியம் 12.30 மணிக்கு எங்கள் பரிசோதனை முடிந்து வெளியே வந்தபின் CTB பஸ்ஸில் 15ரூபா டிக்கட் எடுத்து 3 கிலோ மீற்றர் தூரம் போனோம். அங்கிருந்து மறுபடி பெட்டிபடுக்கைகளை தலையிலும் தோளிலும் சுமந்தபடி 5 கிலோ மீற்றர் தூரம் நடக்க வேண்டும். அங்கே ஓர் பாலம். அதில் ஓர் அறிவித்தல் – "இந்தப் பகுதி தடைசெய்யப்பட்ட பிரதேசம். இந்தப் பகுதிக்குள் எது நடந்தாலும் நாங்கள் உங்கள் உயிருக்கு உத்தரவாதம் தரமுடியாது" என (இலங்கை அரசின் அறிவித்தல்) இருந்தது.

கொதிக்கும் வெயிலில் 2.30 மணியளவில் நடந்து கொண்டிருந்தோம். 2 கிலோ மீற்றர் தூரம் போனதும் ஓர் சிறிய பெட்டிக்கடையில் சர்பத் அருந்தினோம். ஒரு கிளாஸ் 10ரூபா. பின்பு சையிக்கிள்காரர்கள் (டாக்சி போன்று) "அம்மா வாங்க! ஐயா வாங்க!" என்றார்கள். சிறியவர், பெரியவர், பெண், ஆண் என்று வேறுபாடு இன்றி எல்லோரும் போகின்றார்கள். ஆளுக்கு 100 ரூபா. 2 கிலோ மீற்றர் சயிக்கிளில் போனதும் எப்பக்கம் திரும்பினாலும் தமிழ் ஈழம் உங்களை வரவேற்கிறது. உளவாளிகள் கவனம் என்ற போர்ட்டுக்கள். மீண்டும் பொதிகள் பரிசோதனை செய்யும் இடம். அங்கே கொழும்புச் சோடா கொண்டு போக விடமாட்டார்கள்.

பரிசோதனை அரை மணி நேரத்தில் முடிந்ததும் மீண்டும் சயிக்கிளில் 1 கிலோ மீற்றர் தூரம் போய் அடுத்த தடை முகாமை அடைந்தோம். அங்கே பாஸ் எடுக்க வேண்டும். வெளியூர்வாசிகள், உள்ளூர்வாசிகள் அனைவரும் வரிசையாய் நின்று பாஸ் எடுக்க வேண்டும். 6–7 ஓலைக் கொட்டில்கள். கியூவில் சனங்களை நிரைப்படுத்தும் வகையிலான சட்டங்கள் ரயில் தண்டவாளத்தினால் செய்யப்பட்டு இருந்தன. பழைய உரப்பைகளால் தட்டி செய்து (மறைப்பு) இருந்தார்கள். பழைய தார் பீப்பாய் ஒன்றை வெட்டி குடி தண்ணீர் வைத்து இருந்தார்கள்.

வெளிநாட்டில் இருந்து வந்த எங்களிடம் இலங்கையில் எந்தப் பகுதியில் இருந்தீர்கள்? வெளிநாட்டு முகவரி, வெளிநாட்டில் வேலைபார்த்தீர்களா? யாழ்ப்பாணத்தில் தங்கி இருக்கப் போகும் நாட்கள்... இவைகளைக் கேட்டு எழுதிய பின்பு சிறிய பாஸ் ஒன்றைத் தந்தார்கள். அந்த சிறிய பாஸைக் காண்பித்து கடைசித் தடை முகாமை தாண்டி வெளியேவர மாலை 5மணியாகிவிட்டது.

மாலை 5.30க்கு பஸ் இல்லை. எல்லா வாகனங்களும் மண்ணெண்ணெயில் தான் ஓடுகின்றன. எல்லாவற்றையும் தள்ளியே ஸ்ராட் செய்ய வேண்டும்.

தாண்டிக்குளத்திலிருந்து கிளிநொச்சி (ஆலங்கேணி) போய்ச் சேர ஆளுக்கு 400ரூபா டிக்கெட். இதைக்கூட பாஸைக் காட்டித்தான் வாங்க வேண்டும். பஸ் நிலையத்தில் பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிவிப்புகள்....

"நீங்கள் தமிழீழத்தில் காலடி எடுத்து வைக்கின்றீர்கள். தமிழ் ஈழம் உங்களை வரவேற்கிறது."

"உளவாளிகள்... கவனம், உஷார்!"

"பெடியங்களின் காம்பைப் பற்றி யாரும் கேட்டால் எதுவும் சொல்லாதீர்கள். உளவாளிகளினால் எமது மண்ணும் பயிற்சி முகாம்களும் பல கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளன."

"பல உளவாளிகளை நாம் இனம் கண்டு உள்ளோம். பஸ்ஸிற்காக காத்து நிற்பவர்கள் போல பலமணி நேரம் நிற்பார்கள் உளவாளிகள். இரகசியம் பேசாதீர்கள்!"

"அதிகளவு பவுண் நகைகளை தமிழ் ஈழத்திற்கு கொண்டு வரவேண்டாம் ........என்று பல அறிவிப்புக்கள்."

முன்பு மாங்குள வீதியில் பச்சைப்பசேல் என இரு புறமும் காட்டு மரங்கள். இப்போது அக் காட்சிகளைக் காணமுடியாது. வீதிகள் தோறும் இறந்த போராளி வீரர்களின் பெரிய கட்வுட் போட்டோக்கள். ஒவ்வொரு வீதிகளுக்கும் இறந்த போராளிகளின் பெயர்கள்.

7.30 மணியளவில் முறுகண்டியைச் சென்றடைந்தோம். வழமைபோல தேங்காய் உடைப்புகள்... சாமி தரிசனங்கள்.... ஒரு சிறிய கற்பூரத்தின் விலை 15 ரூபா. இங்கிருந்து புறப்பட்டு இரவு 11.30க்கு கிளிநொச்சி ஆலங்கேணி என்ற இடத்தை வந்தடைந்தோம். இங்கே செல்வச் சந்நிதி போல் கடைகளும் சனங்களும்.... மினிபஸ், ட்ரக்டர்கள் ஓடிக் கொண்டிருந்தன. ட்ரக்டர் எல்லாம் ஒற்றை லைற்றுடன் மட்டுமே ஓடின. நாங்கள் ஆலங்கேணியை அண்மிக்கும் போது ஹெலி ஒன்று லைட் போட்டபடி பறந்து வந்து சுட்டுக் கொண்டிருந்தது. 10 நிமிடங்கள் மினிபஸ் லைற்றெல்லாம் நிறுத்தப்பட்டன. அதன் பிறகுதான் பாஸைக் காட்டி, "வள்ளத்திற்குப் போக வேண்டும்" என்றோம். அவர்கள் சொன்னார்கள், "நேற்று போர்ட் ஓடாத படியால் நேற்றைய பயணிகளை இன்று அனுப்புகிறோம். இன்று வந்த உங்களுக்கு நாளை மாலை தான் வள்ளம்" என்றார்கள். எங்கே தங்குவது?... ஓலைக் கொட்டில்கள். கடல் காற்று நன்றாக வீசியது. வெட்டவெளியில் அவரவர் தமது பொதிகளை தலைக்கு அணையாக வைத்துக் கொண்டு தூங்குகிறார்கள். ட்ரக்டர், மினிபஸ் எல்லாம் புழுதி கிளப்பிக் கொண்டு ஓடின. எமது ஆடைகளை புழுதி போர்த்தின. மறுநாள் காலை 8 மணி இருக்கும், 2-3 செல் அதிர்வது போன்ற சத்தம். ஆனையிறவு தடைமுகாம் இராணுவம் செல் அடித்தது. கடலில் பீரங்கிப் படகு ஒன்று நின்று சுட்டது. மக்கள் எல்லோரும் கடவுளை வேண்டியபடி.... செல் எந்த திசையில் எப்போது வெடிக்கும் என்று யார் அறிவார்?

மாலை இருட்டிய பின்பு நாங்கள் ட்ரக்டரில் ஏறி நல்லூர் போனோம். மொத்தம் 3 கிலோ மீற்றர் தூரம் கடற்கரை மணலின் ஊடாக ட்ரக்டர் சென்றது. இங்கு ஆளுக்கு கூலி 200 ரூபா. வள்ளத்திற்கு டிக்கட் வாங்கி பொதிகளுடன் வள்ளம் இருக்கும் இடம் தேடி ஒரு கிலோ மீற்றர் தூரம் நடந்தோம். ஒரு வள்ளத்தில் 15 பேரை மட்டுமே ஏற்றினார்கள். பொதிகளை எல்லாம் நடுவே வைத்திருந்தோம். வள்ளம் புறப்பட்டு 2 கிலோ மீற்றர் தூரம் போனபோது, ஒரு நேரக்கண்காணிப்பாளர் அலுவலகம் கடலின் நடுவே கூடு அடைத்து உருவாக்கப்பட்டுள்ளதைக் கண்டோம். அவரிடம் வள்ளம் ஓட்டுநர் தனது விபரங்களைப் பதிந்த பின் வள்ளம் புறப்பட்டது.

நல்லூரில் இருந்து கிளாலி கடற்கரைக்கு 10 கிலோ மீற்றர் தூரம். வள்ளம் போக எடுக்கும் நேரம் இரண்டரை – மூன்று மணி நேரம். மண்டைதீவு, பூநகரி, ஆனையிறவு இராணுவ முகாம்களில் இருந்து லைட் ஒளி அடித்து வள்ளத்தில் போவோரை இராணுவம் வேவு பார்த்த வண்ணம் இருந்தது. எங்கள் தலைக்கு மேலே இரண்டு ஹெலி பறந்தபடி... அனைத்துப் பிரயாணிகளும் கடவுளை வேண்டிய வண்ணமே இருந்தனர். ஹெலி, செல் வரும் என யார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிளாளியில் இருந்தும் பிரயாணிகள் வள்ளம் வந்தபடி இருந்தன. கடற்புலிகளின் வள்ளம் ஒவ்வொரு 20 நிமிடத்திற்கு ஒன்றாக பிரயாணிகளின் வள்ளத்திற்கு பாதுகாப்பு கொடுப்பது போல் அருகாமையில் ஓடிக்கொண்டிருந்தன. கடற்புலிகள் கடலின் நடுவே சூளை விளக்கு/ மண்ணெண்ணை விளக்கு கட்டித் தொங்க விட்டு இருக்கின்றார்கள். இது பிரயாணிகள் செல்லும் வள்ளம் திசை தெரியாமல் இராணுவ முகாம் பக்கம் போகாமல் இருப்பதற்கு. இரவு 11.30க்கு கிளாலி கரையைப் போய்ச் சேர்ந்தோம். கிளாலி கடற்கரையிலிருந்து மினிபஸ் நிற்கும் இடத்திற்கு ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் ட்ரக்டரில் போகவேண்டும். இதற்கு 50ரூபா தலைக்கு. மினிபஸ் நிற்கும் இடம் தென்னம் தோப்புகள் நிறைந்த இடம். கொத்து ரொட்டிக் கடைகள், தேநீர்க் கடைகள் என்பன இருந்தன. ஓர் வாடகைக் கார் பிடித்து ஆனைக் கோட்டையை வந்தடைய 2300 ரூபா செலவாகியது. சேர்ந்த நேரம் இரவு 2.30.

கொழும்பிலிருந்து தனிநபர் ஒருவர் யாழ்நகருக்கு தனது வீடு போய்ச் சேர 3500 ரூபா தேவை.

மறுநாள் யாழ்நகர் நோக்கி சைக்கிளில் போனேன். வீதிகள் எங்கும் குண்டும் குழியும் தான். மாவீரர்களின் கட்அவுட் எல்லா இடங்களிலும் காணப்பட்டன.

'சீதனத்தை ஒழிப்போம்'

'சாதியை ஒழிப்போம்'

'தமிழீழ வைப்பகத்தில் உங்கள் பணங்களை முதலீடு செய்யுங்கள்'

என்ற சுவரொட்டிகள் வீதிகள் தோறும் காணப்பட்டன. யாழ்நகரில் புதிய தமிழ்ப் பதங்கள், பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அகதி – இடம் பெயர்ந்தோர்
பேக்கரி – வெதுப்பகம்
கள்ளுத் தவறணை – மதுபானசாலை அல்லது சொர்க்கலயா
படம் பிறேம்போடும் இடம்– படமாடம்
ஹோட்டல் –உணவகம்
கிராமசேவகர் அலுவலகம் – சிற்றூர் அலுவலகம்
ஏ.ஜி.ஏ அலுவலகம் – பேரூர் அலுவலகம்
பஸ் – பேரூந்து
பிரிவு – கோட்டம்

முதலில் நான் கண்ட காட்சி வயது/பால் வேறுபாடின்றி கிழவன், கிழவி வரை சண்கிளாஸ், தொப்பியுடன் புடவை கட்டிக் கொண்டு சயிக்கிளில் 3–4 பேர் வரை பிரயாணம் செய்கின்றார்கள். மினிபஸ்ஸில் பெயின்ற் இல்லை. கண்ணாடிகள் இல்லை. தமிழீழப் பாடல்களே கடைகளிலும் வானொலியிலும் ஒலித்தன.

பேராசிரியர் துரைராசாவின் துக்கதினம் 3 நாட்கள் அனுஷ்டித்தார்கள். நீகல்– ஹரன் படமாளிகைகள், தபாற் கந்தோர், தொலைத்தொடர்பு நிலையம், நெற்சந்தைப் படுத்தும் சபை, ரயில் நிலையம், வீரசிங்கம் மண்டபம், யாழ் நூலகம், யாழ்பொலிஸ் நிலையம் என்பன கூரையின்றி இடிந்த கட்டிடங்களாக சிதறிக்கிடந்தன. லிடோ தியேட்டர், யாழ் பஸ்நிலையம் ஆகியன தரைமட்டம். யாழ் பஸ்நிலையத்தில் வேம்பு, ஆல் போன்ற மரங்களை நட்டு உண்டாக்குகிறார்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை முன்புபோல் அதே இடத்தில்தான். யாழ் கோட்டையில் பெரும்பகுதியைக் காணவில்லை கோட்டையை இடித்து கற்களை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள். கோட்டை அகழியினுள் இப்போது நீர் இல்லை. யாழ் ஆஸ்பத்திரி சுற்றாடலில் ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்துக்கு பாதுகாப்பு வலயம் என அறிவித்துள்ளார்கள். ஆனால் அங்கேயும் செல் வந்து விழுந்து வெடிக்கின்றன. யாழ் வைத்தியசாலைக்குள் போவோரின் பொதிகள், உடமைகளை பரிசோதித்தே உள்ளே அனுப்புகிறார்கள்– சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்ப்பாணத்தில் ஓர் முட்டை 6ரூபா, தேங்காய் 60ரூபா, உழுந்து 55ரூபா, அரிசி 30ரூபா, ம.எண்ணை 40ரூபா, 10 கிலோ பூவரசம்தடி விறகு 400ரூபா, 1 இறாத்தல் பாண் 8ரூபா, வடை 5ரூபா, பால்தேநீர் 10ரூபா. சராசரி ஆட்கூலி மாதம் 2000-2500 ரூபா. ஆசிரியர்கள் 4000 ரூபா சம்பளம் பெறுகின்றார்கள். யாழ் நகரில் புளி, மா, ஆல், அரசு போன்ற பெரிய நிழல்தரும் மரங்களைக் காண்பது அரிது. இப்போது மரநடுகை இயக்கம் ஆரம்பித்து, வீதிகள் தோறும் மரங்கள் நட்டு, பாடசாலை மாணவர்கள் தண்ணீர் ஊற்றுகின்றார்கள். ஒவ்வொரு பாடசாலைக் கட்டடத்திலும் காலையில் ஓர் பாடசாலை, மதியம் ஓர் பாடசாலை என இரண்டு பிரிவாக நடாத்துகின்றார்கள்.

மானிப்பாய் வைத்தியசாலைக்குப் போனேன். அங்கே சிதைந்த பல கட்டிடங்களைக் கண்டேன். இரவில் தாதிமார் டாக்டர்கள் அரிக்கன் லாம்புடன் பணியாற்றுவதை நேரில் பார்த்தேன். மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவிலில் நிறைய அகதிகள் இருக்கிறார்கள். வீதிகள் தோறும் கலர்கலராக நீலம், சிவப்பு போத்தல்களில் ம.எண்ணை விற்கிறார்கள். யாழ்நகரிலிருந்து 3 தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. ஈழநாதம், உதயன், ஈழநாடு என்பன. ஒரு பிரதியின் விலை 5ரூபா. ஐரோப்பாவில் வெளிவரும் பத்திரிகைச் செய்திகளை மறுபதிப்புச் செய்கிறார்கள். உள்ளூர்ச் செய்தி, வெளியூர்ச் செய்தி, கொழும்புச் செய்தி என எல்லாம் பிரசுரிக்கின்றார்கள். வீரகேசரி யாழ்நகரில் தாமதமாகவே கிடைக்கின்றன.

கோவில்களில் திருவிழா விடியவிடிய நடைபெறுகின்றது. இணுவில் கந்தசாமி கோவிலில் சாந்தன் என்பவரின் கோஷ்டி கானத்தை நேரடியாக கேட்கும் சந்தர்ப்பம் கிடைத்தன. பிரசங்கம், கூட்டம், தவில் கச்சேரிகள் யாவும் நடைபெற்றன. கோவில்களில் சினிமாப் பாட்டு பாடுவதில்லை. மாறாக பக்திப் பாட்டு, தத்துவப் பாடல்களையே சாந்தன் பாடினார். சீர்காழி கோவிந்தராஜன் போன்று குரல்வளம் பொருந்திய இவர், புலிகளின் இந்த மண் புலிகளின் சொந்த மண் என்ற பாடலைப் பாடி அமோக ரசிகர்களின் ஆதரவு பெற்றவர்.

யாழ், பூநகரித் தாக்குதல், ஆனையிறவுத் தாக்குதல் போன்றவற்றில் ஈடுபட்ட போராளிகள் பலர் இயக்கத்தைவிட்டு விலகுவதாக துண்டு கொடுத்தார்கள். துண்டு கொடுத்த பலர் தண்டனைக்குரிய கைதிகள் போல் பங்கர் வெட்டவும், யாழ் கோட்டையை இடிக்கவும், பண்ணை தோட்ட வேலைகளிலும் பயன்படுத்தப்படுகின்றார்கள்.

நேரடியாக ஒரு திருமண வைபவத்தைப் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. இயக்கத்திலுள்ள ஆணும் பெண்ணும் கோவிலுக்கு வந்தார்கள். வேட்டி, சால்வை, கூறைப் புடவை கட்டியிருந்தார்கள். கோவில் ஐயர் மந்திரம் சொல்ல... தாலி கட்டினார்கள். ஆனால் பவுண் தாலி அல்ல; ஒரு மஞ்சள் கயிற்றில் புலிச்சின்னம் பொறித்த காசு ஒன்றையே தாலியாகக் கட்டினார்கள். தாலிகட்டி முடிந்ததும் மணமக்கள் தமது இராணுவ சீருடைகளை அணிந்து... கோவிலை விட்டு இராணுவ வாகனங்களில் போனார்கள்.

சங்கானைப் பகுதியில் பண்டத்தரிப்பிலிருந்து இராணுவம் எந்நேரமும் வெளியேறலாம் என்ற அச்சத்தினால், பங்கர் வெட்டி வைத்து இருக்கிறார்கள்.

உங்கள் மகனோ மகளோ இயக்கத்தில் இருந்தால் அல்லது மாவீரர்களாக இருந்தால் (இறந்துவிட்டால்) அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு சுன்னாகம் முதல் தாண்டிக்குளம் வரை மினிபஸ், வள்ளம் போன்றவற்றில் முதலிடம். இலவச பாஸ் சலுகை கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ் நகர் மக்கள் கொழும்பு வருவது என்றால் 10,000 ரூபா பணம் கட்டி பாஸ் எடுக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டும், அல்லது ஒருவரை பிணையாக வைத்துவிட்டுத்தான் கொழும்பு போகலாம். பின் 3 மாத இடைவெளிக்குள் வந்து பிணை எடுக்க வேண்டும். பொறுப்பு நீக்க வேண்டும்.

நாங்கள் யாழ்நகர் போன மறுநாளே எமது பகுதி விதானையாரிடம் போய் ஒரு துண்டு (நாங்கள் வெளிநாடு வந்த ஆண்டைக் குறிப்பிட்டு, இன்ன ஆண்டிலிருந்து யாழ் நகரில் வசிக்கவில்லை என்று) வாங்கி அதை ஆரியகுளம் சந்தியில் உள்ள புலிகளின் அலுவகத்தில் சமர்ப்பித்து, அவர்கள் தரும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அதில் வெளிநாடு போய் எவ்வளவு காலம், வெளிநாட்டு முகவரி, உள்நாட்டு முகவரி, கொழும்பில் நிற்கப் போகும் முகவரி ஆகியவைகளுடன் வெளிநாட்டில் வேலைசெய்கிறீர்களா? என்ற கேள்விக்கும் விடை எழுதி படிவத்தைக் கொடுத்தால் பாஸ் ஒன்று தருவார்கள். அதைத் தாண்டிக் குளத்தில் கொடுத்துவிட்டுப் போகவேண்டும். அங்கு அறிவிப்புப் பலகை ஒன்றைக் கண்டேன். அதில்

"வெளிநாட்டிலிருந்து வரும் ஈழத்தமிழர்களிடம் மண்மீட்பு நிதி, அவசரகால நிதி போன்ற எதனையும் நாங்கள் அறவிடுவதில்லை"

என்று செய்தி எழுதப்பட்டிருந்தது.

அலுவகத்தில் எங்கு பார்த்தாலும் பிரபாகரனின் படம்.

யாழ் நகரில் ஸ்ரீதர் தியேட்டரில் மட்டும் மினிசினிமா ஒன்று. அதில் சின்ன விழிகள், தவளைப் பாய்ச்சல், காற்று வெளி, அத்துடன் ஆங்கிலப் படம் என்பன தினசரி மாலை 4.30 மணிமுதல் காண்பிக்கப்பட்டன. எதிர்வரும் அக்டோபர் மாதம் முதல் யாழ் நகரில் வசிக்கும் யாவரும் இந்தியத் திரைப்படங்கள், வீடியோ செற் வைத்திருந்தால் அவற்றை இயக்கத்திடம் ஒப்படைக்கும்படி 3 மாதகால அவகாசம் மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

புலிகளின் வானொலியில்

காலை 7 மணிமுதல் இரவு 8.30 மணிவரை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. சினிமா/டுயட் பாடல்களோ காதல் பாடல்களோ எதுவும் ஒலிபரப்பப்படுவதில்லை. செய்திகள், தத்துவப் பாடல்கள், நாடகங்கள், இயக்கப் பாடல்கள் மட்டுமே ஒலிபரப்பப்படுகின்றன.

யாழ்நகரில் வீடுகள், காணிகள் போன்றவற்றை விட்டுவிட்டு வெளிநாடு வந்த பலரின் வீடுகளில் இப்போது இயக்கப் போராளிகள் இருக்கின்றனர். இங்கு இடம்பெயர்ந்து வந்தோர்களும் இயக்கத்தினால் குடியமர்த்தப் பட்டுள்ளார்கள். இயக்கப் போராளிகள் இருக்கும் வீடுகளில் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்படுகின்றது.



வெளிநாட்டுப் பணம் இல்லையென்றால் யாழ்ப்பாணத்தில் அடுப்புப் புகையாது. அந்தளவு கஷ்டமான வாழ்க்கை. யாழ் மக்கள் வாய்பேச முடியாத மௌனிகளாக வாழ்கின்றார்கள். யாழ்பாணத்தில் வெப்பம் 40 பாகை. கண்நோய், மலேரியா போன்ற நோய்கள் நிலவுகின்றன. மக்கள் போசாக்கின்மை, கல்வி வசதிக் குறைவு, தொழில்வாய்ப்பின்மையை அனுபவிக்கிறார்கள்.

ஓர் சயிக்கிள் வண்டியின் விலை 9000 ரூபா, 1 பவுண் நகை 6500 ரூபா,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொழும்பில் ஓர் சேர்ட் 500 ரூபா, ரவுசர் 950 ரூபா, இட்லி 6.50, தோசை 5ரூபா, பால் தேநீர் 6ரூபா. ஒரு ஆள் மதியச் சாப்பாடு 35ரூபா, காலைச் சாப்பாடு 20ரூபா. இது கொழும்பு வாழ்க்கை.

10 நாட்களின் பின் மீண்டும் யாழ்நகரில் இருந்து புறப்பட வேண்டிய நாள். கிளாலிக் கடற்கரையை வந்தடைந்தோம். முன்பு ஆனையிறவிலிருந்து வெளியேறிய இராணுவம் கிளாலியில் தங்கிருந்த நாட்களில் செய்த கொடுமைகளை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. வள்ளங்கள், ஓலைக் குடிசைகள் பலநூறு எரிந்து சாம்பராக்கப்பட்டதின் எச்சங்களையும் காணமுடிந்தது. இரவு 7 மணி இருக்கும்.... 10000 பேர் மட்டில் இருந்திருப்பார்கள். ஹெலி ஒன்று பறந்து வந்து வட்டமிட்டது. பெற்றோமாக்ஸ் வெளிச்சம் அணைக்கப்பட்டது. நாங்கள் கடவுளை வேண்டியபடி.... சற்று நேரத்தில் ஹெலி போனபின்தான், போன உயிர் திரும்பி வந்தது.

வள்ளம் ஏறி.... பழையபடி ஆலங்கேணி... பின் அங்கிருந்து தாண்டிக்குளம். தாண்டிக்குளத்தில் பாஸைக் கொடுத்துவிட்டு.... மறுபடி புளொட் தடைமுகாம் அடைந்தோம். அங்கு மீண்டும் சோதனை. பின்பு பஸ்ஸில் ஏறி.. தாண்டிக்குளம் ரயில் நிலையத்துக்கு அப்பால் Brown Company கட்டிடத்தில் போய் பொதிகளை வைத்துவிட்டு, பாஸ் எடுக்க கியூவில் நின்றோம். புளொட் உறுப்பினர்கள் எங்களிடம் புலிகளுக்கு எவ்வளவு பணம் கொடுத்தீர்கள்?... என்று பல கேள்விகள். அவர்களிடமிருந்து 'தப்பி' 1 நாள் பாஸ் எடுத்துக் கொண்டு வவுனியா புகையிரத நிலையம் வந்தால்... அங்கேயும் பொலிசாரின் சோதனை. பொலிஸ் சோதனை முடிந்து ரயில் ஏறி கொழும்பு வந்தால்.... கொழும்பிலும் ஒரே நாளில் பல சோதனைகள்!

மொத்தத்தில் இலங்கைப் பிரயாணம் என்பது மெக்கா, திருப்பதி, சபரிமலை போன்ற இடங்களுக்குப் போவது போன்ற புனிதப் பயணம். கரணம் தப்பினால் மரணம். கடவுள்தான் யாழ்ப்பாணத்து மக்களுக்குக் கருணைகாட்ட வேண்டும்.

□□□

*நாங்கள் இலங்கை போகும் போது, ஜெர்மனியிலுள்ள பலர் சொன்னார்கள் – யாழ்ப்பாணத்தில் வேறு நாணயம், வவுனியாவில் வேறு நாணயம் என. திரும்பி வரும்போது ஈழத்தின் பணத்தை மாதிரிக்கு ஒன்று கொண்டு வாருங்கள் என்றார்கள். ஆனால் யாழ் நகரில் வேறு நாணயம் எதுவும் புழக்கத்தில் இல்லை.*

*இப்போது யாழ் நகரில் உள்ள சிறுவர் சிறுமிகள் கேட்கிறார்கள்– ரயில் என்றால் என்ன? என்ன நிறம்? எப்பிடி இருக்கும்? என்றெல்லாம். இன்னும் 5 வருடத்தில் அது ஓர் அதிசயமான பொருளாகவே இருக்கும்.*

*10–35 வயது இடைப்பட்டோர் யாழ்நகரை விட்டு வெளியேற முடியாத நிலைமை.*

*அரசாங்க தனியார் துறைகளில் ஏற்படும் வெற்றிடங்களில் கணவனை இழந்த விதவைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.*

*மின்சாரசபை ஊழியர்கள் தினமும் காலையில் மின்கம்பங்களில் இருக்கும் அரிக்கன் லாம்புகளை சிமிலி புகைதுடைத்து ம.எண்ணை விட்டுச் செல்வார்கள். மாலையானதும் விளக்கு ஏற்றிவைப்பார்கள்.*

*கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை நெல்லை தனியாருக்கு விற்க முடியாது. கூட்டுறவுக் கடைகளுக்கு விற்பனை செய்ய வேண்டும். கூட்டுறவுக் கடைகள் அரிசி கிலோ 30 ரூபாவிற்கு விற்பார்கள்.*

*கார்கள், மோட்டார் சைக்கிள் போன்றவற்றின் இலக்கத் தகடுகள் யாவும் தமிழ் ஈழம் என்ற சொல்லின் முதல் எழுத்துடன் இலக்கத்தைக் கொண்டுள்ளது. (த 1,2,3,...)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொழும்பில் இருக்கும் தமிழர்கள் சரி, சிங்களவர் சரி யாழ் மக்களின் துன்பத்தில் சூடுகாய (வர்த்த ரீதியாக பணம் திரட்ட) விரும்புகின்றார்கள். யாழ் மக்களுக்கு விமோசனம் அளிக்க யாரும் விரும்புகிறார்கள் இல்லை.

யாழ்ப்பாணம் கிட்டத்தட்ட நான்கு புறமும் கடல். அத்துடன் 70 ஆயிரம் படைகளின் சுற்றி வளைப்பு. இத்தனைக்கும் மத்தியில் யாழ் மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரே சாதனம் படகுச் சேவைதான். இந்தப் படகுச் சேவை இல்லை என்றால் மண்ணெண்ணை, டீசல், அரிசி, சீனி, வெங்காயம் போன்றவற்றை யாழ் மக்கள் பெறவே முடியாது. வாரத்தில் ஏழுநாட்கள் சேவை. செவ்வாய், புதன், சனி நாட்களில் பிரயாணிகள் படகுசேவை, ஏனைய நாட்களில் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றி இறக்கும் வேலை. இத்தனை சிரமத்திலும் உயிரைத் துச்சமென மதித்து, படகு சேவை நடாத்தும் புலிகளை பாராட்டாமல் இருக்கமுடியாது.

♦♦ ரமி–ஜெயா
(ஜேர்மனி)

## ஆழத்தின் அடித்தளத்தில்...

சிறைச்சாலைக்கும்மிருட்டின்
இருட்படல
ஆழத்தின்
அடித்தளத்தில்
எங்களை
குழிதோண்டிப்புதைக்க வேண்டும்
எதிரிக்கு...

மண்ணகத்தின்
கும்மிருட்டின்
இருட்படல
ஆழத்தின்
அடித்தளத்தில்
துலங்கும்
பொன்னுன்டு

அலைகடல்
கும்மிருட்டின்
இருட்படல
ஆழத்தின்
அடித்தளத்தில்
ஒளிரும்
முத்துண்டு

நாங்கள்
துன்புறுகிறோம்
துயருறுகிறோம்
எனில்
தாங்கிக் கொள்கிறோம்

சற்குணப்பண்பின்
ஆழத்தின்
அடித்தளத்தில்
சுடரும் பொன்னும்
இலங்கும்
முத்து பெறுவோம்

நீண்டநெடுநாள்
போராட்டம்
உருவாகும்.

தமிழ்வடிவம் : கு. இராமச்சந்திரன்
பிலப்பைன்ஸ் : ஜோசே மரியா சிஸ்ஸன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்த அதிகாரப் போட்டிக்குள் மனிதாபிமானம் எங்கே இருக்கிறது ?




இவர்கள் உடம்பில் எத்தனை எலும்புகள் என்று கணக்கிட்டு விடக்கூடிய தோற்றம். ஆயினும் தலையிலும் தோளிலும் முதுகிலும் பாரம் சுமந்து வரண்ட பாதைகளினூடு தமது பயணத்தை மறுபடி தொடங்கி விட்டனர்– இந்த ரூவாண்டா நாட்டு அகதிகள். ஆயிரக்கணக்கான குன்றுகளை இணைத்த ரூவாண்டா நாட்டு மலைப் பிரதேசத்தில் வீசியடித்த பேரினவாதப் புயலாலும் ஆயுத தர்பாராலும் அண்டை நாடான சைரில் நிம்மதியான வாழ்வைத் தேடி ஓடி வந்தார்கள், இந்த அகதிகள். வந்தபோதுதான் அறிந்து கொண்டார்கள்– தாம் வந்து சேர்ந்தது தவறான மோசமான இடம் என்று.

மேற்கின் தொலைக்காட்சிகள் சைர் நாட்டில் இருக்கும் ரூவாண்டா அகதிகளைப் படம் பிடிக்கிறது. ஆனால் சுதந்திரமான பத்திரிகையாளர்களின் பேனாக்களோ ரூவாண்டாவில் நிகழ்ந்த அவலங்களுக்கு, கொடுரங்களுக்குப் பொறுப்பானவர்களை, மூலகாரணமானவர்களை நம்முன் இழுத்துப் போட்டு விடுகிறார்கள். இருண்ட ரூவாண்டாவின் எதிர்காலம் பற்றிய கேள்வியை எழுப்பி நிற்கிறார்கள்.

**ரூவாண்டா**

கடந்த ஏப்ரல் மாதம் முதல் யூன் நடுப்பகுதிவரை ரூவாண்டா அரசுக்கும் ரூவாண்டா தேசபக்த விடுதலை முன்னணிக்கும் இடையே (டுசி சிறுபான்மை இனத்தவரின் தலைமைத்துவத்தைக் கொண்ட) நிகழ்ந்த போரினாலும் ஹீடு பேரினவாதிகளின் தாக்குதல்களினாலும் மாண்டவர்களின் எண்ணிக்கை 5 இலட்சம் என்றும், அண்டை நாடுகளில் அடைக்கலம் கோரியவர்களின் எண்ணிக்கை 3 இலட்சம் என்றும் செய்திகள் வெளிவந்தன. பிரெஞ்சுப்படை தலையீடு செய்த சமகாலத்துள் ரூவாண்டா தேசபக்த விடுதலை முன்னணி அரசுப்படைகளை முறியடித்து தலைநகர் கிகாலியை கைப்பற்றியதும், ரூவாண்டா இனமோதல் போர்க்களத்தில் நிலைமை புதிய பரிமாணம் பெற்றது. அதாவது இதுவரை பெரும்பான்மை ஹீடு பேரினவாதிகளுக்கு அஞ்சி சிறுபான்மை டுசி இனத்தவர்கள் தப்பியோடும் நிலைமை மாறி, இப்போ சிறுபான்மை டுசி இன அதிகாரத்துவத்தைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்ட தேசபக்த விடுதலை முன்னணியின் இராணுவ வன்முறைக்கு அஞ்சி பெரும்பான்மை ஹீடு இனத்தவர்கள் தப்பியோடத் தொடங்கியுள்ளனர். பிரெஞ்சுத் துருப்புக்கள் நாட்டின் தெற்குப் பகுதியை பாதுகாப்பு வலயமாக அறிவித்தும் இவர்கள் சைர் நாட்டை நோக்கியே படையெடுத்தனர். ஏற்கனவே அங்கிருந்த ரூவாண்டா அகதிகளோடு பிற்பாடு படையெடுத்தவர்களுமாய் தற்போது 5 இலட்சம் அகதிகள் சைரில் இருப்பதாக செய்தி நிறுவனங்கள் அறியத்தருகின்றன.

ஒழுங்காக ஒருபிடி உணவு இல்லை. உறங்குவதற்கு ஓர் இடம் சுத்தமாய் இல்லை. வீதியோரங்களில் வெட்ட வெளிகளில் சைர் விமான நிலையத்தின் (Goma வில்) ஒதுக்குப் புறங்களில் ஒரு நூறல்ல இலட்சத்துக்கும் மேலான அகதிகள் வாழ்வதென்றால் அந்த வாழ்வு எப்படி?

சிறுநீரும் மலமும், உறக்கமும் எல்லாம் ஒன்றாய் சங்கமிக்கும் அந்தப் பகுதி தொற்றுநோய்க் கிருமிகளின் உற்பத்தித்தளம். இதுவரையில் தொற்று நோய்களால் குறிப்பாக வாந்திபேதியாலும் 18 ஆயிரம் பேர் மாண்டு போனதாய்ச் செய்திகள். அந்த நாற்றத்தை அங்கிருக்கும் அகதிகளாலேயே சகிக்க முடியவில்லை. மூக்கை மட்டுமல்ல முகங்களையும் மூடியபடி வெளிச்சத்தைப் பார்க்காமலேயே இருக்க விரும்புகிறார்கள் இந்த அகதிகள். இது வார்த்தைகளில் சொல்லப்படக் கூடியதல்ல. நான் உணர்ப்பூர்வமாய் இந்த அகதிகளுக்கு உதவவே முன்வந்தேன். ஆயினும் இந்த மணத்தை எங்களால் தாங்க முடியவில்லை என்று வெதும்புகிறார் இத்தாலியைச் சேர்ந்த மருத்துவ தாதி ஒருவர்

எல்லாம் முடிந்த பின்பு இரட்சிக்க வருபவர்களாய் வந்தார்கள் - அவசர உதவிகளோடு, ஐ.நா மட்டுமல்ல அமெரிக்காவும்தான். உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், சுத்தமான நீர் விநியோகத்துக்கென விசேட அமெரிக்கத் துருப்புக்கள். அவசர உதவிகள் விநியோகத்தோடு இன்று அகதிகளை ரூவாண்டாவிற்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளிலும் ஐ.நா வும் அமெரிக்காவும் தீவிரமாய் இறங்கியாயிற்று. ரூவாண்டாவில் பாதிக்கப்படும் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் அவசர உதவி அளிப்பது என்ற போர்வையில் பிரான்சு தனது மேலாதிக்கத்தைத் தொடர்ந்தும் தக்கவைக்கும் நோக்கிலேயே ரூவாண்டாவில் இராணுவத் தலையீட்டைச் செய்தது. 73 இலிருந்து ரூவாண்டா பேரினவாதிகளின் அரசுக்கு இராணுவ பொருளாதார உதவிகளை வழங்கி வந்தது. 5 ஆயிரமாக இருந்த ரூவாண்டா இராணுவத்தின் எண்ணிக்கையை இரண்டு வருடத்திற்குள் 40 ஆயிரமாக பெருக்க வைத்தது. இந்தவகையில் ரூவாண்டாவில் நிகழ்ந்த சிறுபான்மை இனத்தவர் மீதான கொடூர நிகழ்வுகளுக்கு பிரெஞ்சு அரசும் பொறுப்பாளி. இவ்வளவு கொடூரங்கள் நிகழ்ந்ததிற்குப் பிற்பாடும் பிரெஞ்சு அரசு இராணுவத் தலையீட்டினூடாக தனது முன்னாள் செல்வாக்கைத் தொடர்ந்து பேணும் வகையில் ஒரு சமரச முயற்சியை செய்யலாம் என்றே எண்ணியிருக்க வேண்டும். ஆனால் தேசபக்த விடுதலை முன்னணி அரசைக் கைப்பற்றியவுடன் எல்லாம் தமது கைவிட்டு பறிபோகின்றது என்று உணர்ந்தவர்களாய் அகதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவ முயன்ற தமது நடவடிக்கையை ஐ.நா வை பாரம் எடுத்து செய்யும்படியும், தாம் வெளியேறப் போவதாகவும் இராணுவத் தலையீடு செய்த ஒரு வாரத்திற்குள்ளேயே அறிவிப்பு செய்தார்கள்.

சோமாலியாவில் அமெரிக்காவும் ஐ.நாவும் பெற்ற படிப்பினை ரூவாண்டா பிரச்சனையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைதி காக்க வைத்தது ஒரு காரணம். தவிர உலகில் இன்று மோசமாக அதிகரித்து வரும் அரசியல் பொருளாதார நிலைமைகள் எல்லாவற்றிற்கும் சனத்தொகைப் பெருக்கம் (மேற்கின் வார்த்தையில் சனத்தொகை குண்டு) ஒரு முக்கிய காரணம். இதை எந்த வகையிலோ அழித்து குறைப்பதினூடாக இன்றைய நெருக்கடி நிலைமைகளை சமாளிக்கலாம் என்பது இன்னொரு காரணம். குறிப்பாக மூன்றாம் உலக நாட்டிற்கான (ஏழை நாடுகளுக்கு) ஆயுத விற்பனையில் முன்னணியில் என்று ஓங்கி குரல் எழுப்பிப் பறப்பது.... இதுதான் இன்றைய புதிய உலக ஒழுங்குக் கொள்கை நமக்கு புகட்டும் பாடம்.

ரூவாண்டாவில் நிலவிய பிரெஞ்சு மேலாதிக்கத்தை முறியடித்து அமெரிக்கா தனது மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான போட்டியின் கைப்பொம்மையாய் ரூவாண்டா தேசபக்த விடுதலை முன்னணியை ஆட்டுவித்த உண்மையும் இப்போ கசியத் தொடங்கியுள்ளன. டுசி சிறுபான்மை இனத்தவர்களின்

**அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் ஆயுதங்களில் 73 வீதமானவை மூன்றாம் உலக நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1993ம் ஆண்டில் மூன்றாம் உலக நாடுகளுக்கு 14.8 மில்லியார்டர்கள் டொலர் பெறுமதியான ஆயுதங்களை பெறுமதியோடு ஒப்பிடும் போது 600 மில்லியன் அதிகமானதாகும். அமெரிக்காவின் முக்கிய ஆயுதக் கொள்வனவு வாடிக்கையாளரில் சவூதி அரேபியாவும் குவைத்தும் ஆகும். 1993 ம் ஆண்டில் பிரிட்டன் மூன்றாம் உலக நாடுகளுக்கு மொத்தமாக 14.8 மில்லயார்டன் பெறுமதியான ஆயுதங்களை விற்பனை செய்திருக்கிறது. ரஷ்யாவும் கிட்டதட்ட 14.8 மில்லியாடர்ன் பெறுமதியான ஆயுதங்களை விற்பனை செய்திருக்கிறது. ஜெர்மனி 600 மில்லியன் பெறுமதியான ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதினூடாக மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆயுதம் விற்பனை செய்யும் நாடுகளில் நான்காம் இடத்தை பெற்றுள்ளது.**

நின்று அமெரிக்கா அதிக வருமானம் ஈட்டுகின்றது. இரண்டாம் இடத்தில் பிரிட்டனும் முறையே மூன்றாம் நான்காம் இடத்தில் ரசியாவும் ஜேர்மனியும் வருமானம் பெறுகின்றன. இவர்கள்தான் பொஸ்னியாவில் மட்டுமல்ல, இன்றைய உலகம் முழுவதும் பிரச்சனையைத் தீர்க்கும் முக்கிய நடுவர்கள். இவர்களோடு பிரான்ஸ், ஜப்பான், சீனா போன்ற வல்லரசுகளையும் அவ்வப்போது இணைத்துக் கொள்வார்கள். பொஸ்னியா தொடங்கி ரூவாண்டா வரை அழிவுகளும் கொடூரங்களும் உச்சநிலையைத் தொடும்வரை அனுமதிப்பது, வெறும் பார்வையாளர்களாய் விவாதம் நடத்துவது, பின்பு மனிதாபிமானம், ஜனநாயகம், அவசர உதவி தலைமைத்துவத்தின் கீழ் உள்ள தேசபக்த விடுதலை முன்னணியின் இராணுவத்திற்கு உகண்டா அரசினூடாக இராணுவ பொருளாதார உதவிகளை வழங்கியிருக்கிறது. முன்னாள், இந்நாள் அமெரிக்க அதிபர்களின் விசுவாசத்திற்குரிய உகண்டா அதிபர் Yoweri Museveni இராணுவப் பயிற்சி பொருளாதார உதவிகளை வழங்கியதோடு மட்டுமன்றி அமெரிக்க இராணுவத்திடம் பயிற்சி பெற்ற தனது நாட்டு விசேட இராணுவக் கொமாண்டோக்களையே தேசபக்த விடுதலை முன்னணியின் முக்கிய பதவிகளில் அமர்த்தி சாமர்த்தியமாய் ரூவாண்டாவில் அமெரிக்க மேலாதிக்கத்தை நிறுவ சேவை செய்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றைய ரூவாண்டா: ரூவாண்டா தேசபக்த விடுதலை முன்னணி இன்று அரசு அமைத்திருக்கிறது.

நாட்டின் தென்பகுதி பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கே பிரெஞ்சு மற்றும் ஐ.நா முக்கிய பாதுகாவலர்களாய் நிலைகொண்டுள்ளார்கள். பிரெஞ்சுப்படை வெளியேறியவுடன் ஐநா வின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படும். பிரெஞ்சுப் படைகள் தலையீடு செய்தபோதும் தற்போதும் தேசபக்த விடுதலை முன்னணி விடும் கோரிக்கை– ஐ.நா படையோ, பிரெஞ்சுப் படையோ எமக்கு வேண்டாம். ரூவாண்டாவில் அமைதியைக் கொண்டுவரக்கூடிய வகையில் ஒரு ஆபிரிக்க நாடுகளின் சமாதானப் படையே தேவை. ஆயினும் இந்த ஆபிரிக்க நாடுகளின் சமாதானப் படையால் ரூவாண்டாவில் ஒரு நியாயமான அமைதியைக் கொண்டுவர முடியுமா என்பது ஒருபுறம் இருக்க, இந்த சமாதானப் படைக்கு நிதி உதவி செய்வது யார் என்பது பெரிய இழுபறி.

**சி.அமுதன்**

அமெரிக்காவும் ஐநா வும் சைரில் உள்ள அகதிகளை ரூவாண்டாவிற்குத் திருப்பி அனுப்பி குடியமர்த்தும் பிரயத்தனத்தில் இன்று ஈடுபட்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் 750 துருப்புக்களை அனுப்பிய அமெரிக்க அரசு தற்போது இத் தொகையை 4 ஆயிரத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது. இதில் 2 ஆயிரத்திற்கும் அதிகமானோர் தலைநகர் கிகாலியில் இராணுவ நெருக்கடி நிலைமைகளைத் தீர்க்க அனுப்பப்பட்டுள்ளார்களாம். (இவர்கள் செய்யப் போகும் முக்கிய பணி தற்போதைய அரச படைகளுக்குப் பயிற்சி அளிப்பதாகத்தான் இருக்கும்.)

மற்றும் பாதுகாப்பு வலயமான தென்பகுதியில் முன்னாள் அரச படைகளும் ஹீடு பேரினவாதிகளும் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள். இவர்களுக்கு தற்போது பிரெஞ்சுப் படை அளிக்கும் ஆதரவை பிற்பாடு ஐநா அளிக்கக்கூடும். ரூவாண்டா அகதிகளைப் பொறுத்தவரை, இந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழர்கள் திருப்பி அனுப்பப்பட்டதிலும் மோசமாய் எதுவித நம்பிக்கை அற்றவர்களாய் தாய்நாடு நோக்கி திரும்பி வருகின்றனர். இவர்களின் புனர்வாழ்வுக்கு மேற்கு நாடுகள் எல்லா விதத்திலும் உதவி செய்யும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக பெரும்பான்மை ஹீடு இன மக்களும் சிறுபான்மை டூசி இனத்தவர்களும் அன்றும் சகோதரர்களாய் வாழ்ந்தார்கள்; இனியும் வாழ்வார்கள் என்று செய்தி நிறுவனங்களின் பிரச்சாரம் தொடங்கியாயிற்று. இனி என்ன?

இன்றைய புதிய உலக ஒழுங்கில்.... சோமாலியா, பொஸ்னியா, ரூவாண்டாவிலும் பிரச்சனை தீர்த்தாயிற்று. அடுத்து, இன்னொரு ஏழை நாட்டின் பிரச்சனையில் ஐ.நா வும் பணக்கார நாடுகளும் இவற்றின் செய்தி நிறுவனங்களும் அக்கறை கொள்வதற்கு இடையே...

சுதந்திரப் பத்திரிகையாளர் ஒருவரின் கருத்தைக் கூறி முடிப்பது பொருத்தம். அது–

இந்த அதிகாரப் போட்டிக்குள் மனிதாபிமானம் எங்கே இருக்கிறது?


# சரிநிகர்

இலங்கையிலிருந்து இரண்டு கிழமைக்கு ஒருமுறை வெளிவரும் இதழ்.

***தொடர்புகட்கு :***

**சரிநிகர்**
**4, ஜெயரட்ண மாவத்தை**
**திம்பிரிகஸ்யாய**
**கொழும்பு – 5**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பல்லில் ஒட்டிய பொய்

—சோலைக்கிளி—

விடிவதற்கு முன்பாகவே
இன்று அவன் வந்தான்
ஓராயிரம் பொய்களையும், நம்பமுடியாத பல செய்திகளையும்,
என் அறைக்குள் இருந்து என்னுடன்
கொட்டினான்.
கேட்ட என் காது வழிந்து
நிலத்திலும் சிந்தி
கிடந்தன அவனது பொய்கள்.

பொய்யின் நிறத்தை
நான் அவனால்தான் அறிந்தது,
பச்சை!.
அவன் அடிக்கடி வந்து
கொட்டுகிற பொய்களுக்கு
நாற்றம் கூட உண்டு
கொடிய.

இன்று காலையிலே ஏன்வந்தான்
அவன்!
நான் விளக்காத பல்லில்
அவனின் சில பொய்கள் ஒட்டி
காய்ந்து போனதே, பச்சையாய்!

அவன் கக்குகின்ற பொய்யில்
உயிர் இருக்கும்.
ஆனால் சுவாசம் இருக்காது.
ஒவ்வொரு செய்திக்கும்
கையும் காலும்
அவ்விடத்தில் செய்வான்.
வாலும் வைப்பான்,
மூக்கையும் நீட்டிவைத்து.

இன்று அவன் சொன்ன ஒரு பொய்க்கு
நான்கு தலை.
பதினெட்டுக் கண்கள்.
வால் இருபத்திமூன்று.
கழுத்துகள் பதினாறு.

அந்தப் பொய்தான் எனது பற்களிலும்
கெட்டியாய் ஒட்டியது
யாவரும் இங்கு சமமென்ற பழைய
பெரும் பொய்யைப் போல,
நாற்றத்துடன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினருக்கு எதிரான ஒடுக்குமுறைகள் 1930 களில் A.E.குணசிங்காவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டு 1948ம் ஆண்டு பிரஜாவுரிமைச் சட்டங்களுடன் உச்சநிலையை அடைந்திருந்தன. ஆரம்பத்தில் மலையகத்திற்கு வெளியே வாழும் இந்திய வம்சாவழி மக்களுக்குஎதிராக தொடங்கி, சுதந்திரத்தைத் தொடர்ந்து அவை மலையகத்தில் காலூன்ற ஆரம்பித்தன. இவை எவ்வாறு மேலாதிக்கம் பெற்ற சக்தியாக அவர்களால் வளர முடியவில்லை.

இந்த நிலையில் வர்க்க நலன் கொழும்பு வாழ் வர்த்தகர்களாக இருந்தபோதும், மலையக மக்கள் மத்தியில் தேசியத்தை முன்னெடுத்த அமைப்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசே விளங்கியது. இதனால் பிரஜாவுரிமைச் சட்டங்கள் தொடர்பான பொறுப்புக்கள் ஏனைய அமைப்புக்களைவிட இதற்கே அதிகளவினதாக

# இ.தொ.கா வும் மலையக மக்களும் –7

– மலைமகன்

மேற்கொள்ளப்பட்டன, எந்த வகையில் அவர்களைப் பாதித்தன என்பன பற்றி முன்னரே பார்த்தோம். குறிப்பாக பிரஜாவுரிமைச் சட்டங்கள் எந்தவகையில் அவர்களைப் பாதித்தன என்றும் பார்த்தோம். இப் பிரஜாவுரிமைச் சட்டங்கள் தொடர்பாக இனவாத கட்சிகள், இடதுசாரிக் கட்சிகள், தமிழ்க் கட்சிகள் என்போருடைய பாத்திரம் எவ்வாறு இருந்தது என்பதையும் பார்த்தோம்.

எனது இத் தொடர் கட்டுரையின் நோக்கம் மலையக மக்களின் பிரச்சனைகளில் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எத்தகைய பாத்திரத்தை வகித்தது என்பதை ஆராய்வதே ஆகும். இந்த வகையில் குடியுரிமைச் சட்டங்கள் தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ன பாத்திரத்தை வகித்தது என்பதை விரிவாக ஆராயவேண்டியது அவசியமாகவுள்ளது. ஏனைய அமைப்புகளைப் பொறுத்தவரை மலையக மக்களின் பிரச்சனைகள் இரண்டாம்தரப் பிரச்சனையாக இருந்தது. அவர்களுடைய இருப்பும் அரசியல் தளமும் மலையக மக்கள் அல்ல. இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்தவரை வர்க்க ரீதியாக அவர்களின் தளமாக மலையக மக்கள் இருந்தபோதும் மலையமக்கள் எதிர்நோக்கிய பிரச்சனை தேசிய இனப் பிரச்சினையாக இருந்தமையால் மலையக மக்கள் மத்தியில் இருந்தது.

ஆனால் இப் பொறுப்புகள் தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எவ்வளவு தூரம் கடமையாற்றியது என்பது இங்கு கேள்விக்குரியதாகின்றது. இக் கால கட்டத்தில் இவர்களுடைய பலம் எவ்வாறு இருந்தது, இவர்கள் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும், நடமுறையில் என்ன நடவடிக்கைகளை எடுத்திருந்தார்கள் என்பதை ஆராய்வதன் மூலமே இதற்குப் பதில் அளிக்கக்கூடியதாக இருக்கும்.

## இ.தொ.கா. வின் பலம்

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இ.தொ.கா. தொழிற்சங்க பலத்தைப் பொறுத்தவரை, இலங்கையின் முதலாவது சக்தியாக இருந்தது. அதேவேளை இலங்கையின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் பலத்தைப் பொறுத்தவரையிலும் கூட முதலாவது சக்தியாக விளங்கியிருந்தது.

### *தொழிற்சங்க பலம்:*

இவர்களுடைய தொழிற்சங்கம் இலங்கையிலேயே மிகப்பெரிய தொழிற்சங்கமாக இருந்ததோடு ஆசியாவிலுள்ள தொழிற்சங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாவதாகவும் விளங்கியிருந்தது. ஆசியாவின் முதலாவது தொழிற் சங்கமான இந்தோனேசிய தொழிற்சங்கம் ஏழு லட்சம் அங்கத்தவர்ளைக் கொண்டது. 1940ம் ஆண்டு இவர்களுடைய தொழிற்சங்கம் உருவாக்கப் பட்டபோது அதில் 96,000 அங்கத்தவர்கள் இருந்தனர். 1950–1951 இல் இது 135,000 ஆக உயர்ந்தது. கீழ்க்காணும் அட்டவணை இதனை விளக்குகிறது.

இ.தொ.கா அங்கத்தவர் தொகை:

| வருடம் | அங்கத்தவர்தொகை |
|---|---|
| 1940 – 1941 | 96,000 |
| 1945 – 1946 | 108,000 |
| 1946 – 1947 | 117,000 |
| 1950 – 1951 | 135,000 |

ஆதாரம்: மக்கள் வங்கி அறிக்கை (1980)

இக் காலத்தில் இலங்கையின் சகல தொழிற்சங்கங்களிலும் அங்கம் வகித்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 235,000 ஆக மட்டுமே இருந்தது. இதன்படி பார்க்கின் இலங்கையின் மொத்த தொழிலாளர் படையில் 50 வீதம் இ.தொ.கா. வின் தொழிலாளர் படையாக இருந்தது. ஏனைய 50 வீதத்தில் மலையகத்தைச் சேர்ந்த இடதுசாரிக் கட்சிகளின் தொழிற்சங்க அங்கத்தவர்களும் இருந்தனர்.

இலங்கையின் ஏனைய தொழிற்சங்கங்கள் யாவும் அன்றைய காலகட்டத்தில் இடதுசாரிக் கட்சிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. இனவாதக் கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கங்கள் எதுவும் அன்றைய காலகட்டத்தில் வளர்ச்சியடைந்திருக்கவில்லை. இடதுசாரிக் கட்சிகள் மத்தியிலோ அன்றி அவர்களது தொழிற்சங்க உறுப்பினர்கள் மத்தியிலோ பேரினவாத சிந்தனை வளர்ச்சியடைந்திருக்கவும் இல்லை. இந் நிலையில் மலையகத் தொழிலாளர்கள் மேற்கொள்கின்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் எதற்கும் ஆதரவு கொடுக்கும் நிலையிலே அவர்கள் இருந்தனர். இதுவிடயத்தில் கட்சித் தலைமையின் ஆலோசனையைப் பெறாமல் கூட ஆதரவளிப்பதற்கு அவர்கள் தயாராகவே இருந்தனர். உதாரணமாக ஒரு சம்பவத்தைக் கூறலாம். பிரஜாவுரிமைச் சட்டம் தொடர்பாக இ.தொ.கா. கொழும்பில் சத்தியாக்கிரகத்தை ஒழுங்கு செய்தபோது அரசாங்கம் 11 பேருக்கு மேல் வீதிகளில் கூடக்கூடாது என சட்டம் பிறப்பித்தது. இந் நிலையில் கொழும்புத் துறைமுக தொழிலாளர்களின் சிங்கள கீழணித் தலைவர்கள் சட்டத்தை மீறி சத்தியாக்கிரகத்தை நடத்துங்கள், துறைமுகத் தொழிலாளர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றோம் என தாங்களாகவே வந்து இ.தொ.கா தலைவர்களிடம் கூறினர். அதற்கு அவர்கள் கூறிய பதில் நாம் அதுபற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றோம், தேவையானால் சொல்லி அனுப்புகின்றோம் என்பதாகும்.

இதைவிட இலங்கையின் பெரிய தொழிற்சங்கம் என்ற வகையிலும் ஆசியாவின் இரண்டாவது பெரிய தொழிற்சங்கமென்ற வகையிலும் இதற்கு சர்வதேச ரீதியான செல்வாக்கும் இருந்தது. இச் செல்வாக்கை தனது தொழிற்சங்க நடவடிக்கைகளில் பயன்படுத்தக் கூடிய நிலையும் இருந்தது.

இந்த வகையில் தொழிற்சங்க ரீதியாக மூன்று விதமான பலப்பிரயோகத்தினை செலுத்தக்கூடிய நிலையில் அன்று இ.தொ.கா. இருந்தது. ஒன்று தனது சொந்தப் பலம், இரண்டாவது ஏனைய தொழிற்சங்கங்களின் பலம், மூன்றாவது சர்வதேச ரீதியான தொழிற்சங்க பலம். இம் மூன்று வகையான பலத்தையும் பிரஜாவுரிமைப் பிரச்சனையில் இவர்கள் முழுமையாக பிரயோகித்தார்களா என்றால், இல்லை என்றே கூறவேண்டும்.

### பொருளாதாரத்தை தீர்மானிக்கும் பலம்:

சுதந்திரமடைந்த காலத்தில் இலங்கையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதாரத்தைத் தீர்மானிப்பவையாக இலங்கையின் பெருந்தோட்டத் துறையே விளங்கியது. இலங்கையின் அந்நிய செலவாணி வருமானத்தில் 90–95 வீதத்தினை பெருந்தோட்டத்துறையே ஈட்டித் தந்ததோடு, இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் 35–40 வீதத்தினை கொண்டதாகவும் அவை விளங்கின. இந் நிலையில் பெருந்தோட்ட உற்பத்தி முயற்சிகளை பாதிக்கச் செய்யும் எந்தவொரு முயற்சியும் அரசை நிலைகுலையச் செய்யக்கூடிய தன்மையைக் கொண்டிருந்தது. வாக்குரிமை பறிக்கப்பட்ட பின்னரும் கூட இ.தொ.கா. பிரதான அரசியல் சக்தியாக கருதப்படுவதற்கும் தொண்டமான் பிரதான அரசியல் தலைவராக கருதப்படுவதற்கும் இதுவே முக்கிய காரணமாக அமைந்திருந்தது. இது விடயத்தில் இப் பலத்தினை இ.தொ.கா. எந்தளவுக்கு பயன்படுத்தியது என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

இதைவிட சுதந்திரமடைந்த காலத்தில் ஆட்சியைப் பொறுப்பேற்றிருந்த ஐ.தே.கட்சித் தலைவர்களில் 80 வீதத்திற்கு மேற்பட்டோர் பெருந்தோட்டத் துறைக்குச் சொந்தக் காரர்களாகவே விளங்கினர். இவர்கள் ஒரு கட்டத்திற்கு அப்பால் பெருந்தோட்டத்துறையின் உற்பத்தி முயற்சிகள் வீழ்ச்சியடைவதை விரும்பமாட்டார்கள். இந் நிலையில் பெருந்தோட்டத்துறை விடயங்களில் ஒரு சமரசத்திற்கு வரவே விரும்புவார்கள். இந்த நிலையும் இவர்களுக்கு சார்பானதாகவே இருந்தது. இவர்களை விட பெருந்தோட்டத் துறையில் முதலிட்டிருந்த அந்நியக் கம்பனிகளும் கூட இப் பிரச்சனை பாரதூரமாக வருகின்றபோது தமது பொருளாதார நலனின் அடிப்படையிலாவது பிரச்சனையைத் தீர்க்குமாறு அரசுக்கு நிர்ப்பந்தத்தைக் கொடுத்திருப்பார்கள். இக் காலகட்டத்தில் பெருந்தோட்டத் துறையின் பெரும்பகுதி இவர்கள் வசம் இருந்தமை அதைச் சுலபப்படுத்தியிருக்கும். குறிப்பாக 1951ம் ஆண்டளவில் 70 சதவீதமான தேயிலைத் தோட்டங்களும் 42 சதவீதமான இறப்பர்த் தோட்டங்களும் 10 சதவீதமான தென்னந் தோட்டங்களும் இவர்கள் வசம் இருந்தது.

எனவே சுதந்திரமடைந்த காலத்தில் இ.தொ.கா.வின் தொழிற்சங்க பலம், பொருளாதாரத்தை தீர்மானிக்கும் பலம் என்பன முதலாம் தர சக்திவாய்ந்தவையாக இருந்தது. இப் பலங்கள் இலங்கையில் வேறு எந்த தேசிய இனங்களுக்கோ, உலகில் போராடும் வேறு எந்த மக்களுக்கோ இல்லாத பலம் என்றே கூறவேண்டும். இவற்றை விட அரசியற் பலம், நிதிப்பலம், போர்க்குணம் மிக்க மக்களின் பலம், புவியற் பலம் என்பனவும் இ.தொ.கா. விற்கு சாதமாக இருந்தது.

இவை எவ்வாறு இருந்தன என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

• • • • • • • • • • • • • • • • • • •

## எரிதல்

அன்று
தேவைகருதி
தெருவுக்கு வந்தோம்


இன்று
வீடிழந்து
வேதனை சுமந்து
வயிறும் வாழ்க்கையும்
பற்றியெரிய
வாழ்தலின்
உண்மைதேடி
நாட்களை
சபித்துக்கொண்டிருக்கிறோம்.

ரவிவர்மன்
(03.05.89)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சாதனையும் வேதனையும்

## 1969 யூலை 20.

மனிதன் சந்திரனில் காலடி வைத்தான். பூமியிலிருந்து எழுந்த ஒரு புதிய குரலாக இது ஒலித்துக் கொண்டது. உலகமே பரவசத்தில் ஆழ்ந்தது. யூலை 16ம் திகதி "அப்பலோ – 11" விண்வெளிக் கப்பல் ஒரு சாதனை யாளனுக்குரிய வீச்சுடன் பூமியை விட்டுக் கிளம்பி எல்லோரையும் தொலைக்காட்சிக்கு அருகிலோ வானொலிப் பெட்டிக்கு அருகிலோ நிற்க வைத்தபடி... தனது 952,700 மைல் தூரத்தை சந்தித்துக் கொண்டது. 4நாள் பயணம். வெற்றிச் செய்தி. ஆம்ஸ்ரோங் சந்திரனில் காலடி வைத்தான்.

"சந்திரனுக்கு எங்கை போறது? இவர்கள் இடையிலை போய்த் திரும்பி வந்திட்டு பொய் சொல்லுறாங்கள்" என்று ஒரு முதியவர் சொன்னதும்.....

"ஆம்ஸ்ரோங" சந்திரனிலை காலடி வைக்கயிக்கை, சந்திரனிலை கறுப்பாய்த் தெரிஞ்சது என்று நடுத்தர வயதானவர் ஒருவர் சொல்ல, நாமெல்லாம் சிரித்ததும்.... அதற்கு அவர் மளார் என்று எம்மில் ஒருவருக்கு கன்னத்தில் அறைந்ததும்.... அதோடு மட்டும் நின்று விடாமல் உற்றுப்பார்த்தால் தெரிஞ்சிருக்கும் என்று சொல்லி பரபரப்போடு நின்றதும்... எல்லாமே இலகுவாக ஞாபகத்துக்கு வந்து போகிறது. அந்தளவுக்கு எங்கு பார்த்தாலும் இதே பேச்சு....! இயற்கையின் இரகசியங்களை மனிதன் புரிந்து கொள்வதில் ஒரு பாய்ச்சல் அது என்பதால் இந்த மகிழ்ச்சிகரமான அதிர்ச்சியிலிருந்து மீள நாட்கள் பிடித்தன. விஞ்ஞான வளர்ச்சியின் ஒரு அசுரசாதனை அது!

1969 இல் வெற்றி கொள்ளப்பட்ட விண்வெளிப் பயணத்தை அடுத்து 1976 வரை மேலும் 4 பயணங்கள் வெற்றிகரமாக

**பாலமோகன்**

நிகழ்த்தப்பட்டன. இந்த வெற்றி அறிவியல் ரீதியிலும் தொழில் நுட்பவியல் ரீதியிலும் ஏற்படுத்திய சாதனைகளை விட, அது ஆன்மீக ரீதியில் ஏற்படுத்திய தாக்கம் வலிமையானது. மனித குலம் தனது சக்தியை மதிப்பிட்டுக் கொள்வதில் அது அசுரத்தனமாக வெளிப்பட்டுக் கொண்டது. தொடர்ந்தும் மற்றைய கிரகங்களை சென்றடையும் நம்பிக்கைகள் வலுப்பெற்றன; முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சூரிய மண்டலத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விஞ்ஞானம் தனது ஆராய்ச்சிகளை உலவ விட்டது.

"1969 யூலை 20ம் திகதி பூமியிலிருந்து வந்த மனிதர்கள் இங்கு முதல் முறையாக காலடி வைத்தார்கள்". என்ற செய்தியை சந்திரனில் (எழுத்துக்களில்) பொறித்து வைத்து விட்டு வந்த விஞ்ஞானம் சூரிய மண்டலத்தின் மற்றைய கிரகங்களையும் பார்த்துப் பேசும் முயற்சியினை ஆரம்பித்தது. மனிதர்கள் அற்ற விண்கலங்கள் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வேலையில் மூழ்கியுள்ளன. விரைவில் மனிதன் மற்றைய கிரகங்களையும் சென்றடைவான் என்ற நம்பிக்கையை இந்த 25 ஆண்டுகளும் விதைத்துள்ளதை மறுப்பதற்கில்லை.

இயற்கையின் இரகசியங்களை கட்டவிழ்ப்பதில் விஞ்ஞானம் ஆற்றும் பணி மனித குலத்தை அறிவு பூர்வமாகவும் ஆன்மீக ரீதியிலும் முன் தள்ளிக் கொண்டு செல்கிறது. காற்று, தீ, இடிமுழக்கம், மழை.... என்றெல்லாம் இயற்கையின் அனர்த்தனங்களுக்கு திகைத்தவன் ஆதி மனிதன். அவன் இயற்கையின் முன்னே நிர்க்கதியாக விடப்பட்டவன். காலவோட்டத்தில் படிப்படியாக இயற்கையின் இந்த இரகசியங்களையெல்லாம் அறிந்துகொண்டு.... அதன் அனர்த்தங்கலிருந்து தப்புவதற்கு மட்டுமல்ல அதை தனது முன்னேற்றத்திற்கானதாக மாற்றியமைத்துக் கொள்ளவும் கற்றுக் கொண்டான். இந் நடவடிக்கையின் மூலம் இயற்கையின் ஒரு அம்சமாகிய மனிதன் (இன்னொரு அம்சமாகிய) மிருகங்கலிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டான். அதாவது மிருகங்களோ இயற்கையின் மற்றைய அம்சங்களுக்கு ஏற்பவே தம்மைத் தகவமைத்து வாழ்ந்துகொண்டன. மனிதனோ அதைப் (இயற்கையை) புரிந்து கொண்டு தனக்கு சாதகமாக அதை வடிவமைக்கும் நடைமுறையில் முன்னேறிக் கொண்டான். (இந்த நடைமுறையே "உழைப்பாக" பரிணமித்தது) இயற்கையை வெற்றி கொள்ள ஆரம்பித்தான். இயற்கையின் முன்னே நிர்க்கதியாக திகைத்து நின்றதிலிருந்து அவன் விடுபட எடுத்த முயற்சி களிலிருந்து விஞ்ஞானம் பிறந்து வளர்ந்தது.

மனித குலத்தின் இந்த முன்னேற்றத்தை மறைத்து எல்லாம் இறைவன் போட்ட பிச்சை என்று கூறும் மதவாதிகள் ஒவ்வொரு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளையும் வெறும் தர்க்கத்தால் (கருத்தியலால்) முந்தும் ஓட்டப் போட்டியில் வரிந்து கட்டிக் கொண்டு ஓடுகிறார்கள். இயற்கையின் சக்தியை "இறைவனின் சக்தியாக" திருடிக்கொள்ளும் இவர்கள், "சூரியனை நிற்பாட்ட முடியுமா"? பூமியை சுழலாமல் தடுக்க முடியுமா? (இதையும் விஞ்ஞானம் தான் கண்டு பிடித்தது என்பதை மறந்து விடுவார்கள்) என்றெல்லாம் குதர்க்கமாகக் கேள்வி கேட்டு "மடக்கும்" வேலையில் "சந்திரனுக்குப் போகமுடியுமா?" என்ற கேள்வியை மெல்ல விட்டுவிட்டார்கள். நரகம், மோட்சம் என்றெல்லாம் கதைவிட்டுக் கொண்டிருக்கும் மதவாதிகளுக்கு அதன் "புனிதத்தில்" மண்விழுந்தது போல் விண்வெளிப்பயணம் அமைந்தது. பதை பதைத்துப் போய் இது கடவுளுக்கு விரோதமான செயல் என்று விண்வெளிப் பயணத்தை திருச்சபைகளே எதிர்த்தது என்ற உண்மையை விளங்கிக் கொள்ள அதிக நேரம் தேவையில்லை. இவர்களின் எதிர்ப்பையும் "சாபத்தையும்" மீறி விண்வெளிப் பயணம் வெற்றியில் முடிந்தது.

இந்த இயற்கை விஞ்ஞானம் மனிதகுல முன்னேற்றத்துக்கானதாக இருக்கும் வரை (கண்மூடித்தனமாக எதிர்க்கும் மதவாதிகள் போலன்றி) எந்த மனிதனும் பெருமைப் பட்டேயாக வேண்டும். அதேநேரம் இயற்கை மனிதனுக்கு விடும் சவால்களை அது எதிர்கொள்ள வேண்டிய நிலையில் தொடர்ந்தும் உள்ளது. இந்த சவால்களைக் கண்டறிவது, மதிப்பிடுவது, அழிவுகளைத் தடுத்து நிறுத்துவது அல்லது அதிலிருந்து தப்புவது... என்ற பெரும் சுமைகளுடன் இன்னும் பல படிகள் அது ஏறவேண்டியிருக்கிறது. இந்த வருட யூலை மாத நடுப்பகுதியில் வியாழன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிரகத்தில் நடந்த ஸூமேக்கர்–லேவி–9 இன் (வால்வெள்ளியொன்றின் 21 சிதறல்களினதும்) மோதல்கள் இந்த எச்சரிக்கையை அழுத்திச் சொல்லியிருக்கிறது. இந்த மோதல் பற்றி 2 வருடத்துக்கு முன்னரே விஞ்ஞானிகள் கண்டறிந்ததும் மதிப்பிட்டதும் கணிசமானளவு வெற்றியளித்துள்ளது. இந்தச் சிதறல்களின் வியாழன் மீதான இராட்சத மோதல் "ரோசீமாவை விழுங்கிய அணுகுண்டைவிட ஒரு பில்லியன் மடங்கு சக்திவாய்ந்ததாகவும் 50,000 பாகை வெப்பத்தைக் கக்கியதாகவும் கணிப்பிடுகிறார்கள். தாக்குண்ட பகுதி பூமியின் விட்டத்தைவிடவும் பெரிதாக உள்ளதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறான ஒரு தாக்குதலுக்கு பூமி இரையாகினால் எப்படி இருக்கும்? என்று ஏங்கும் மனிதனுக்கு பதில்தர வேண்டிய கட்டாயம் விஞ்ஞானத்துக்கு உள்ளது.

இயற்கையின் முன்னே நிர்க்கதியாய் நின்ற மனிதனை அதை வெற்றி கொள்ள கைப்பிடித்து இழுத்து வந்தது இயற்கை விஞ்ஞானம். சமூகத்தின் முன்னே நிர்க்கதியாய் நின்றவனை அதன் இரகசியங்களை வெளிச்சமிட்டு வெற்றி கொள்ளும் வழியையும் காட்டியது சமூக விஞ்ஞானம் (மாக்சிய விஞ்ஞானம்). இந்தப் பரீட்சார்த்த வழிமுறையின் தீப்பொறியாய் தோன்றிய சோவியத் யூனியனின் " சோசலிச" (?) ஆட்சிக்காலம் அது. விண்வெளிப் பயணத்திலும் "விஞ்ஞானப் போட்டி" போட்டார்கள் – அமெரிக்காவும் சோவியத் யூனியனும். "கம்யூனிசம் ஒரு பேய்" என்று பூச்சாண்டி காட்டி வெருட்டிய அமெரிக்காவும், அமெரிக்காவிடமிருந்து தன்னைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறிய "வழிதவறிப்போன" சோவியத் யூனியனும் நட்சத்திரப்போர் நடவடிக்கைகளில் விண்வெளி விஞ்ஞான அறிவைக் கொட்டினார்கள். மனித குலம் மன்னிக்காத இந்த நடவடிக்கைக்கு விஞ்ஞானிகள் மண்டையை கசக்கிப் பிழிந்தார்கள்.

இயற்கையை அறிந்து கொள்ளவும் அதை மனிதகுல முன்னேற்றத்திற்கு பயன்படுத்தவும் என உயிர்ப்புக் கொண்ட விஞ்ஞானம் இயற்கையை அறிந்து கொள்வதும் அதை தமது ஆதிக்க நோக்கத்திற்கு சாதகமாக்குவதும் என அடித்து உரு மாற்றப்பட்டது. இந்த முயற்சிக்கு இயற்கை இடையூறாக இருந்தால் அதை அழித்து விடும் "விஞ்ஞானத்துவக் கொலை" யையும் செய்யத் தயங்குவதில்லை – மனிதகுல விரோதிகள். நிலத்திலிருந்து.... ஓசோன் படைவரை பாதிப்புக்கள் தொடர்கின்றன. கடலில் அணுக்கழிவுகள் கப்பல் கப்பலாகக் கொட்டப்படுகின்றன. விண்வெளியிலோ நட்சத்திரப் போர்த் தயாரிப்புக்கள் நடந்தேறுகின்றன. 4500 க்கு மேற்பட்ட ஏவுகணை எதிர்ப்புக் கருவிகள், உளவு பார்க்கும் செயற்கைக் கோள்கள்... என்றெல்லாம் பலதும் விண்வெளியில் விடப்பட்டிருக்கின்றன. ஆண்டுதோறும் பில்லியன் கணக்கான டொலர்கள் அவற்றுக்குத் தீனியாக வீசப்படுகின்றன. உலகின் 40 வீதத்துக்கு மேற்பட்ட விஞ்ஞானிகள் ஆயுதசம்பந்தமான கண்டுபிடிப்புக்களில் மூழ்கியிருக்கிறார்கள். யுத்தங்கள் மலிந்து, பஞ்சம், பட்டினி, நோய் எல்லாமே மனிதவெளிகளில் காலடிவைக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படியே உலகு இயங்கிக்கொண்டிருக்க.... விண்வெளிப் பயணத்தின் 25 வது ஆண்டை அமெரிக்க அரசு சாதனைப் பெருமிதத்துடன் கொண்டாடியது. தொலைக்காட்சியில் எந்த Channel ஐ திருப்பினாலும் இதே செய்தி..... இதே காட்சி. ஆம்ஸ்ரோங் திரும்பத் திரும்ப சந்திரனில் காலடிவைத்துக் கொண்டே இருந்தார்.

ருவண்டா – இந்தக் "கிரகத்தில்" மனிதர்கள் மாண்டு கொண்டிருந்தனர். சாவு... அகதிவாழ்வு..... பஞ்சம்... பட்டினி... போதாததிற்கு "கொலரா" தாக்கி ஆயிரக்கணக்கானோர் மேலும் மாண்டு கொண்டிருந்தனர். பசித்த வயிற்றுக்கும், போகும் உயிருக்கும் உதவி செய்வதை விளம்பரம் தின்று கொண்டிருந்ததேயொழிய உருப்படியாக எதுவுமில்லை. மனிதச் சருகுகள் உதிர்ந்த அந்த வெயில் காட்டில் கையில் ஒரு குழந்தையின் பிணத்தை தாங்கியபடி பிணங்கள் ஏற்றும் லாரியை நோக்கி காலடி வைத்துக் கொண்டிருந்தான் அவன். தொலைக்காட்சி நிருபரிடம் ஓரிரு வார்த்தைகள் மட்டும் பேச முடிந்த அவன் கண்கள் பனிக்க லாரியை நெருங்குகிறான்.

"இங்கே சனம் செத்துக் கொண்டிருக்கிறது". அதைவிட வேறென்ன உனக்குப் பெரிதாகப்பட்டுவிட்டது? என்று கத்தினான் – தனது மற்றைய உதவியாள் ஒருவனை நோக்கி. வியர்த்துக் கொட்ட அவனே பஞ்சத்தில் வாடுபவன் போல் இருந்த அந்த (வெள்ளை நிற) இளைஞனின் அந்தக் கத்தல் உலகம் முழுதுக்குமென்ன விண்வெளிக்கும் கேட்கட்டும்!

> **"இங்கே சனம் செத்துக்கொண்டிருக்கிறது. அதைவிட வேறென்ன உனக்குப் பெரிதாகப்பட்டுவிட்டது."**

◆◆◆

## அருமை மகனுக்கு முதல் கடிதம்....!

எம் உளம் கனிந்த வாழ்த்துக்கள், மகனே!

பங்குனி மாதத்தில் பகல் வழி போறவனை பார்த்திருப்பவன் பாவலாளி

எம் நாட்டு பங்குனி மாத வெயில் கொடுமையை இவ்வாறு சொல்வார்கள் மக்கள். அந்தளவு வெயில் புகுந்த நாட்டிலும் ஆடிமாதம் கொட்டிக் கொண்டிருந்தது. கருவறையுள் வாழ்ந்த காலம் முடிவுக்கு வர.... நீயும் அகதிகளில் புதியவனாய் புது நாட்டில் 24.7.1994 அன்று.

குழந்தையே! உன் பிறப்பிற்கு முன்பே உன் விபரத்தை எழுதித் தரும்படி ஒரு பத்திரம் எமக்குத் தரப்பட்டது. அதில் நாடு, மொழி, பெயர் என அவசியமான கேள்விகள் இருந்தன. அத்தோடு மதம் பற்றியும் கேட்கப்பட்டிருந்தது. மதம் பற்றிய கேள்வியில் நான் நியாயத்தைத் தேடிப் பார்த்தேன், அது எதைச் சாதித்திருந்தது என்ற அடிப்படையில்.....!.

இந்து இரத்தம் இந்தியாவில் இரத்தமானதே, புத்த தர்மம் இலங்கையில் புதைகுழியானதே வரலாறு.

அம்மாவின் கருவறையினுள் வாழும் உன்மீது புவிக் காற்றுக் கூடப் படவில்லை. அதற்குள் குழந்தையே! நீ என்ன மதம் என்று முடிவெடுப்பது, அல்லது அப்படி முடிவிற்கு வருவது எந்த வகையில் நியாயம்? மதங்கள் சொல்லும் அந்தக் கடவுள்கள் அம்மாவின் கருவறையினுள் இருந்து அசரீரீ ஒலி எழுப்பியிருக்க வேண்டும் – நீ இந்த மதம் தான் என்று! அல்லது கடவுளரின் அருளால் நீ பிறந்தவுடன் பேசியிருக்க வேண்டும் – உன் மதம் பற்றி! அப்படியெனில் அதன்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுதிவிடுவது ஜனநாயக உரிமையும் கூட. அப்படி அதிசயம் எதுவும் இல்லாதபோது, நீ இந்த மதம் தான் என முத்திரை குத்தப்படுவது எப்படி நியாயம்?

இது ஒரு ஜனநாயக இம்சை அல்லவா, மகனே!

மகனே! நீ வளர்... பெரியவனாகு.... மதம் பற்றி அறிந்து கொள்..... அதன் வரலாறு எப்படி வியாபித்தது? போதனைகள்.... அதன் சார்புகள்... யாருக்காக உழைக்கின்றன? என்பவற்றை யெல்லாம் பார். அதன் பிறகு நீ முடிவிற்கு வா – மதங்கள் பற்றி. அது நியாயமும் ஆகும்.

நீ பிறப்பதற்கு முன்னரே நண்பர்கள், உறவினர்கள் எண்சாத்திரக் கணக்குப் பார்த்து ஏதோவெல்லாம் பேசத் தொடங்கினார்கள். இவர்கள் பேசிக் கொள்வது எனக்கொன்றும் ஆச்சரியமாக இருக்கவில்லை.

மகனே! உன் தகப்பன் சார்ந்திருந்த நிறுவனத்தைச் சேர்ந்த உச்சியில் இருந்தவர்களில் பலர் –இவர்கள் புரட்சிக் கருத்துச் சொன்னவர்கள் – சாதாரண மக்கள் போலவே எண் சாத்திரக் கணக்குப் பார்த்தார்கள். ஏதோ... அதை விஞ்ஞானம் என்றார்கள். சிலரது கையில் எண்சாத்திரப் புத்தகத்தைப் பார்த்த ஞாபகம் இப்போதும் மறக்க முடியாத ஒன்று. அவர்களை நினைத்து அடிக்கடி சுத்த முட்டாள்கள் என எனக்குள் சிரித்துக் கொள்ளவே முடிகிறது.

மகனே! நீ பெரியவனாகி.... உன்னிடம் யாராவது நம்பர் பற்றிக் கேட்டால் சுத்த முட்டாள்கள் என உறுதியாகச் சொல்! பிறந்த ஒரு மனிதனை சமூகத்தின் வாழ்க்கைக்கான சூழல்தான் நெறிப்படுத்துகிறது என்ற உண்மையைப் புரிந்து கொள்!

அடுத்ததாக உன் அப்பாவின் நண்பர்கள் நீ பிறந்ததின் முப்பத்தொண்டு செய்வது பற்றியும் என்னோடு பேசினார்கள். நான் பிறந்த காலத்திலும் எனக்கும் உனது அப்பப்பா முப்பத்தொண்டு செய்திருப்பார் என நிச்சயமாகச் சொல்லலாம். ஏனெனில் அப்படிச் செய்யாதபோது வீட்டில் தரித்திரம் பிடித்து விடும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்திருக்கும். இப்படி மூடத்தனமான கருத்துக்கள் மிகச் சாதுரியமாக மக்களிடம் பரப்பப்பட்டிருக்கிறது.

மகனே! முப்பத்தொண்டு என்றால், துடக்குக் கழித்து விடுவது. சமயச் சடங்கு இதைத்தான் முக்கியமாகச் சொல்கிறது. அது இங்கு எம்மவர்களிடம் ஒரு வரவிற்கான புதிய ஏற்பாடும்கூட என்பதும் ஒரு கசப்பான உண்மையாகும்.

உன் போன்ற குழந்தைகள் பிறப்பது துடக்காம். அதை விலக்க ஐயர்மார் வீடு தொடங்கி முற்றம் வரை தீர்த்தம் தெளிப்பார்கள். நீ பத்து மாதம் கிடந்த கருவறைக்கு எதைத் தெளித்து கழுவுவார்கள் இந்தப் பிராமணர்கள். இச் சடங்கு முறையெல்லாம் பிராமணப் பாரம்பரியத்தின் பிழைப்பிற்கான மோசடிகள் நிறைந்த ஏற்பாடுகள் என்பதுதான் நல்ல அறிவில் கிடைக்கும் விடை மகனே!

முற்போக்கான கருத்துக்கள் பரவுவதற்கான சுதந்திரம் பல வழிகளில் முடக்கப்பட்டுக் கிடக்கும் பூமி இது.

நீ பிறந்து ஒரு வாரம் என்றாலும் வளர்ந்தவுடன் உன் அறிவுத் தேடலுக்கான ஆரம்பமாகவே இக் கடிதம். உலகத்தில் எந்தத் தகப்பனாவது பிறந்த குழந்தைக்குக் கடிதம் எழுதியிருப்பானோ தெரியாது.

இயந்திரப் பற்களோடு நாம் என கவிதை வடித்த அரவிந்தனின் வரிகளோடு.....

வன்மமும் நிறைந்த பூமி இது, மகனே!

விடை பெறுகிறேன்.

– உன் அப்பா
நாகதிலகன்.
(சூரிச்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்புள்ள அம்மா!

– இளைய அப்துல்லா

உன் மடிமீது
சம்மாணங் கொட்டி
அளைந்து விளையாடிய
மண்
எங்கேயம்மா ?

பாதி கருகிய
முண்டம் போல தான
பிரேதம் போல
ஊனம் வடிக்கும்
மானுடம் பற்றிய
கதை யென்னம்மா ?

அம்மா !
நிலா வெறிக்கும்
எங்கள் வெள்ளை
மணலில்
"பனம் பழம் விழுந்த"
திடுக்கம் கலந்து
ஓடி ஓடி
பொறுக்கி எடுத்த
காலங்கள் எங்கேயம்மா
தொலைந்து போயின?

அழுத என்னை
அள்ளி எடுத்து
இடுப்பில் இடுக்கி
" காகம்" காட்டி
அண்ணார்ந்து பார்த்த
ஆலமரமும்
அந்த திரிசூலமும்

ஒரே வரும் அணில் குஞ்சும்
எங்கேயம்மா?

என் கண்ணீர் துடைத்து
தன் மடி மீது வைத்து
பயம் விலக்கி
பாசம் காட்டிய
பெரிய மச்சாள்
துவக்கோடு போனவள்
ஏனம்மா வரவில்லை ?

தீயாய் விளாசி
எரியும் காடு போல்
அடிக்கடி எங்கள்
தேசத்தின் மீது
என்னம்மா நெருப்பு?

பந்தம் கொளுத்தும்
தேவர்கள் பற்றிய
கதைகளை நீ அன்றைய
இரவுகளில் கூறுவாயே,
அதன் உண்மை
வடிவமாம்மா இது?

ஓடி உறங்கும்
இரவுகள் தொலைந்த
பாடி இறைக்கும்
கிணறுகள் தூர்ந்த
என் தாய் மண்
மீதான
எதிர்காலம்......?
பற்றிய
ஏக்கம் மட்டும்
என்னோடு சேர்ந்து
அகதியாய் உறங்கும்.

அம்மா !
இன்னொரு முறை
உந்தன் மடியில்....
சக்கப்பணிய
என் தாய் மண்ணிண் மீது
என் வயதை மீறிய
அன்புடன் ஓடி...
ஆசைப்பட்டு நுங்கு குடித்து
பின்னர்
' குருவிச்சை' ஆற்றங்கரையில்
' கனகாம்பரம்'
பறித்து
அம்மா...
எப்போதம்மா..
என் தாயே
இவையெல்லாம்
எப்போது என்று
ஒரு முறைசொல்!
என் இதயம் குளிர்ந்து
ஒரே ஒரு முறை
சந்தோஷிப்பதற்கு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆடி
V
ஆவணி

1994

VVV

இரு மாதத்துக்கு
ஒருமுறை
வெளிவரும் இதழ்

## தேர்தல்!

சிறீலங்காவின் பத்தாவது நாடாளுமன்றத் தேர்தல் 16.8.94 நடைபெற்ற தேர்தல் முடிவைத் தொடர்ந்து பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்துள்ளது.
சந்திரிகா குமாரணதுங்கா பிரதமராகப் பதவியேற்றுள்ளார். புதிய தலைமுறையைச் சேர்ந்த ஒருவர் அதிகாரத்திற்கு வந்துள்ளமை இத் தேர்தலில் நிகழ்ந்துள்ள பெரிய மாற்றம் எனக் கூறலாம். இத்தேர்தல் ஜனநாயக முறைப்படி நிகழ்ந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ள போதிலும் இது கேள்விக்குரியதே! குறிப்பாக வடபிரதேசத் தேர்தல் முடிவுகள் நாட்டின் ஒருபகுதி மக்களை துண்டறுத்த நிலைமையை வெளிக்காட்டியுள்ளது. கேலிக்குரிய யாழ் மாவட்டத் தேர்தல் முடிவுகள் பற்றிப் பேசாதவர்கள் இருக்க முடியாது.

இராணுவக் கட்டுபாட்டில் உள்ள பிரதேசங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கை 6500 ஆக உள்ள போது, சுமார் 10,700 க்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று ஈ.பி.டி.பி சார்பில் 9 உறுப்பினர்கள் தேர்வாகியுள்ளனர். அதிலும் உடுப்பிட்டி, மானிப்பாய், நல்லூர் போன்ற தொகுதிகளில் முறையே 5,8,9 என்று வாக்குகளின் எண்ணிக்கை விரல் விட்டெண்ணக் கூடியவைகளாகவே உள்ளன. சரி, தேர்தல் நியாயமாகத்தான் நிகழ்ந்துள்ளது என்று எடுத்துக் கொண்டாலும் கூட யாழ்மாவட்டத்தில் மொத்த வாக்காளர் எண்ணிக்கை, 5 இலட்சத்து 56ஆயிரத்து 30தாக உள்ள போது வாக்களித்தோர் எண்ணிக்கை 13,445 ஆகும். இது 40.1 பங்கு வாக்குகளுக்கு குறைவாகவே உள்ளது. இது மொத்த வாக்குகளின் இரண்டரை வீதம் மட்டுமே. வெளிநாடு சென்றவர் இறந்தவர்கள் என்று தவித்துப் பார்த்தால் கூட 75 வீதமானவர்கள் வாக்களிப்பில் பங்கெடுக்காத போது இவர்கள் எந்த வகை ஜனநாயக முறையில் தேர்வாகியுள்ளனர் என்பதை நோக்கும் போது ஜனநாயகம் கேலிக்குரியதாகிறது.

வவுனியா மாவட்டத்தில் கூட நிலமை இதுதான் மொத்த வாக்குகள் 1லட்சத்து 79 ஆயிரத்து 193 ஆக உள்ள போது வாக்களிக்கப்பட்டவை 39690 ஆகும். இதுவும் 25 வீத வாக்குகளுக்குக் குறைவானதே. யூலை இனப்படுகொலையின் 11வது ஆண்டு முடிந்த போதும் அதன் வடுக்கள் மறைந்து விடவில்லை. ஆனால் தமிழ் குழுக்களோ இவற்றை மறந்து இன்னும் இனவாதத்தையே தமது ஆயுதமாகக் கொண்டிருக்கும் யூ.என்.பி அரசுடன் இணைந்து அதன் அனுசரனையுடன் தேர்தலில் முன்னின்றுள்ளன என்றால் இவர்களை எப்போ மக்கள் மன்னிப்பாரோ?

கூட்டணி ஏனையவர்களைப் பார்த்து வாசிக்கத் தெரியாதவர்கள், கதைக்கத் தெரியாதவர்கள், படிக்காதவர்கள்

www.tamilarangam.net

என்று தமது புத்திஜீவித் திமிர்த்தனத்தை வெளிப்படுத்தும் களமாக தேர்தல் மேடைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட வண்ணம் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் 90 ஆக இருந்த மந்திரிசபை நாலில் ஒரு பங்காக 23 குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மந்திரிசபை நிர்வாகத்திற்கு என்று செலவிடப்பட்ட பெரும்பகுதிப் பணத்தை மீதப்படுத்தவும் வாய்புண்டு. வேலையற்றிருக்கும் இளைஞர்கள், யுவதிகளுக்கு மாதம் 1500 ரூபா உதவிப்பணம் 3மாத காலத்தில் கிடைக்கவழி செய்வதாகவும் புதிய பிரதமர் உறுதியளித்துள்ளார். இளைஞர்களின் கிளர்ச்சி உணர்வலையை தடுக்கும் நோக்கில் உலவங்கியும் இதற்கு உடன்பாடு தெரிவித்திருக்கலாம். ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவது பற்றிய கருத்துக்கு அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலில் டிசம்பர் தமக்கு 51 வீதம் வாக்குகள் கிடைக்கும் பட்சத்தில் அதையும் நடைமுறைப்படுத்த முடியும் என்று கூறியுள்ளார். அல்லது சர்வஜனவாக்கெடுப்பில் பெரும்பான்மை மக்களின் விருப்பைப் பொறுத்தும் ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குவதற்கு வாய்புண்டு என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகின்றது.



இப்படியாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாகுறுதிகளில் பலவற்றை நடமுறைப்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் புதிய அரசுக்கு கிட்டக் கூடியதாக இருந்த போதும் " இனப்பிரச்சனைக்கான தீர்வு என்ற அம்சத்திலேயே சந்திரிகா குமாரணதுங்காவினதும், பொதுஜன ஐக்கிய முன்னனியனதும்" அரசியல் சாணக்கியத்தைக் கண்டு கொள்ள முடியும்.

புதிய அரசு வெளிநாட்டு அமைச்சராக தமிழர் ஒருவரை லக்ஷ்மன் கதிர்காமர் நியமித்துள்ளனர். இது உலக அரங்கில் வெளிநாட்டமைச்சராக இருப்பவர் தமிழர் என்று கூறி ஈழத்தமிழர் பிரச்சனைகளை நலினப்படுத்துவதற் கான தந்திரோபயம் என்றே பார்க்க வேண்டும்

ஆண்டாண்டு காலமாக மாறிமாறிவரும் சிங்கள அரசுகள் தமிழர் பிரச்சனையில் நழுவல் போக்கையும், எதிர்நடவடிக்கைப் போக்கையும் கடைப்பிடித்துள்ளன என்ற போதும் வந்திருக்கும் புதிய அரசையும் அதே வட்டத்திற்குள் அடக்கிவிடலாமா என்பது பற்றி சற்று ஆழமாகவே சிந்திக்க வேண்டியுள்ளது. புதிய அரசு அதிகாரத்திற்கு வந்துள்ள இன்றைய காலகட்டத்தில் உலக அரசியல் நிலைமைகள், தமிழர் பக்கத்தில் உள்ள வலிமைகள், ஆயுதப் போராட்டத்தில் உள்ள வெற்றிகள், இதனால் ஏற்கனவே இருந்த அரசுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், பொருளாதார வீழ்ச்சிகள், உயிர்ச் சேதங்கள், போன்ற பல அம்சங்களையும்


***சந்தா விபரம் :***

தனிப்பிரதி : 3 SFr
வருட சந்தா : 22 SFr

**ஐரோப்பிய நாடுகளிற்கு ....**
-25 SFr

***Postcheck Konto :***
30-37152-1
Manitham

***Bank Konto :***
Schweizerische
Kreditanstalt
3001 BERN
Nr- 220348-70

**இலங்கை, இந்தியா**
-இலவசம்

www.tamilarangam.net

கணக்கில் எடுத்துப் பார்ப்போமேயானால் இவை அனைத்திலிருந்தும் மீள்வு வேண்டும்' என்பதே பெரும்பான்மையான சிங்கள இனத்தினதும் அபிலாசையும் கூட. இந் நிலைமையில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள சந்திரிகா குமாரணதுங்கவோ பொதுஜன ஐக்கிய முன்னனியோ, அன்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ எதுவாக இருப்பினும் தமது இருப்பை தங்கவைப்பதற்காகவேனும் இனத்துவப் பிரச்சனைகளுக்கான தீர்வை முன்வைத்தாக வேண்டும். தமது இருப்பைப் பேணுவதற்கு முழுமையாக இனவாதப் போக்கை கையில் எடுப்பதில் அர்த்தமில்லை என்பதற்கு ''தாய் மண்ணின் மைந்தர்கள் கட்சி மக்கள் ஐக்கிய முன்னனி போன்ற பச்சை இனவாக் கமட்சிகளுக்குக கிடைத்த வாக்குகளும் ஒரு உறுப்பினரைக் கூட தெரிவு செய்ய முடியாமல் போன நிலைமைக்கு இறுதிவரை " தமிழர்களுக்குப் பிரச்சனையில்லை பயங்கரவாதம்தான் பிரச்சனை என்று கூறிக் கொண்டு இனவாதத்தைக் கக்கிய ஐக்கிய தேசியக் கட்சி தோற்கடிக்கப்பட்டமை ஆகிய அனைத்தும் தக்க சாட்சியங்கள் ஆகும்.

இந் நிலைமைகளில் இனத்துவப் பிரச்சனைக்கான தீர்வில் ஐக்கிய தேசிய கட்சி அரசியலிருந்து வேறுபட்ட போக்குகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும் நிர்பத்தமும் புதிய அரசுக்கு உண்டு என்ற போதும் இதனை எந்தளவில் இந்த அரசு கடைப்பிடிக்குமோ......?

அரசு நீட்டியுள்ள நேசக்கரத்திற்கு விடுதலை புலிகள் சமிக்சை காட்டும் வரை வட -கிழக்குப் பகுதிகளில் பாரிய அளவில் இராணுவத் தாக்குதல் எதுவும் இடம் பெறாது என்று புதிய அரசின் பிரதிபாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி எதுவும் கூறவில்லை. சிவபூசையில் கரடி புகுந்திருப்பதைப் போல் ஐ.தே.கட்சியை சேர்ந்த டிங்கிரி பண்டா விஜதுங்கா ஜனாதிபதியாகவும், பாதுகாப்பு அமைச்சராகவும், அமைச்சரவைத் தலைவராகவும் இருப்பது புதிய அரசுக்கு பலவித பின்னடைவுகளை உண்டுபண்ன வாய்புண்டு அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலிலும் ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவரே மீண்டும் ஜனாதிபதியாக வரும் பட்சத்தில் ஜனாதிபதிக்கும், மந்திரி சபைக்கும் இடையிலான இழுபறிகளினால் பொதுஜன ஐக்கிய முன்னனி அரசு பெரும் இடைஞ்சலுக்குள்ளாவதை கண்டுகொள்ள முடியும்.

பொருளாதார கொள்கைகளைப் பொறுத்தவரை வந்திருக்கும் புதிய அரசிடமிருந்து பெரிய மாற்றங்கள் எதையும் எதிர்பார்க்க முடியாது. உலக வங்கினதும், உலக நிதி நிறுவனத் ஐ.எம்.எ:ப் தினதும் கட்டுப்பாட்டை மீறி பெரியளவிலான தொழிற்துறை முயற்சிகள் எதனையும் புதிய அரசோ இனிவரும் அரசுகளோ மேற்கோள்ளப் போதில்லை என்று உறுதியாக் கூறலாம்.

புதிய அரசுக்கும் இந்தியாவுக்குமிடையிலான உறவு மேலும் நெருக்கமடைய வாய்பிருந்த போதும் இந்திய இராணுவத்தை மீளக் கொண்டு வரும் விடயத்தில் நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் 1917 ஜே.வி.பி கிளர்ச்சியின் போது இந்திய கூர்க்காப் படைகளை அழைத்த பெருமை புதிய அரசியல் பெரும்பாண்மை அங்கம் வகிக்கும் லங்கா சுதந்திரக் கட்சியின் பரம்பரைக்கு உண்டு என்பதையும் இக் கட்டத்தில் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த சில காலமாக உலக அரசியல் அரங்கில் எதிர்வு கூறுவது என்பது அரசியல் அவதானிகளுக்கு சவாலுக்குரிய சாரம்சமாகவே மாறியுள்ளமையை காணமுடிகிறது. சிறிலங்காவின் நிலைமைமட்டும் இதற்கு வேறுபட்டதல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தேர்தல் முடிந்த சில மாதங்களில் யாழ்ப்பாணம் சென்று புலிகளுடன் பேசுவேன்" என்று தேர்தலுக்கு முன்பு கூறிய சந்திரிகாவின் உறுதிமொழியில் தளர்வு ஏற்பட்டுள்ளது. இருந்த போதும் தென்னாபிரிக்கா,பாலஸ்தீனம் போன்ற நாடுகளின் வழியில் 'இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணலாம்" என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். சந்திரிகா ஏற்கனவே கூறியது போன்று நிபந்தனையற்ற முறையில் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு முன்வருவாரானால் பேச்சுவார்தை என்ற மட்டத்தில் புலிகளும் பச்சைக் கொடி காட்டலாம். ஆனால் புலிகளின் கோரிக்கைகளுக்கு அரசு இணைவதோ, அரசின் வேண்டுதல்களை புலிகள் ஏற்பதோ என்பதில் இழுபறிதான் .........

யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை, புலிகள் பல அம்சங்களிலும் தமது இருக்கையை ஸ்திரப்படுத்தியுள்ளதுடன் ஆயதரீதியிலும் பலம் பொருந்தி தமது மேலாதிக்கத்தின் கீழ் ஒருவகை அரசு வடிவம் பெற்றுள்ள இன்றைய நிலையில் தனிநாடு தவிர்ந்த எந்தத் தீர்விற்கும் உடன்பாடு தெரிவிப்பார்களா என்பதை நீண்ட நாட்கள் பொறுந்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு அரசுகளும் ஆட்சிக்கு வருகின்ற ஆரம்பத்தில் உலக அரங்கில், இன ஐக்கியத்திற்குகான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுவது போன்று வெளிக்காட்டுவதும் ராணுவத்தாக்குதல்களை சிலகாலம் நிறுத்திவைப்பதும் காலம்காலமாக நாம் கண்டுவரும் நிகழ்வுகள்தாம். ஆனால் இவையனைத்தும் உலக அரங்கில் நன்மதிப்பை பெற்று கடன் தொகைகளைப் பெற்றுக் கொள்ளும் வரையில் தான்...........




மேலே காணப்படுவது சுவிசில் வெளிவந்த ஒரு பத்திரிகையின் முகப்புத் தோற்றம். பத்திரிகை என்றவுடன் வாரப் பத்திரிகையா, மாத இதழா, அன்றி காலாண்டு இதழா என்று கேள்விகளை எழுப்பி மண்டையைக் குழப்ப வேண்டாம்.

சுவிஸ்சில் நடந்த நண்பர் ஒருவரின் திருமண வைபவத்தில் விநியோகிக்கப்பட்டது தான் இந்த கல்யாண முரசு பத்திரிகை. திருமண வைபவங்கள் பல பணப்பைகளையோ அல்லது பவுன் நகைகளையோ பெற்றுக் கொள்வதற்கான வியாபாரக் கொண்டாட்டங்களாக மாற்றப்படுகின்ற நிலையில் இத்தகைய கொடுப்பனவுகளை விரும்பாத நண்பர்கள் மேற்கொள்ளக் கூடிய புதிய வழிமுறை ஒன்றை அறிமுகம் செய்துள்ளார். நண்பர் தேவனின் கூட்டு முயற்சியாகவே தனிப்பட்ட முறையிலோ இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவது திருமணத் தம்பதிகளுக்கும் திருமண விழாவுக்கு வருகை தருவோருக்கும் பயன்கொடுக்கும்.

முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இப்பத்திரிகை 12 பக்கங்களையும் கொண்டுள்ளது. சில அறிவுரைகள், வாழ்த்துக்கள், வாழ்த்துக் கவிதைகள், சினிமா, இராசிபலன், மணமக்களுடன் நண்பர்கள் சேர்ந்திருக்கும் புகைப்படம் உட்பட சில நகச்சுவைகளும் இதன் உள்ளடக்கமாகும். ஆனால் இத்தகைய முயற்சிகளில் பாலியல் பிரச்சனைகள், குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரச்சனைகள், குழந்தை வளர்ப்பு, வைத்தியப் பிரச்சனைகள் போன்ற மணமக்களுக்கும் பயன் தரும் விசயங்களையும் உள்ளடக்குவது பத்திரிகை சிறப்புற வழிவகுக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உளவியல் பார்வையில் நாசிசம் – 2

## Psychology of Nazism

**நாசிசத்தை உளவியல் அடிப்படையில் விளக்க முனையும் இக் கட்டுரை இன்றைய நிலைமைகளை இன்னொரு பரிமாணத்தில் விளங்கிக் கொள்ள உதவும்.**



*(சென்ற இதழில் இக் கட்டுரைத் தொடரின் கடைசிப் பந்தி)*

அத்துடன் சமயத்தின் ஆளுமை, பாரம்பரிய ஒழுக்க நெறிகள் என்பனவும் இவ் வர்க்கத்தில் ஆழமாக வேரூன்றியவை. குடும்பம் என்ற கட்டமைப்பு இன்னும் குலையாத நிலை. எதிர்ப்புகள் காட்டும் வெளியுலகத்தில் நின்று அமைதியுடன் அடைக்கலம் புகுந்து கொள்ள வெகு பொருத்தமான குடையாக குடும்பம் தொழிற்பட்டு வந்தது. தனிமனிதனொருவன் தான் ஓர் நிலையான சமூக, கலாச்சாராத்தின் அங்கத்தவன் என்ற எண்ணமும், இதில் தனக்கு குறிப்பிட்ட இடமுண்டு என்ற எண்ணமும் அவனை ஆட்கொண்டிருந்தது. நடைமுறையில் இருக்கும் அதிகாரத்திற்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்ளல், அதற்கு உண்மையாக இருத்தல் என்பன தன்னைத்தானே ஒறுக்கும் இம் மனிதனுக்கு எளிதான காரியமே. ஆயினும் தன்னை முற்றும் முழுவதுமாக அர்ப்பணிக்காது தனது தனித்தன்மையைச் சிறிது பாதுகாத்து அதில் பெருமையும் கொள்பவன் அவன்.

**(சென்ற இதழ்த் தொடர்ச்சி)**

1918 ஜேர்மன் புரட்சிக்கு முந்திய காலத்திலேயே நடுத்தர வர்க்கத்தின் கீழ்மட்டத்தின் சரிவு நிகழத் தொடங்கிவிட்டது. ஆயினும் இந்தச் சரிவு பெரிய பாதிப்பை ஏற்படுத்தாதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஏனெனில் இவ் வர்க்கத்தினை நிலைநிறுத்தும், முட்டுக்கொடுக்கும், காரணிகளும் இங்கே காணப்பட்டன. முடியாட்சியின் அதிகாரம் யாராலுமே எதிர்க்கமுடியாததொன்றாக இருந்தது. இதனுடன் தங்களை இனம் கண்டு கொண்டும் இதனுடன் சார்ந்துமிருந்த நடுத்தர கீழ்த்தட்டு வர்க்கம் தங்களைப் பாதுகாப்பானவர்களாகவே கண்டு கொண்டது.

சுருக்கமாக இவனது பொருளாதார நிலைமை சுயநம்பிக்கையையும் பாதுகாப்பு உணர்வையும் கொடுக்கக் கூடியளவிற்கு உறுதியானதாகவிருந்தது. தனிமனிதனாகப் பெறமுடியாத பாதுகாப்பு உணர்வினையும் நிச்சயத் தன்மையையும் இவன் சார்ந்திருந்த ஆளும் அமைப்பின் மூலமும் உறுதிப்படுத்தக்கூடியதாக இருந்தது.

போருக்குப் பிந்திய காலங்கள் இந் நிலைமையில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்களைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு வந்தன. முதலாவதாக 'பழைய நடுத்தர வர்க்கத்தினரின்' பொருளாதார வீழ்ச்சி ஈடுகொடுக்க முடியாத அளவிற்கு வேகமாகச் சரிவு கண்டது. இந்தச் சரிவு பணவீக்கத்தினால் மேன்மேலும் தீவிரமாகி, 1923 இல் முற்றும் முழுவதுமாக இவ் வர்க்கத்தின் பல வருடச் சேமிப்பைக் கூடக் கரைத்து விட்டது.

1924–1928 கால இடைவெளியில் நடுத்தர வர்க்கத்தின் கீழ்த்தட்டு மக்கள் பொருளாதார ரீதியில் சில முன்னேற்றங்களையும் புதிய நம்பிக்கையையும் பெற்றிருந்தும், 1929 இன் பொருளாதாரப் பெருவீழ்ச்சியானது எல்லாவற்றையுமே இல்லாது ஒழித்துவிட்டது. பணவீக்கக் காலகட்டத்தில் நடுத்தர வர்க்கத் தொழிலாளருக்கும் மேல்தட்டு மக்களுக்கும் இடையில் சிக்குண்டு எந்தவித பாதுகாப்புமில்லாத சமூகத் தட்டாக நசுக்கப்பட்ட படியால், இவர்களது இழப்பும் வேதனையும் மற்றையவர்களை விட அதிகமாகவே இருந்தது.

இந்தப் பொருளாதாரக் காரணிகளை விட உளவியல் தளக்காரணிகளும் நிலைமையை மோசம்பெறச் செய்தன. போரின் தோல்வியும் முடியரசின் வீழ்ச்சியும் ஒரு காரணம். ஏனெனில் அரச குடும்ப ஆட்சிமுறை–அதன் அரசு என்ற தளத்தினிலேயே குட்டி பூர்சுவாக்கள் தங்கள் வாழ்க்கையை உளவியல் பூர்வமாக இனங் கண்டிருந்தார்கள். எனவே இந்த வீழ்ச்சி, அரச குடும்பங்களின் சக்தியற்ற நிலை என்பன இவனது வாழ்க்கைத் தளத்தையே ஆட்டங் காணச் செய்துவிட்டது. முடிக்குரிய அரசனை வெளிப்படையாகவே கேலிசெய்யக் கூடுமாயின், அதிகாரிகள் தாக்கப்படக் கூடுமாயின், நாடு தன்னை மாற்றிக் கொண்டு 'சிவப்புக் கலகக்காரர்களை' மந்திரிகளாக ஏற்க வேண்டுமாயின், குதிரைக்குச் சேணங் கட்டுபவன் பிரதமராக வர முடியுமாயின்.... இந்தச் சிறிய மனிதன் யாரை நம்புவது. இவனோ அரச குடும்பம்–அதன் அரசு போன்ற அமைப்புக்களை எந்தவித மறுகேள்வியுமில்லாமல் பக்தி விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டிருந்தவன். இவைகளெல்லாம் இப்போது குலைந்து போயின. இவன் எங்கே போவான்?

பணவீக்கமும் பொருளாதார ரீதியாக மாத்திரமல்லாது உளவியல் ரீதியாகவும் தாக்கங்களைக் கொண்டு வந்தது. சேமித்து பணம் சேர்க்கும் கொள்கைக்கும் நாட்டின் அரசின் ஆளுமைச் சக்திக்கும் பெரிய அடியாக விழுந்தது. ஒருவனது பல வருடகாலச் சேமிப்பு –அதுவும் சிறுகச் சிறுக பல சிறிய சிறிய மகிழ்வுகளைக் கூடத் தியாகம் பண்ணிச் சேமித்த சேமிப்பு– அவனது பிழையில்லாமல் அவனது கை நழுவிப் போகுமாயின், சேமிப்பதில்தான் என்ன லாபம்? அரசு தனது வாக்குறுதிகளை – பணத்தினில், கடன் பத்திரங்களில் பதிப்பித்து இருந்த தனது வாக்குறுதிகளை– முறித்துக் கொண்டு விட்டது இப்போது யாரை நம்புவது?

இவ் வர்க்கத்தின் பொருளாதார நிலைமை மாத்திரமன்று இதன் சமூக அந்தஸ்தும் போரின் பின் வீழ்ச்சி கண்டது. போரின் முந்தைய காலத்தில் ஒருவன் தன்னைத் தொழிலாளியிலும் பார்க்க ஒரு வகையில் மேன்மையானவனாகக் கணித்துக் கொள்ளக் கூடியதாகவும் அவ் உணர்வினைத் தன்னுள் வைத்திருக்கக் கூடியதாகவுமிருந்தது. புரட்சிக்குப் பின் தொழிலாளர் வர்க்கத்தின் சமூக அந்தஸ்து குறிப்பிடத்தக்களவு உயர்ந்தது. அதேவேளையில் நடுத்தர வர்க்கத்தின் கீழ்மட்டச் சமூகத்தின் சமூக அந்தஸ்து குறிப்படத்தக்களவு கீழிறங்கியதும் உண்மை. சமூகத் தட்டில் எனக்கு கீழே இவன் என்று பார்த்துக் கொள்ள யாருமில்லாமல் போனார்கள். இதுவே ஒரு காலத்தில் சிறிய கடை வியாபாரிகள் போன்றோரின் விசேட சமூக உரிமையாக இருந்தது.

இவைகள் அனைத்தும், மற்றும் நடுத்தர வர்க்கத்தின் மிக முக்கியமான குடும்பம் என்ற பிடியும் சின்னாபின்னப்பட்டுப் போயிற்று. போருக்குப் பிந்திய காலத்தில் எந்த நாட்டையும்விட ஜெர்மனியில் நடுத்தர வர்க்கத்தின் ஒழுக்க மதிப்பீடு, குடும்பத் தலைவனின் அதிகாரம் என்பவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டதெனக் கொள்ளலாம். இளைய தலைமுறையினர் தங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விருப்பத்திற்கு ஏற்ப நடந்து கொண்டனர். முன்னரைப் போல் தாய் தந்தையரின் விருப்பு வெறுப்புக்களைக் கவனத்தில் கொள்ளவில்லை. இதற்கான காரணங்கள் பலவாகவும் சிக்கலானதாகவும் இருப்பதால் அதனை இங்கு நான் விவாதிக்க விரும்பவில்லை. ஆயினும் சில காரணங்களை இங்கு தருகிறேன். பழைய சமூக அதிகாரக் குறியீடுகளான அரசு-முடியாட்சி முறை என்பவற்றின் வீழ்ச்சி தனிப்பட்ட முறையில் குடும்பத்தின் அதிகாரிகளான தாய் தந்தையர்களையும் பாதித்தது. பெற்றோர்களால் எந்த அதிகாரங்களை -அதாவது முடியாட்சி அரசு போன்றவற்றை- மதிக்க கற்பிக்கப் பட்டார்களோ, அதுவே பலமிழந்து போன பின் பெற்றோர்களும் தங்களது அதிகாரத்தையும், கௌரவத்தையும் இழந்து போயினர். இன்னுமொரு காரணியாக, பணவீக்கப் பொருளாதாரச் சீர்குலைவால் திகைத்து நிலைகுலைந்து செய்வதறியாது நின்ற பழைய தலைமுறையினரிலும் பார்க்க, புத்திக் கூர்மையுடைய புதிய தலைமுறையினர் தங்களை நிலைமைக்கேற்ப இயல்பாக்கிக் கொண்டனர். இவ்வாறாகப் புதிய தலைமுறையினர் பழைய தலைமுறையினரின் மீதான பார்வையை மீளமைத்து, உயர்வு மனப்பான்மையைத் தங்களுக்குள் தக்கவைத்துக் கொண்ட பழைய தலைமுறையினரின் படிப்பினைகளைப் பெரிதாக மதிப்பதற்கு முனையவில்லை. இவற்றிற்கெல்லாம் சிகரமாகப் பொருளாதாரச் சீர்குலைவு பழைய தலைமுறையினரைத் தங்கள் குழந்தைகளின் பொருளாதார எதிர்காலத்தின் பாதுகாவலர்கள் என்ற நிலைமையை இல்லாதொழித்து விட்டது.

பழைய தலைமுறையின் மத்தியதர வர்க்கக் கீழ்த்தட்டு கசப்பானவர்களாகவும் சிடுசிடுப் பானவர்களாகவும் மாறினர். ஆயினும் இவர்களது உணர்வுகளைப் போல் தீவிரமானவர்களாக அல்லாமல், அடங்கியவர்களாகவே இருந்தனர். இளைய தலைமுறையினரோ செயற்பாடு களுக்காகத் துடித்துக் கொண்டிருந்தனர். தங்கள் தாய் தந்தையரைப் போன்ற வாழ்நிலையின் பொருளாதார நிலைமையும் இல்லாது போன பின்பு என்ன செய்யலாம் என்ற கேள்வி குடையத் தொடங்கியது. தொழில்முறைக் கல்வியின் பின்னான வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பங்களும் பெரிதாக இல்லை. ஓர் வழக்கறிஞனாகவோ, வைத்தியனாகவோ ஆவதும் அவ்வளவு சுலபமாக இல்லை. போரில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் -குறிப்பாக பல இளைய இராணுவ அதிகாரிகள்- பல வருடங்களாகவே கட்டளையிடும் அதிகாரத்தைக் கொண்டிருந்தவர்கள், தங்கள் ஆளுமையை நிலைநாட்டிப் பழகியவர்கள் தங்களை மீளமைத்துக் கொண்டு எழுதுவினைஞர் களாகவோ, விற்பனைப் பிரதிநிதிகளாகவோ வர விரும்பவில்லை.

தீவிரமான சமூகக் காழ்ப்புணர்வு நிலை அதிகரிப்பானது வடிகாலைத் தேட.... அதுவே சோசலிசத்தின் (National Socialism) முக்கிய காரணியாக அமைந்தது. தங்களது பொருளாதார சமூக மாற்றங்களில் தனிப்பட்ட முறையில் கவலை கொள்ளாத பழைய நடுத்தரவர்க்கம் இவைகளினூடாக தங்கள் நாட்டின் தலைவிதியை நினைத்துக் கவலைப்படத் தொடங்கினர். தேசத்தின் தோல்வியும் அதன் பின்னான ஒப்பந்தமும் (Treaty Of Versailles) தோல்விகளின் அடையாள மாகப் பார்க்கப்பட்டது.

*1918* இல் வெற்றி பெற்றவர்கள் ஜெர்மனியை எவ்வாறு நடத்தினார்கள் என்ற காரணமே நாசிசத்தின் எழுச்சிக்குக் காரணமாக விளங்கியது என்று பரவலான ஓர் கருத்துள்ளது. இது ஆராயப்பட வேண்டிய ஒன்று. ஜெர்மனியர்களில் பெரும்பாலானோர் இச் சமாதான ஒப்பந்தம் பாரபட்சமானது என்றே கருதினர். நடுத்தர வர்க்கம் இவ் ஒப்பந்தத்திற்கு எதிரான உணர்வுகளைக் கொண்டிருந்தனர். தொழிலாளர் வர்க்கமோ இதனை அவ்வளவாக எதிர்க்கவில்லை. பழைய அரசுக்கு எதிரானவர்களாகவே இருந்த இவர்கள் போரின் தோல்வி அரசின் தோல்வி என்றே பார்த்தனர். அத்துடன் தாங்கள் நன்றாகவே போரிட்டோம், இதனால் வெட்கப்பட ஒன்றுமில்லை என்றும் கருதினர். மறுபுறத்திலோ புரட்சியின் வெற்றி முடியரசின் தோல்வியில்தான் என்பதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரிந்ததே. எனவே முடியரசின் தோல்வி இவர்களுக்குப் பொருளாதார, அரசியல், மனித சாரம்ச இலாபங்களை வழங்கியது. இச் சமாதான ஒப்பந்தத்திற்கு எதிரான உணர்வுகள் மத்தியதர வர்க்கத்தின் கீழ்த் தட்டில் தளங் கொண்டிருந்தன. இதுவே தேசியத் தோல்வியாக இவர்கள் காட்டிக் கொண்டது. இதனை நியாயப்படுத்தவே, தங்களது வர்க்கத்தின் தோல்வியை இவர்கள் தேசத்தின் தோல்வியாக முன்னிலைப்படுத்தினர்.

இவ்வாறான முன்னிலைப்படுத்தல் கிட்லரின் தனிப்பட்ட வளர்ச்சியில் காணக் கூடியதாகவிருக்கின்றது. இவர் நடுத்தர வர்க்கத்தின் கீழ்மட்டத்திற்கு ஓர் எடுத்துக் காட்டும் கூட. எதிர்காலத்தில் எந்தவித வெற்றிக்கும் வாய்ப்பற்ற 'யாரோ' சமூகத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டவர் என்ற உணர்வைத் தக்க வைத்துக் கொண்டவர். தனது புத்தகமான Mein Kampf (எனது போராட்டம்) இல் தன்னைப் பற்றி நிறைய வேளைகளில் யாரோ (Nobody), எவ்விதத்திலும் 'அறியப்படாதவர்' (Unknown Man) என்ற பதங்களின் மூலம் தனது இளமைக்கால நிலையை சுட்டிக் காட்டியுள்ளார். இது இவரது சமூக நிலையின் தார்ப்பரியமாயிருந்தும், அதனை தேசியத்தின் நிலைமையாக உருவகப்படுத்த திறமையான வாதங்களை முன்வைத்தார். ஜெர்மனிய சாம்ராச்சியத்திற்கு (Reich) வெளியே பிறந்தவராயினும், சமூக தேசிய அளவில் தான் விடுபட்டுப் போனவரில்லை என்ற உணர்வைக் கொண்டிருந்ததுடன் ஜெர்மன் சாம்ராச்சியத்தின் மைந்தர்கள் மீண்டும் அதனிடம் திரும்பி வருவதைப் பெருமையாகவும் சமூகத்தின் பாதுகாப்பிற்கு உகந்ததென்றும் கருதினார்.

பழைய நடுத்தர வர்க்கத்தின் தற்போதைய கையாலாகத்தன்மை, என்ன செய்யலாம் என்ற கவலை, சமூகத்திடமிருந்து தனிமைப்பட்டுப்போன நிலைமை என்பனவற்றின் தாக்கங்களிலிருந்து வெடித்த அழிவுத் தன்மை மாத்திரம்தான் நாசிசத்தின் உளவியல் காரணிகளல்ல. நாட்டுப்புற விவசாயிகள் நகர்ப்புறக் கடன் கொடுப்பாளர்கள் மேல் வெறுப்புற்றிருந்தார்கள். தொழிலாளர்கள் ஏமாற்றமும் சோர்வு நிலையும் அடைந்திருந்தினர். 1918 இன் முதல் தொழிலாளர் வெற்றிக்குப் பின்னான தொடரான அரசியல் பின்னடைவும், தொழிலாள தலைமை தொலைநோக்கு இழந்து போராட்டத்தை முன்னெடுக்க வக்கற்றுநின்ற நிலைமையும் நிலவின. ஜெர்மன் மக்களில் பெரும்பாலானோர் தனிப்பட்ட முறையில் தாங்கள் கையாலாகாதவர்கள், சக்தியற்றவர்கள் என்ற உணர்வின் பிடியினுள்ளேயே சிக்கிக் கிடந்தனர். இந்த நிலைமை ஏகபோக முதலாளித்துவத்தின் (Monopolistic Capitalism) இயல்பான நிலை என்பது எனது விளக்கம்.

இந்த உளவியல் நிலைமைகள் நாசிசத்தின் 'தோற்றுவாய் காரணிகள் அல்ல'. இவை மனிதாசார அடிப்படையை நாசிசத்தின் தோற்றத்திற்கு அமைத்தன, இக் காரணிகளின்றி நாசிசம் தோன்றியிருக்க மாட்டாது. ஆயினும் நாசிசம் பற்றிய முழுமையான எந்த ஆய்வும் அதன் தோற்றம், வெற்றி என்பனவற்றைப் பகுத்தறியும் போது, அந் நிலையில் நிலவிய பொருளாதார, அரசியல், அத்துடன் உளவியல் நிலைமைகளை அடிப்படையாக வைத்தே ஆராயப்பட வேண்டும். இக் கட்டுரையின் குறிக்கோள் உளவியல் ஆய்வாக இருப்பதால் அதனில் கூடிய கவனம் செலுத்தப்படுகிறது. ஆயினும் பெருந்தொழில் நிறுவனங்களும், கடனில் மூழ்கிப் போன ஜெர்மனிய இளம் கோமகன்களும் (Junkers) -இவர்கள் ஜெர்மனில் மாத்திரமல்லாது பெர்சியாவிலும் தனி ஆளும் உரிமை பெற்றிருந்தனர்- கிட்லருக்கு தங்கள் ஆதரவைக் கொடுத்திராவிடில் கிட்லர் ஒருபோதுமே வெற்றியடைந்திருக்க மாட்டார். அவர்கள் நிலைமையில், பொருளாதார அடிப்படைதான் உளவியல் காரணிகளை விட மேலோங்கி நின்றது.

இந்தச் சொத்துரிமை பெற்ற மேற்தட்டு வர்க்கம் பாராளுமன்றத்தில் 40 வீத சோசலிச கம்யூனிச பிரதிநிதிகளுக்கு எதிராகப் போராட வேண்டியிருந்தது. இந்த 40 வீத பிரதிநிதிகளுமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமுதாயத்தின் சமகால நடைமுறையின் மீது அதிருப்தி கொண்ட சமூகத்தின் பிரதிநிதிகள்; ஜெர்மனிய முதலாளித்துவத்தின் அதிபலம் பொருந்திய பிரதிநிதிகளுக்கு எதிரானவர்கள். இந்தக் குழுவினுள்ளேயே நாசிசத்தின் ஆதரவாளர்களும் அதிகரிக்கத் தொடங்கினர். ஜெர்மன் முதலாளித்துவ அசுர பலத்திற்கு எதிரானவர்கள் என்ற வகையிலேயே நாசிச ஆதரவாளர்கள் -இந்த 40 வீதத்துள்- இருந்தனர்; அத்துடன் அதிகரித்தும் வந்தனர். ஓர் பாராளுமன்ற அமைப்பு முறையில் தங்கள் சார்பான பொருளாதாரத்தினை எதிர்க்கும் தன்மை பிரதிநிதித்துவ அளவில் அதிகரித்திருந்ததானது மேற்தட்டு வர்க்கத்திற்கு அபாய அறிவிப்பாகப் பட்டது.

பெருந்தொழில் நிறுவனர்கள் அரை நிலப்பிரபுக்களின் விசேட உரிமைகளைப் பாதுகாக்க பாராளுமன்ற விதிமுறைகளை மாற்றியமைக்க முடியாத நிலையில் ஜனநாயகம் இங்கு சரியாக நடைமுறையில் இல்லை எனக் கூறினர். உண்மையிலேயே ஜனநாயகம் சரியான நடைமுறையில் தான் இருந்தது. ஜெர்மனிய சமூகத்தின் எல்லா வர்க்க மக்களின் பிரதிநிதிகளும் பாரளுமன்ற நடைமுறையில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பினையும் போதியளவு பிரதிநிதித்துவத்தையும் கொண்டிருந்தனர். ஆகவே ஜனநாயகம் மிக நன்றாகவே செயல் நிலையில் இருந்ததென்று தான் கூறவேண்டும்.

மேட்டுக்குடிப் பிரதிநிதிகள் நாசிசம் தங்களுக்கெதிரான மற்றைய வர்க்கங்களின் பகையுணர்வினை வேறு பக்கம் திருப்பி விடுமென்றும் அதேவேளையில் தேசத்தின் திமிறும் தன்மைக்கு வடிகாலமைத்துச் சாந்தப்படுத்தி தங்களின் பொருளாதார சேவைக்கானதாக்கும் எனவும் நம்பினர். இந்தக் கணிப்பில் பெரும்பான்மையான பகுதி சரியாகவும் சிறிய பகுதி பிழையாகவும் போயிற்று. கிட்லரும் அவரது ஆட்சியாளர்களும் மற்றவர்களின் கட்டளையை ஏற்கும் நிலையில் இல்லாததால், முந்தைய ஆளும் வர்க்கம் இவர்களுடன் தங்கள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டியும், சில வேளைகளில் பணிந்து போகவும், வேண்டியிருந்தது. நாசிசம் பொருளாதார ரீதியில் எல்லா வகுப்பினருக்குமே இழப்புத் தன்மையையே கொண்டு வந்தது. ஆனால் மிகப் பலம் வாய்ந்த ஜெர்மனியின் பெருந்தொழில் குழுவினருக்கு மாத்திரம் செவிலித்தாயாக இருந்தது. நாசிசம் முன்னைய ஜெர்மனின் முடியாட்சியை அடியொற்றியதாக, முடியாட்சியின் வீழ்ச்சிக்குப் பின் அது விட்ட இடத்திலிருந்து தனது ஆட்சியை தொடர்ந்தது. (ஜெர்மன் குடியரசு எந்த விதத்திலும் ஜெர்மன் ஏகபோக முதலாளித்துவத்தின் (German Monopolistic Capitalism) வளர்ச்சிக்குத் தடையாக அமையவில்லை. மாறாக அதனை தனது வழிகளில் விருத்தியே செய்தது.)

இந்த இடத்தில் வாசகர்களிடம் ஓர் கேள்வி எழாமல் போகாது. "பழைய" நடுத்தர வர்க்கம்தான் நாசிசத்தின் உளவியற் தளமாக அமைந்தது என்ற கூற்றுக்கும், நாசிசம் ஜெர்மன் முதலாளித்துவ நன்மை கருதி உழைத்தது என்ற கூற்றுக்கும் இடையிலான முரண்பாட்டுத் தொனியை எவ்வாறு ஒருவர் சமநிலைப்படுத்தி புரிந்து கொள்வது? என்பதுதான் அது.

போருக்கு முந்தைய காலத்தில் நடுத்தர வர்க்கம் -குறிப்பாக நடுத்தர வர்க்கத்தின் கீழ்த்தட்டு- முதலாளித்துவத்தினால் பயமுறுத்தப்பட்டு வந்தது. இதனால் இவ் வர்க்கத்தின் எதிர்காலம் பற்றிய பதட்ட நிலைமை பயத்தை வெளிக்கொணர்ந்தது. இந்த பயம் கலந்த நிலைமையில் இவ் வர்க்கத் தட்டு தன்னை எந்த சக்தியிடமாவது முழுமையாகக் கையளிக்கவும், அதிகாரமற்றவர்கள் மீது தங்கள் அதிகாரத்தை வளர்த்துக் கொள்ளவும் துடிப்புடன் காத்திருந்தது. இந்த உணர்வை முற்றும் முழுவதுமான இன்னொரு வர்க்கம் தனக்குச் சார்பான அரசை அமைக்கவும், அதன் மூலம் தன் வர்க்க சார்பு நன்மைகளைப் பெறவும் பயன்படுத்திக் கொண்டது. கிட்லர் இவ் வரையறைக்கெல்லாம் மிகக் கச்சிதமாகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருந்தி வந்தார். மனக் கசப்பு நிறைந்த, வெறுப்பு மிக்க குட்டிபூர்சுவா குணநலன்களை இவர் கொண்டிருந்தார். இந் நிலையையே மத்திய தரவர்க்கத்தின் கீழ்த்தட்டு தனது சமூகக் குணமாகக் கொண்டிருந்ததால் இலகுவில் இவ் வர்க்கம் தன்னை கிட்லருடன் இனங்கண்டு கொண்டது. உணர்வு பூர்வமாக சமுதாய நிலையில் ஓர் சந்தர்ப்பவாதியைப் போல் ஜெர்மனிய இளங் கோமகன்களுக்கும் பெருந்தொழில் துறையாளருக்கும் தங்கள் சேவையை அர்ப்பணிக்க காத்துக் கிடந்தது.

ஆரம்பத்தில் கிட்லர் நடுத்தர வர்க்கத்தின் இரட்சகனாகத் தன்னைக் காட்டிக் கொண்டார். தொடர் கடைகள் (Departmental Stores) வங்கியின் வர்த்தக முதலின் பலம் என்பவற்றை நிர்மூலமாக்குவேன் என சூளுரைத்தார். ஆனால் வரலாறு துல்லியமாகவே காட்டுகிறது – இவையெல்லாம் வெற்று வாக்குறுதிகள் என. எனினும் இதை விட்டு விட்டாலும் நாசிசம் ஓர் தெளிவான அரசியல் பொருளாதாரக் கொள்கையை கொண்டிருக்கவில்லை. நாசிசம் உண்மையிலேயே தீவிரத்தன்மை கொண்ட ஓர் சர்ந்தப்பவாதம் என்பதைப் புரிந்துகொள்வது மிக முக்கியம். இதில் கவனிக்க வேண்டியது இன்னும் ஒன்று உள்ளது. வழமையில் சமூக வளர்வு முறையில் இலட்சக்கணக்கான குட்டி பூர்சுவாக்கள் அதிகாரத்தையோ பணத்தையோ சம்பாதித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வெகு குறைவாகவே காணப்பட்டது. நாசிச ஆட்சியின் உள்வட்டத்தினர் 'உயர்குடி' யினரிடமிருந்து பெருவாரியான செல்வத்தையும் சமூக அந்தஸ்தினையும் தங்களுக்கென பறித்தெடுத்துக் கொணடனர். நாசிச இயந்திரத்தினுள் வாங்கப்படாதவர்கள் யூதர்களிடமும் அரசியல் பகைவர்களிடமிருந்தும் பறித்தெடுக்கப்பட்ட நலன்களைப் பெற்றுக் கொண்டனர். மிகுதியானவர்களோ முன்னரிலும் பார்க்க எதுவித புதிய நலன்களையும் பெறாவிடினும் நாசிசத் சித்தாந்தம் அரங்கேற்றிய வக்கிரக் கூத்தின் மூலம் தாங்கள் உலகின் உயர்ந்த குடி என்ற உணர்வு அவர்களுக்கு மன நிறைவை அளித்தது. தங்களது பொருளாதார, கலாச்சாரம் வளர்ச்சிப் போக்கில் முன்னேறுகின்றது என்று இவர்கள் நினைத்துக் கொண்டனர்.

இதுவரையில் சமூக, பொருளாதார மாற்றங்கள் சமூகத் தட்டுகளில் எவ்வாறு நிகழ்ந்தன எனப் பார்த்தோம். குறிப்பாக நடுத்தர வர்க்கத்தின் படிப்படியான வீழ்ச்சி ஏகபோக முதலின் ஆதிக்க வளர்ச்சி என்பன ஆழமான உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தின. இவ் உளவியல் தாக்கங்கள் வளர்த்தெடுக்கப்பட்டன, அல்லது அரசியல் சித்தாந்த ரீதியாக நெறிப்படுத்தப்பட்டன. 16ம் நூற்றாண்டில் எவ்வாறு மத ரீதியான சித்தாந்தங்கள் தொழிற்பட்டனவோ, அவ்வாறே இக் காலகட்டத்திலும் இவ் அரசியல் உணர்வு நெறிப்படுத்துகை அதே வர்க்கத்தின் முந்தைய பொருளாதார நல இருப்புக்களுக்கு எதிரானதாகவே தொழிற்பட்டது. நாசிசம் நடுத்தர வர்க்கத்தின் கீழ்த்தட்டு மக்களின் உணர்வு அடிப்படையில் புத்துயிர்ப்பை அளித்து, சமூகப் பொருளாதாரத் தளத்தில் அதன் முந்தைய நிலையிலிருந்து சரிவுறக் காரணியாக அமைந்தது. நாசிசம் இவ் வர்க்கத் தட்டின் உணர்வினை அணிதிரட்டி ஜெர்மன் முதலாளித்துவத்தின் பொருளாதார அரசியல் இலாப நோக்கின் முக்கியமான காரணியாகப் பயன்படுத்திக் கொண்டது.

இனி, கிட்லரின் குணாம்சங்களை அடுத்த இதழில் பார்ப்போம்.

–தொடரும்–

**தமிழில் – தேவா**

இக் கட்டுரை Erich Fromm எழுதிய Escape from Freedom என்ற நூலிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

Erich Formm :

– 1990 இல் Frankfurt இல் பிறந்தவர்.

– 1992 இல் Heidelberg University இல் சமூகவியலில் PhD பட்டம் பெற்றார்.

– 1925 காலப்பகுதிகளில் சமூக கலாச்சார பிரச்சினைகளை உளவியல் பகுப்பாய்வு அடிப்படையில் ஆய்வுசெய்வதில் ஈடுபடலானார்.

– 1933 இல் தற்காலிக விரிவுரையாளராக அமெரிக்கா சென்ற அவர் அங்கு குடியேறினார்.

– பின்னர் சர்வதேச உளவியல் பகுத்தாய்வு சங்கத்தில் சேர்ந்து பணியாற்றினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரசவிப்புக்கள்

-பாலமோகன் -

தீக்குச்சிகள் இரண்டு
உரசி
தீக்குஞ்சொன்றைப் பிரசவித்தது.
அழகான வெள்ளைக் குஞ்சு.
இருளின் ஒரு நூலில்
அது பற்றிப் பிடித்துத் தொங்கியது.
ஊசித் தலை,
தொந்தி பெருத்து குளுகுளுவென்று இருந்தது.
கோதுடைத்து வெளியே வந்த கோழிக்குஞ்சை
அணைப்பதுபோல்
இரு கைகளாலும் பொத்தி
மெழுகுதிரிமேல் இருத்தினேன்.

அது பிறந்த போது, சீறி எழுந்து நின்றளவு
வேகம் இப்போ இல்லை,
ஆற அமர சப்பாணி கொட்டி இருந்தது.
எந்நேரமும் நளினமாகவே ஆடி அசைந்து
என்னுடன் பேசிக்கொண்டிருந்தது.
அதன் நளினம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.
அது அசையாது நிற்கும் போதெல்லாம்
ஒரு கண்ணீர்த் துளியை
காற்று பிழிந்து ஊற்றுவதுபோல் இருக்கும்.
தனது சகோதரம் ஒன்று
இருக்கை தவறி வீழ்ந்து
இறந்த கதையையும்
இன்னொரு சகோதரம்
ரயரோடு கூட்டுச்சேர்ந்து
உயிர்களை எரித்த கதையையும் சொல்லி
துக்கம் மாளாமல் அழுதது,
மெழுகை விரல்களால் சுரண்டியபடி!
உயிர்களின் மதிப்பறியா துவக்குக் குழாய்க்குள்ளும்
தம்மைப் பிறப்பிக்கும் விஞ்ஞானத்தையும்
கந்தக விந்தினை வழங்கும் மலட்டு
மனிதர்களையும்
கடிந்து கொண்டது.

தான் அமைதி வேண்டி குறியீடு செய்யும்
தனது இருப்பையாவது அனுமதிக்கும்படி
என்னிடம் வேண்டியது,
என்னை அறியாத அந்த அப்பாவிக்குஞ்சு !



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சிங்கள மாற்றுப் பத்திரிகைகளில் ஒன்றான லக்திவ இன் ஆசிரியர் சுனில் மாதவ உடன் —மனிதம் சார்பில்— மனிதம் வாசகர் ஒருவரால் நடாத்தப்பட்ட நேர்காணல் இங்கு நன்றியுடன் பிரசுரமாகிறது.**

**—ஆ.ர் குழு—**

# நேர்காணல்

*?. தாங்கள் இடதுசாரி இயக்கத்திலும் அங்கம் வகித்திருக்கின்றீர்கள், ஓர் பத்திரிகையாளராகவும் இருந்து வருகின்றீர்கள். தங்களுடைய பத்திரிகை வரலாறு பற்றிக் கொஞ்சம் கூறமுடியுமா?*

⇓

நான் ஆரம்பத்தில் லேக் வுசில் தினமின பத்திரிகையில் இருந்தேன். பின்னர் திவயின, லக்மின, லக்திவ, சத்யே ன்ட, ஹிறா என பத்திரிகைகள் தொடர்ச்சியாக நடத்தி வந்துள்ளேன். இலங்கையில் முதன்முதலில் மாற்றுப் பத்திரிகையாக 'லக்மின'வை கொண்டு வந்தேன். கடந்த 30 வருட காலமாக பத்திரிகையுலகில் இருந்து வருகின்றேன். இத்தனை காலமும் நான் மார்க்சிய வழியிலேயே வருகிறேன். புரட்சி அரசியலே அரசியல் போக்காகக் கொண்டுள்ளேன். மக்களின் மொத்தமான விடுதலை புரட்சியிலேயே தங்கியுள்ளது என நம்புகிறேன்.

*?. இலங்கையில் மிகப் பெரிய இயக்கமாக இருந்த இடதுசாரி இயக்கங்கள் இன்று முற்றாகவே சிதைந்து வெறும் பெயர்ப்பலகைகளுடன் மட்டும் இருக்கின்ற நிலை தோன்றியுள்ளது. ஓர் இடதுசாரி என்ற வகையில் இதற்கான காரணங்கள் என்னவாக இருக்குமென நீங்கள் கருதுகிறீர்கள்?*

⇓

கடந்த காலங்களில் LSSP, CP போன்ற இடதுசாரி அமைப்புக்கள் யாவும் மேற்குலகு இடதுசாரிப் பாணியிலேயே தங்களது நடவடிக்கைகளைத் தொடர்ந்தார்கள். 1957ம் ஆண்டுப் பகுதியில் எல்லாம் மக்கள் புரட்சிகர அரசியலுக்கு தயாராகி இருந்த நிலையிலும் கூட இவர்கள் தயாராக இருக்கவில்லை. வெறுமனே பாராளுமன்ற அரசியல் நோக்கியே நகர்ந்தார்கள். இதனால் ஏமாற்றப்பட்ட மக்கள் இவர்களை கொஞ்சம் கொஞ்சமாக நிராகரித்தார்கள். இவர்கள் வெறும் போலிகளாகவே இனங் காணப்பட்டார்கள். இந்த வகையில் JVP மக்களது ஏக்கத்தை, காலத்தின் தேவையை உணர்ந்து செயல்பட ஆரம்பித்தது.



**சுனில் மாதவ**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*?. இலங்கையின் மைய அரசியற் பிரச்சனையாக தேசிய இனப் பிரச்சனையே உள்ளது. குறிப்பாக தமிழ் மக்களின் போராட்டம் உள்ளது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, வடக்கு – கிழக்கு இணைப்பு போன்றவை தொடர்பாக உங்கள் கருத்துக்கள் யாவை?*

⇓

தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களை இந்த முதலாளித்துவ அமைப்பானது தனது அவசியத்தைக் கருதி இனவாதத்தை திணித்து சிதைத்து விட்டது. தமிழர்களின் போராட்டம், எழுச்சி இன்றுள்ள நிலையில் நியாயமானது. அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவும் அன்று வட,கிழக்கு இளைஞர்கள் போராட்டத்தை நோக்கி தள்ளப்பட்டதற்கான காரணம் எனவும் நான் நம்புகிறேன். அவர்கள் எழுச்சி பெறத்தான் வேண்டும். ஆனால் இன்று பிரபாகரனின் போராட்ட முறையை நான் வெறுக்கிறேன். பாசிசம், இனவாதம் என்பவற்றை அது இன்று முன்னெடுக்கிறது. வேறு சக்திகளும் துணைபோகிறது. பாசிசம், இனவாதம் என்பவற்றை புலிகளை விட அரசு உச்சக்கட்டத்தில் செய்து வருவதை மறுக்கவில்லை. சுயநிர்ணய உரிமை கூட சகல சிறுபான்மை இனங்களுக்கும் இருக்கத்தான் வேண்டும். யுத்தம் புரிந்து தீர்வினைப் பெற முடியாது. அரசு அரசியல் தீர்வுக்குத்தான் வழிவிட வேண்டும். இத்தனையையும் நான் ஒப்புக் கொள்கிறேன்.

ஆனால் இப் பிரச்சனைகளுக்கு இவை மட்டும்தான் தீர்வா? ஒவ்வொரு நிமிடமும் சகல மக்களும் முகம் கொடுக்கும் முதலாளித்துவ சுரண்டல் பிரச்சனையாக இல்லையா? அதன் பின்னணியைக் கொண்டு வளர்க்கப்பட்ட இனப்பிரச்சனைக்கும் இது பின்னணியாக இல்லையா? இன ரீதியில் நாமெல்லோரும் பாடுபடுவது வர்க்க ரீதியாக ஒன்றுபடுவதை தடுக்கவில்லையா? இதுவே நான் எழுப்பும் கேள்வி. சுயநிர்ணய உரிமை, வடக்கு – கிழக்கு இணைப்பு என்பவை அம் மக்களுக்கு மட்டுமல்ல சகல மக்களுக்கும் தற்காலிகத் தீர்வை மட்டும்தான் தருமாயின் அத் தீர்வின் பலனென்ன?

*?. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு புறம்பாக இன்று மலையக மக்கள் மத்தியிலிருந்தும் முஸ்லீம்கள் மத்தியிலிருந்தும் தனியான நிர்வாக அதிகாரம் தேவை என்ற வகையில் தனியான மாகாண சபைக் கோரிக்கை எழுந்துள்ளது. இதுபற்றி யாது கூறவிரும்புகிறீர்கள்?*

⇓

எனக்கு இதில் உடன்பாடு குறைவு. இன்று ஆளும் முதலாளித்துவ சக்திகளுக்கு இவை வாய்ப்பாகப் போய்விடும். இன ரீதியாக மக்களைப் பிரித்து கூறுபோட்டு இனவாதத்தை கூர்மையடையச் செய்வதன் மூலம் அவர்களது வர்க்க ஒற்றுமையை திட்டமிட்டு உடைப்பதில் சிரமம் இருக்காது. அவ்வாறு இன ரீதியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டால் அவர்களது நோக்கம் இலகுவாகி விடும். நான் திவயின பத்திரிகையில் பணிபுரிந்து கொண்டிருந்த போது திருகோணமலையில் மீனவர்கள் பலர் கொல்லப்பட்ட சம்பவம் அறிந்தோம். அரசுதான் அன்று அதனைச் செய்திருந்தது. இதன் பிரதிபலனாக புலிகளும் சிங்களவர்களைத் தாக்கினர். ஆனால் அரசு இரண்டையுமே புலிகள் மீது சுமத்தியது. இவ்வாறு முஸ்லீம், தமிழ், சிங்கள எல்லைகளைப் போட்டிருந்தால் வர்க்க முனைப்புகள் வெளியில் எட்டிப்பார்க்கும் போது அரசு இவர்களுக்கிடையில் மோதல்களை திட்டமிடும். பின்னர் அது கூர்மை பெற்று இனவாதமாக வெளிவரும் போது, எழுந்த வர்க்க முனைப்புக் கூட சீர்கெடும். இனரீதியாக பிளவுபடும் போது அவர்களை மீண்டும் இணைப்பது ஒன்றும் இலகுவான காரியமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*?. தமிழ்த் தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களைப் பொறுத்தவரை பாரம்பரிய இடதுசாரிகள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக பேரினவாதத்திற்கு சார்பான குழப்பமான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு கருத்துப் போக்கு நிலவுகின்றது. இதுபற்றித் தங்கள் கருத்து யாது ?*

⇓

ஆரம்ப காலங்களில் இவர்களிடம் ஓரளவு சுமுகமான கருத்துக்கள் இருந்த போதும் இவர்களது சந்தர்ப்பவாதப் போக்குகள் பாராளுமன்றப் பாதையே சரணம் என்றிருந்த போது இவர்களது அக் கருத்து சிதைந்தது. அதன் பிரதிபலனில் ஒன்றாக அரசியலமைப்பை வரைந்தவரான இடதுசாரிகளில் பேர்போன கொல்வின் R.D. சில்வா கூட சிறுபான்மையினரை புறக்கணித்திருந்தது அப்பட்டமாக விளங்குகிறது. அவர்கள் மக்களின் பிரச்சனைக்கான தீர்வைவிட தங்களின் அரசியல் நடத்தை நீடிப்புக்காகவும் வோட்டுக்களைப் பெருமளவில் பெறுவதற்காகவும் மட்டும் அரசியல் செய்யும் நிலையைக் கொண்டுள்ளார்கள். அந்த வகையில் தோழர் சண் இவர்களைவிட யதார்த்தத்தோடு ஒருங்கிணைந்த வகையில் இயங்கினார், ஆழமாகப் பிரச்சகைளை நோக்கினார்.

*?. இன்று தேசம், தேசிய இனம், வர்க்கப் போராட்டம் தொடர்பாக இந்தியா உட்பட உலக அரங்கில் புதிய இடதுசாரிக் கருத்துக்கள் வளர்ந்துள்ளன. ஆனால் பாரம்பரிய இடதுசாரிகள் அவற்றைக் கவனத்தில் எடுக்காது பழைய பாணியையே தொடர்ந்தும் கடைப்பிடிக்கின்றனர். இதனால்தான் அவர்களால் முன்னேற முடியவில்லை என்ற கருத்து நிலவுகின்றது. இதுபற்றி என்ன கூறுகின்றீர்கள் ?*

⇓

அது சரி. பாரம்பரிய இடதுசாரிகள் விட்ட பிழைகளில் ஒன்றாக அதனையும் ஏற்கலாம். மனிதகுல வளர்ச்சி, சமூக வளர்ச்சி என்பவை வேகமாக நகர்ந்தபோதும் பாரம்பரிய இடதுசாரிகள் ஒரே இடத்தில் இருந்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

*?. JVP இரு தடவைகள் ஆயுதப் போராட்டத்தை நடத்தியும் இரண்டிலுமே படுதோல்வியைத் தழுவியிருக்கிறார்கள். இதற்கான காரணம் என்னவாக இருக்குமென கருதுகிறீர்கள் ?*

⇓

அவர்களின் பிரதான பிழை ஆயுதப் போராட்டத்தை மக்கள் முன் ஒழுங்காகக் கொண்டு செல்லாதது. லெனின் ரஷ்யாவில் செய்ததைப் போல இலங்கையில் புரட்சி செய்ய முடியாது. இங்குள்ள சூழலே மாறுபட்டது. உதாரணத்திற்கு 1971 இல் JVP யின் திட்டமானது ஒரே இரவில் புரட்சியை நடத்தி முடிப்பது என்பதாக இருந்தது. அது கிட்டத்தட்ட காஸ்ட்ரோ புரட்சியை ஒத்தது. அவர்களின் அன்றைய நிலை வேறு. அதே வடிவில் இலங்கைக்குச் சாத்தியமா என்பது கேள்வியே.

புரட்சி பரந்துபட்ட மக்களின் எழுச்சியாகவும் இருக்கவில்லை. ஒரு கெரில்லாப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் போது முன்னேற எவ்வளவுக்கு தெரிந்திருக்கிறோமோ அந்தளவுக்கு பின்னோக்கவும் அறிந்திருக்க வேண்டும். அதற்குத் தயாராக இல்லாத சூழ்நிலையில் பல இளஞர்களைக் காவு கொடுக்க வேண்டி வந்தது. அது மட்டுமல்ல, இலங்கையைப் பொறுத்தளவில் தெருவில் நாயொன்று காயப்பட்டாலும் துக்கப்படும் மக்கள் மத்தியில் படுகொலைகளை எவ்வாறு செய்வது என்பதில் தெளிவாக இருக்கவில்லை. JVP யானது போராட்ட வடிவில் சற்று பின்னடைவைச் சந்தித்திருக்கலாம். ஆனால் அது தனது கொள்கையிலிருந்து, அரசியலிலிருந்து தோல்வியடையவில்லை என்பது தற்கால சூழ்நிலைகளிலிருந்து நிரூபணமாகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

JVP யில் 95 வீதத்திற்கும் அதிகமானோர் சிங்கள பௌத்தர்களாக இருந்ததனால் தமிழ் விரோதி என்ற குற்றச்சாட்டை சுமத்த இலகுவாக இருந்தபோதும், அன்றைய JVP யில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக இளைஞர்களும் இருந்தார்கள். உமா மகேஸ்வரன் காலத்தில் JVP யில் தமிழ் இளைஞர்களை ஒன்றுபடுத்த பல முயற்சிகள் நடந்தது. பின்னர் அது தொடரப்படாதது அதன் பிழைகளில் ஒன்று எனக் கருதுகிறேன். ஒரு பத்திரிகையாளன் என்ற ரீதியில் நான் உணர்வது, இன்றுள்ள பாரிய அரசியல் குழுக்களுக்கும் மக்களின் பிரச்சனையின் தீர்வுகளுக்கும் இடையில் உள்ள இடைவெளியை JVP யால் மட்டுமே நிரப்ப முடியும். தெற்கில்கூட பொதுமுன்னணிக்கு மக்கள் வாக்களித்ததற்கான காரணம் பொது முன்னணி வேண்டும் என்பதற்காக அல்ல, UNP வேண்டாம் என்பதற்காகவே. அண்மையில் சந்திரிக்கா திறந்த பொருளாதாரக் கொள்கையை ஆதரித்திருப்பதும், அதுபோல் சிறீமா உலக வங்கிக்கும் சுதேசிய விதேச முதலாளிகளை " பயப்பட வேண்டாம்" என கூறியிருப்பது என்பவை மேற்கூறிய இடைவெளியை அதிகரிக்கச் செய்கிறது. இவ் இடைவெளியை நிரப்ப புதிதாக ஒன்றை உருவாக்குவதில் உள்ள சிக்கல்கள் இருக்கின்ற நிலையில் JVP யையே நிரப்புவதற்காக முன்மொழிய வேண்டியுள்ளது.

*?. ஓர் இடதுசாரி என்ற வகையில், தேசிய இனங்களிடையே ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் வளர்ப்பதற்கு யாது செய்யலாம் எனக் கருதுகிறீர்கள் ?*

⇓

யதார்த்த சூழ்நிலையை உணரும் வண்ணம் அரசியல் ஊட்டப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு.

*?. தேசிய இனங்களிடையே புரிந்துணர்வை வளர்ப்பதற்கு எங்களைப் போன்ற இடம்பெயர்ந்த தமிழர்களும், அவர்களின் பத்திரிகைகளும் எந்த வகையில் பங்காற்றலாம் ?*

⇓

சிங்கள மக்கள்மீது குரோதம் கொள்ள இடம்கொடாதீர்கள். பிரச்சனைக்கு அரசும் அதன் பின்னணியை வழமையாகத் தீர்மானித்துவரும் சக்திகளையும் மக்களுக்கு அடையாளப்படுத்துங்கள். சிதைந்திருக்கின்ற இன ஒற்றுமையை சீராக்குவதற்கு உங்கள் பங்களிப்பையும் நல்குங்கள். எங்கள் பத்திரிகையில் தமிழர்களது பிரச்சனைகளை சிங்களவர்களுக்கு உணர்த்துவதற்காக "ஒரே வானம" என்னும் பகுதியை நடத்தி வருகின்றோம். வர்க்க ஒற்றுமைக்கும் எழுச்சிக்கும் பலம் கொடுங்கள்.

*?. எமது பத்திரிகையினூடாக ஈழம் வாழ் தமிழ் மக்களுக்கும் உலகம் வாழ் தமிழ் மக்களுக்கும் என்ன கூற விரும்புகிறீர்கள்?*

⇓

யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள முயற்சியுங்கள். சகலருக்குமான தீர்வு என்பது ஒன்றுபட்ட முதலாளித்துவ சக்திகளுக்கு எதிரான போராட்டத்தினாலேயே முடியும். அதற்கேற்ற வகையில் அணி திரள்வோம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதம் :

**கிருஸ்ணா**

மனிதம் ஆ-ர் குழுவிற்கு வணக்கங்கள்!

மனிதம்-28 இல் தாஸ் என்பவர் எழுதியிருந்த சந்ததிக்கடமை என்ற கட்டுரையில் காணப்படுகின்ற சில விடயங்கள் தொடர்பாக நான் முரண்படுகின்றபவை பற்றிக் கீழே குறிப்பிடுகின்றேன்.

முதலில் இக் கட்டுரை இங்குள்ள பெற்றார், சிறார் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகளையும், உளவியல் ரீதியில் எழுகின்ற தாக்கங்கள் பற்றியும் நல்லதோர் ஆய்வைச் செய்ய முற்பட்டுள்ளது. சந்ததிக்கடமை என்று பொருத்தமான தலையங்கத்தைத் தெரிவு செய்துவிட்டு அதற்குப் போடப்பட்டிருந்த படம் ஒரு பெண் யோசித்துக் கொண்டிருப்பதாக இருக்கிறது. சாதாரணமாகப் பார்க்கும் ஒருவருக்கு ஏலவே சமூகத்தில் நிலவுகின்ற கருத்தியல்போல் சந்ததிக்கடமை பெண்ணுக்குரிய விடயம் என்பதுபோல் ஒரு தோற்றத்தை மனிதம் உருவாக்க களம் அமைக்கக் கூடாது. பொருத்தமான படத்தைத் தேர்வு செய்திருக்கலாம், அல்லது தவிர்த்திருக்கலாம்.

இனி விடயத்திற்கு வருவோம்.

கட்டுரையில் 48ம் பக்கத்தில் "இளவயதினரும் பாலியலும் "என்ற பிரச்சனையில்.... பாலியல் பற்றிய விளக்கங்களை அவர்களுக்குக் (இளவயதினருக்கு) கூறி, பின்விளைவுகளை விளங்கப்படுத்தலாம். பூடகம் பரிசோதனைக்குத்தான் வழிவகுக்கும்.

இங்கு எமது கலாச்சாரம், நடைமுறைகள் என்ன என்பதை விளக்கலாம்..... என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாலியல் பற்றி எமது கலாச்சாரம் என்பது எவ்வளவு பிற்போக்குத்தனமான கருத்தியல்களைக் கொண்டுள்ளது. இங்கு எமது கலாச்சார நடைமுறைகள் என்ற வார்த்தைகளின் அர்த்தமானது, எமது சமூகத்தில் குறிப்பாக பெண்களையே ஒடுக்கிவைப்பதற்கான கலாச்சாரமாகவும் நடைமுறையாகவுமே உள்ளது. எமது கலாச்சாரம் என்பது தமிழ்ப் பெண் என்ன உடை உடுத்துகிறாள், சமூகத்தில் எவ்வாறு நடந்து கொள்கிறாள் என்பதைப் பறைசாற்றுவதாகவே கூடுதலாக இருக்கின்றது. சாதாரணமாக இளம் பெண்ணுக்கு ஏற்படுகின்ற பாலியல் ரீதியான உடலியல்கூறு (பருவமெய்தல்) மாற்றங்களுக்குக் கூட விழா எடுப்பதுதான் எமது கலாச்சாரமாக இன்னும் நிலவி வருகின்றது. இங்கு நாம் இளவயதினருக்கு சரியான கலாச்சாரம் என்பது என்ன என்று அறிவுரை ஏற்படுத்த முயற்சிக்கலாமேயொழிய, எமது கலாச்சாரத்தின் பிற்போக்குத்தனங்களைப் பற்றிப்பிடிக்கும் படியாக எமது முயற்சிகள் அமைந்துவிடக் கூடாது. வேண்டுமென்றால் நூதனசாலையில் வைக்கப்பட்டிருக்கும் பொருள் போல் எமது கலாச்சாரம் பற்றிக் கூறலாம்.

தொடர்ந்து இதே விடயத்தில் ............ இங்கு வளர்ந்த இளவயதினர் முழுமையாக எங்கள் கோட்பாட்டை (அது சரியா, பிழையா என்பது வேறு விடயம்) ஏற்பார்கள் என்பது கேள்விக் குறியே. இவர்களது நடைமுறையை நாங்கள் ஏற்பது என்பது எம்மால் முடியவே முடியாத காரியம்........... என்று எழுதுகிறார் கட்டுரையாளர்.

எமது கலாச்சாரம் என்று மேலே குறிப்பிட்ட இறுக்கமான மூகமுடியை அணிந்திருக்கும் ஒருவர் வேண்டுமானால் இப்படிக் கூறுவதை ஒரு பொருட்டாக எடுக்க வேண்டியதில்லை. ஆனால் "சந்ததிக்கடமை" என்ற கட்டுரை மூலம் பல்வேறு பிரச்சனைகளையும் ஆழமாகப் பரிசீலிக்க முற்படும் ஒருவர் இத்தகைய வார்த்தைப் பிரயோகங்களை எந்த அர்த்தத்தில் பிரயோகிக்கிறார் என்பது கேள்விக்குரியதே. பாலியல் ரீதியில் இவர்களது (சுவிஸ் நாட்டவரது) நடைமுறையென்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

–சில சீரழிவுகள் இருந்த போதும்– இவர்களின் கலாச்சாரம், மனோநிலை, முதலாளிய வளர்ச்சி நிலையில் பெண்களின் உயர்வு மட்டம் என்ற பல்வேறு விடயங்களுடனும் சேர்த்தே பார்க்கப்பட வேண்டும். மாறாக வடலிக் கலாச்சார கண்ணோட்டத்தில் பார்த்தால்தான் எப்பவுமே தவறாகத் தெரியும். உயர்வான ஒரு கலாச்சாரம் பற்றிய தேடல்களில் இருந்து வேணுமென்றால் இந் நாட்டவர்களின் கலாச்சாரச் சீரழிவு அம்சங்களைப் பற்றி விவாதிப்பதாயின் பயன் இருக்குமே ஒழிய வேறுவகையில் இவர்களின் நடைமுறையை ஏற்கமுடியாது என்று கூறுவது யாழ்ப்பாண கிடுகு வேலித்தனம் இன்னமும் எம்முன் இருக்கின்றது என்பதாகவே அர்த்தப்படுத்த முடியும்.

தொடர்ந்த அடுத்த வரியில், எனவே சில விட்டுக்கொடுப்புக்கள் (இங்கு தவறான விளக்கம் கொள்ளவேண்டாம்)........ என்று தொடர்கிறது. கட்டுரையாளர் இங்கு ஏன் பயப்படுகிறார் என்று புரியவில்லை. தான் கூறும் சரியான விடயத்தை சரியான சந்தர்ப்பத்தில் சரியாகக் கூறுவதே நேர்மையானது. சனம் ஏற்காமல் போய்விடுவார்களோ என நினைத்துக் கொண்டு நெளிவுசுழிவாக எழுத முனைவதுதான் வாசகர்கள் தாங்கள் பற்றிப் பிடித்திருக்கின்ற பழமையான கருத்தியல்கள் இன்னும் சரியானதுதான் என்ற மாயையில் இருப்பதற்கு உதவி செய்யும். ஒளிவுமறைவின்றி சரியானவற்றைத் தெரிவிக்க வேண்டும். இப்போ இல்லாவிட்டாலும் காலப்போக்கில் சரியானவைக்கு வரவேற்பிருக்கும்.

தொடர்ந்து.......... "முற்றுமுழுவதும் மகளே/மகனே உன்பாடு என விட்டுவிட்டு நாம் முற்போக்கானவர்கள்? என இருக்கலாம்" என்று கட்டுரை குறிப்பிடுகின்றது. இதன்மூலம் கட்டுரையாளர் முற்போக்கு என்பதுபற்றி ஒருவித தவறான அர்த்தப்படுத்தல்களைக் கொண்டுள்ளார்போல் தெரிகின்றது.

ஒருவர் மற்றவரின் (அந்த மற்றவர் கணவன், மனைவி சகோதரி, சகோதாரன், மகன், மகள்.........) உரிமையை, ஜனநாயகத்தை அங்கீகரிப்பது அல்லது ஏற்றுக் கொள்வது என்பது எந்தவகையில் தவறானது. ஒருவர் பார்வையில் தவறாகத் தெரிகின்ற ஒரு விடயத்தை தனது மகனோ, மகளோ செய்கிறபோது, அதுபற்றி தனது உடன்பாடின்மையைக் கூறி, வன்முறை மூலம் அந்தத் தவறுக்குத் தீர்வுகாண விரும்பாது, ஜனநாயகத் தன்மையுடன் நடப்பது முற்போக்கானது என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்? இதைவிடுத்து மாறாக தாய், தந்தை என்ற ரீதியில் எமக்கு உரிமை இருக்கிறது, அக்கறை இருக்கிறது என்று வேறுவகையில் தீர்வை நாடுவதுதான் சரியென்கிறாரா? ஏன் இந்தக் குழப்பம்? இவை சம்பந்தமாக என்னளவில் இதைத்தான் கூறமுடியும். நாம் (பெற்றோர்) ஒரு 15, 20 வருடங்கள் இந்த நாட்டில் ஏதோ ஒரு காரணத்திற்காக வாழ்ந்து பிள்ளைகளும் வளர்ந்து விட்டால், அவர்கள் இந் நாட்டவர்களின் கலாச்சார நடைமுறைகளையே அதிகளவில் உள்வாங்கியிருப்பார் என்பது இயல்பானது. (லண்டன், கனடா விதிவிலக்காக அமையலாம்) எமது நோக்கங்களுக்காக நாம் இங்கிருந்துவிட்டு, எமது கருத்தியல்களில் மாற்றங்களையும் ஏற்படுத்திக் கொள்ளாமல், யாழ்ப்பாணக் காலச்சாரத்திற்கு பிள்ளைகளையும் பழக்கலாம் என்பது எவ்வளவு முட்டாள்தனம். அந்தக் கலாச்சாரம்தான் சரியானது என்று நினைப்பவர்கள் ஒன்றில் இந் நாடுகளில் இருந்து வெளியேறி தாம் சரியென்று கருதுகின்ற கலாச்சார நடைமுறைகளுடன் வாழ்பவர்களுடன் சேர்ந்து வாழ்ந்து தமது இஷ்டப்படியே பிள்ளைகளை பின்பற்றச் செய்வது பிரச்சனைகளைக் குறைக்கும். அதைவிடுத்து காசும் வேணும், கலாச்சாரமும் வேணும் என்றால் இந்த முரண்பாடுகள் தவிர்க்கமுடியாதவை. எது தேவை? எது சரி? என்று பெற்றோர் தம்மளவில் ஒரு முடிவிற்கு வரவேண்டும். இல்லையென்றால் இந்த முரண்பாடுகள் எதிர்காலத்தில் பிள்ளைகள் வன்முறையாளர்களாக, போதைவஸ்துக்கு அடிமையானவர்களாகப் போவதில்தான் போய்முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏன் இந்த வெட்கம் ?



தஸ்லீமா நஸ்ரீன் யார் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டிய நிலை இன்று இல்லாமல் போய்விட்டது அமெரிக்க ஐரோப்பிய தொடர்பு சாதனங்கள் பக்கம் பக்கமாகவும் மணித்தியாலக் கணக்காகவும் நஸ்ரீன் மீது பங்காளதேச முஸ்லீம் அடிப்படைவாதிகளின் கொலைப் பயமுறுத்தலையும், அவர் எழுதிய லஜ்ஜா (வெட்கம்) எனும் நூல் மீதான தடைபற்றியும் பிரபலப்படுத்தியிருந்தன. முஸ்லீம் அடிப்படைவாதிகளினால் மேற்கொள்ளப்படும் ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகளை பூதாகாரப்படுத்துவது இது முதற்தடவை அல்ல. ஆனால் தம் தரப்பிலும் தமக்கு சாதகமான சக்திகளினால் மேற்கொள்ளப்படும் ஜனநாயக மறுப்பு, உரிமைமறுப்பு செய்திகள் முழுமையாக இருட்டடிக்கப்படும் அல்லது அடக்கி வாசிக்கப்படும். இதுவே இவர்களின் ஜனநாயக தர்மம். நஸ்ரீனுக்கு விடுக்கப்பட்ட கொலைப் பயமுறுத்தல் வன்மையாகக் கண்டிப்பட வேண்டிய ஒன்று என்பதோடு அவர் எழுதிய லஜ்ஜா (வெட்கம்) என்ற நாவல் மீதான தடையையும் மாற்றுக் கருத்துக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவே கருதப்படவேண்டியது மாகும். தற்போது மேற்கொள்ளப் பட்டுவரும் இஸ்லாமியருக்கெதிரான பொய்ப் பிரச்சாரங்களை இனங்கண்டு கொள்வதற்காக இஸ்லாத்தின் மறுபக்கத்தினை பார்ப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

மதம் மக்களின் அபின். எந்த மதமும் மக்களுக்கு எதிரானதுதான். ஆனாலும் ஒரு சிறுபான்மை மதத்திற்கெதிராக ஒரு பெரும்பான்மை மதம் உள்நாட்டளவிலோ, உலக அளவிலோ பொய்ப்பிரச்சாரத்தை கண்டிறிய வேண்டிய தேவை இருக்கிறது. ஏனெனில் எந்த ஒரு போராட்டமும், அது மத அடிப்படையிலானதாக இருந்தாலும் சரி, மொழி அடிப்படையிலானதாக இருந்தாலும் சரி பின்னணியில் ஒரு அரசியல் இருக்கிறது. அந்த வகையில் பின்னணியாயுள்ள உண்மைகளை நாம் கணக்கிலெடுக்க வேண்டியதாயிருக்கிறது.

தொழில் வளர்ச்சி,நவீனத்துவம்,புதிய அரசியல் மாற்றங்கள் ஆகியவற்றின் பின்னணியில் கிறிஸ்தவம் அதன் உள்ளிருந்தே நெருக்கடிகுள்ளாக்கப்பட்டது போன்ற ஒரு அனுபவத்தை இஸ்லாம் பெற்றிருக்கவில்லை: எனவே ஓரளவு மாற்றத்திற்குள்ளாகாத மதமாகக் காட்சியளிக்கிறது. இஸ்லாம் கிறிஸ்தவம் போல மரணத்திற்கு அப்பாற்பட்ட வாழ்வை வலியுறுத்திய மதமல்ல. இகலோக வாழ்க்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய மதம். மதமாய்தோன்றி கட்சியாய் வடிவெடுத்து, அரசாய் உருமாறியது இஸ்லாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த வகையில் ஒரு சமூக ஒற்றுமைக் கருத்தியலாக வடிவெடுத்த இஸ்லாம் அதன் உறுப்பினர்களிடையே ஆழமான சமூகப் பற்றைக்கோரியது. அந்நிய ஆதிக்கதிற் கெதிரான நீண்டகால எதிர்ப்புப் பாரம்பரியத்தில் வளர்ந்த இஸ்லாம் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மக்களைத் திரட்டுவதற்கு பொருத்தமான கருவியாக செயற்பட்டு வந்திருக்கிறது.

வரலாறு பூராவும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளும், கிறிஸ்தவ மதமும் இஸ்லாமியர்களிற்கு எதிராகச் செய்து வந்த அநீதிகள் ஏராளம். எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, இஸ்லாமிய நாடுகள் தம்மைப் பொருளாதார ரீதியில் சுதாகரித்துக் கொண்ட போதிலும் இன்றைவரை அமெரிக்க, ஐரோப்பிய பன்னாட்டு நிறுவனங்கள்தான் அந்த எண்ணெய் வளத்தைக் கொள்ளையடித்து வருகின்றன. ஷா வின் ஆட்சிக்காலத்தில் ஈரான் அமெரிக்காவின் எடுபிடியாகவும் படைத்தளமாகவும் மாற்றப்பட்டது. இந்தப் பின்னணியில்தான் அமெரிக்க, ஐரோப்பிய வல்லரசுகளிற்கு எதிராகவும், கிறிஸ்தவக் கலாச்சார மேலாண்மைக்கு எதிராகவும் எழுகிற இஸ்லாமிய அடிப்படைவாதத்தை நாம் பார்க்கவேண்டும். கொமெய்னியின் தலைமையில் எழுந்த இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது அமெரிக்க மேலாண்மையையும், அடிவருடி ஷா வின் ஆட்சியையும் எதிர்த்த வகையில் அது முன்னோக்கிய மாற்றம் ஏற்படுத்தும் நோக்குடன் இருந்தது. இதேபோல் எல்லா மத அடிப்படை வாதத்தினையும் பார்க்க இயலாது என்றளவில் இஸ்லாம் அடிப்படைவாதம் முற்போக்கான பங்கை ஆற்றியுள்ளது எனலாம். (இந்தியாவில் தோன்றிய இந்து மீட்புவாதம் வருணாச்சிரமத்தை நிலைநாட்டுவதை நோக்காகக் கொண்ட பிற்போக்கான அம்சம் கொண்டுள்ளதைப் பார்க்கலாம்)

ஜிஹாத் என்பது மதத்தைப் பரப்புவதற்கான போர் அல்ல. அது ஒடுக்குமுறைக்கெதிரான போர். மக்காவில் இருந்த வரையிலும், மதினாவில் அடைக்கலம் புகுந்த கொஞ்சநாள் வரையிலும்கூட முகமது நபி அவர்கள் வன்முறை பற்றியும் ஜிகாத் பற்றியும் பேசவில்லை. நபிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறி அராபியாவில் இஸ்லாத்தை ஒழித்துவிட வேண்டும் என்கிற கங்கணத்துடன் மாற்று நம்பிக்கையாளர்கள் போர் தொடங்கிய போதுதான் அவர் வன்முறை பேசத் தொடங்கினார். போரை அல்லாவின் வழியிலான போர் எனவும் பிசாசின் வழியிலான போர் எனவும் பிரிக்கின்றது குர்ஆன் (4:75) ஒடுக்குமுறையாளர்களிடமிருந்து ஒடுக்கப்பட்டவர்களை காப்பாற்றுவதற்கான போர் அல்லா வழியிலான போர் எனவும் ஆக்கிரமிப்புப் போரை பிசாசின் வழியிலான போர் எனவும் அழைக்கின்றது –(2:190).

நஸ்ரீன் ஓர் பேட்டியில் குர்ஆன் திருப்பி எழுதப்படவேண்டும் என கூறியதாக வெளிவந்தது. பிறிதோர் சமயத்தில் இதை அவர் மறுத்திருந்தபோதும், இக் கூற்றில் பொதிந்துள்ள உண்மைகளை சகிப்புத்தன்மையுடன் நோக்கியேயாக வேண்டும். அரேபிய சமூகம் சராம்சத்தில் இனக்குழுச் சமூகம். அத்தகைய சமூகத்தில் பெண்களிற்கு மேம்பட்ட அந்தஸ்து அளிக்கப்பட்டிருந்தது. நிலப்பிரபுத்துவ முறையில் பெண்கள் முற்றிலும் கீழடங்கியவர்ளாகவும் ஆண்கள் மறுக்கமுடியாத மேல்நிலையைப் பெற்றவர்களாகியும்விடுகின்றனர். இனக்குழுச் சமூகத்தில் நீண்ட காலப்போக்கில் உருவான மரபு வழக்கங்கள் புதிய நிலைமைகளில் முரண்பாடுகளை ஏற்படுத்தின. எனவே நிலையாக வாழும் நாகரிகத்திற்குத் தகுந்தபடி புதிய சட்டங்கள் தேவைப்பட்டன. சண்டைகள் பல நடந்ததினால் ஆண், பெண் இரு சாராரும் பெருமளவில் கொல்லப்பட்டும், பலர் சிறைபிடிக்கப்பட்ட நிலைமையிலும் இவ்வகையில் தோன்றிய உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது அவசிமாயிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ் வகையிலேயே குர்ஆன் வசனங்கள் உடனடிப் பிரச்சினைகளைக் கூறுகின்றது.

குர்ஆன் சட்டங்கள் மிக முக்கியமான அம்சம். அவை குறிப்பிட்ட நிலைமைகள் சம்பந்தப்பட்டவை என்பதாகும். முகமது அவர்கள், எப்படி இருக்கிறது என்பதற்கும் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கிடையே சமச்சீர் நிலை வைத்துக்கொண்டார். எனவே இவருடைய சட்டங்கள் மாற்றக்கூடாதவை என்று கருதுவது தவறாகும்.

குர்ஆன் ஆணாதிக்கக் கருத்துகளைப் பெருமளவில் கொண்டுள்ளது என்பதனை குறிப்பிடுகிறார் நஸ்ரீன் :

ஆண்களிற்குப் பெண்கள் மேல் அதிகாரம் இருக்கிறது. ஏனென்றால் அல்லாஹ் ஆண்களை, பெண்களைவிட மேன்மையாக்கி வைக்கின்றார். மேலும் ஆண்கள் தங்களுடைய பொருள்களிலிருந்து பெண்களிற்காக செலவு செய்கிறார்கள். எனவே நல்ல பெண்கள் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். அவர்கள் மறைவான உறுப்புக்களை அல்லாஹ் பாதுகாக்கின்ற காரணத்தால், பாதுகாப்பாளர்கள் பணிந்து நடக்கமாட்டார்கள் என்று நினைப்பவர்களிற்கு உபதேசம் செய்யுங்கள் ; படுக்கைகளிலிருந்து நீக்கி வையுங்கள் ; அடியுங்கள். உங்களிற்கு அவர்கள் கட்டுப்பட்டு விட்டால் அவர்களிற்கு எதிராக வேறு எதுவும் செய்யாதீர்கள். அல்லாஹ் உயர்ந்தவனாகவும் எல்லாவற்றிலும் மேலானவனாகவும் இருக்கிறான்.-(4:32)

விவாகரத்து செய்யப்பட்ட பெண்கள், ஆண்களிடமிருந்து விலகி இருந்து மூன்று மாதவிடாய் காலம் காத்திருக்க வேண்டும். அல்லாஹ் ஐயும் இறுதி நாளையும் அவர்கள நம்புவோராக இருந்தால் தங்களுடைய கருப்பையில் அவன் படைத்திருப்பதை மறைப்பது சட்டத்திற்கு ஏற்றதல்ல. அவர்களுடைய கணவர்கள் இணக்கத்தை நாடினால் அவர்கள் மனைவியராகத் திரும்பிக் கொள்வது நல்லது -(2:28)

விசுவாசிகளான ஆண்கள் தங்கள் பார்வையை சபலத்திலிருந்து திருப்பிக் கொண்டு சரீர இச்சைகளைக் கட்டுப்படுத்துமாறு கூறுவீராக! இது அவர்கள் வாழ்வைப் பரிசுத்தமாக்கும். அல்லர் அவர்களின் செய்கைகளை நன்கறிந்தவன். விசுவாசிகளான பெண்கள் தம் பார்வையை தாழ்த்திக் கொள்ளவேண்டும் என்றும், தமது தூய்மையைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்று கூறுவீராக! அவர்கள் தங்கள் அலங்காரத்தை வெளிக்காட்டக்கூடாது. தமது மறைப்புத்துணியை மார்பகத்தின் மேல் போட்டுக்கொள்ளவேண்டும். தம் அலங்காரத்தினை கணவர்கள், தந்தையர், கணவர்களின் தந்தையர், தங்கள் புதல்வர்கள் தத்துப்புதல்வர்கள், தங்கள் பணிப்பெண்கள், அடிமைப்பெண்கள், பெண்களைப்பற்றி உடல் அறிவு இல்லாத சிறுவர்கள் ஆகியோரைத் தவிர மற்றவர்கள்முன் வெளிப்படுத்தக்கூடாது. தம் அலங்காரத்தில் மறைந்துள்ள அணிகலன்களை வெளிப்படுத்தும் பொருட்டு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்கள் தம் கால்களை பூமியில் அடித்து நடக்க வேண்டாம்.-(24:30-31)

மேற்கூறப்பட்ட வாசகங்கள் போல் பெண்களிற்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ள குர்ஆன் ஆண்களிற்கு பல அனுகூலத்தினை வழங்கியுள்ளது.

மேற்குறிப்பிட்ட சில தனித்துவங்களைத் தவிர பொதுவாக இதர மதங்களைப் போன்றதே இஸ்லாமும். உலக அளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் இஸ்லாமியருக்கு எதிரான இனவாதம் இஸ்லாம் மதத்தில் உள்ள பிற்போக்கு அம்சங்களை சாட்டாக வைத்தே பிரச்சாரம் செய்யப்படுகின்றது. தஸ்லீமான நஸ்ரீன், சல்மான் ருஸ்டி எகிப்திய பெண் எழுத்தாளரான நவலா எல் சாடவி போன்றோர் இஸ்லாமை விமர்சிக்கும் வகையில் எழுதிய எழுத்துக்களுக்கு தடைவிதிப்பதின் மூலமோ, எழுத்தாளர்களை கொலை செய்வதன் மூலமோ இவற்றைத் தவிர்க்க முடியாது. மாறாக இப் பிரச்சினைக்குப் பின்னணியாகவுள்ள அரசியல் காரணிகளை அம்பலப்படுத்தி அதற்கு எதிராகப் போராடுவதுமட்டுமன்றி, இஸ்லாம்மீது எழும் விமர்சனங்களிற்கான அடிப்படை உண்மைகளையும் கண்டறிந்து அதை முகம்கொடுக்க வேண்டும். இந்த விமர்சனங்கள் ஒரு வரலாற்றுமுனைப்பாக பார்க்கப்படவேண்டிய ஒன்று எனலாம். எனவே விமர்சனங்கள் இஸ்லாமை சீர்செய்வதற்கான ஒரு அம்சங்களாக எடுத்துக்கொண்டு, கருத்துக்களை அங்கீகரிக்கும் மனோபாவத்தினை வளர்த்துக்கொள்வதே இன்றைய தேவை!

***தொகுப்பு – ம. நரேந்திரன்***

இக்கட்டுரைக்கான ஆதாரங்கள் பின் வரும் நூல்களில் இருந்து எடுக்கபட்டது:-

0 இஸ்லாமின் தோற்றமும் வளர்ச்சியும்
– **அஸ்கர் அலி எஞ்ஜினியர்**

0 இஸ்லாமியருக்கு எதிரான கட்டுக்கதைகள்
– **அ. மார்க்ஸ்**


## மட்டக்களப்பிலிருந்து வெளிவரும்
## கலை, இலக்கிய காலாண்டு சஞ்சிகை

மனித வாழ்வின் விழுமியங்களை மாறாத அழகுடன், கலாபூர்வமாகச் சித்தரிப்பவை கலை இலக்கியங்களே. கலை இலக்கியம் இல்லாத வாழ்க்கை ஆலயங்களே இல்லாத வனாந்தரங்கள் போலவும், உப்பில்லாப் பண்டங்கள் போலவும் உப்புச்சப்பற்று சூனியமாகத் தெரியும்.

எனவே,

மக்கள் நலன் கருதி, வாசகரிடையே வாசிப்பின் மகத்துவத்தை உணர்த்த வேண்டுமெனும் குறிக்கோளுடன் உதயம் பவனி வருகிறான். நமது லட்சியம் நிறைவேற உங்கள் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

என்ற குரலுடன் இலங்கையிலிருந்து வெளிவருகிறது.

## உதயம்

தொடர்புகட்கு : Uthayam
65. Lady maning driv
Batticola
**Sri Lanka**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## JVP யின் மீள் வருகை

தென்மாகாண சபைத் தேர்தலின் தோல்வி ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய வியூகத்தை வகுக்க வேண்டிய தேவையை உருவாக்கியுள்ளது. இவ் வியூகத்தில் பிரதான இடத்தை வகுத்த விடயம் பொதுஜன ஐக்கிய முன்னனிக்கான வாக்குகளை எவ்வாறு சிதறடிப்பது என்பதே.

இதற்காக கொள்கை வகுப்பாளர்கள் மண்டையைப் பிடித்து பிய்த்துக் கொண்டார்கள். வந்தது யோசனை உடனடியாக லண்டனில் இருக்கும்; JVP தலைவர் சோமவன்ச அமரசிங்காவிற்கு தகவல் பறந்தது உங்கள் அனைவரையும் மன்னித்து விட்டோம் பொதுத் தேர்தலில் தாங்களும் பங்கு பற்றலாம் சகல பாதுகாப்பும் தரப்படும் எனக் கூறப்பட்டது. சோமவன்சாவை உடனடியாக நாடு திரும்புமாறு வேண்டுகோளும் விடுக்கப்பட்டது.

யூலை மாதம் முதல்வாரம் லண்டனிலிருந்து சோமவன்சா நாடுதிரும்பினார். இவர் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்தபோது படையினரால் விமான நிலையம் சுற்றிவளைக்கப்பட்டது. இச் சுற்றி வளைப்பு கைது செய்யவல்ல. அவரைப் பாதுகாப்பதற்கே. அவரை ஏன் கைது செய்யவில்லை என பொலிஸ்மா அதிபரை பத்திரிகையாளர் கேட்டபோது அதற்கு இப்போது அவசியமில்லை என அவர் பதிலளித்தார்.

சோமவன்ச வருகை தந்ததும் சிறிலங்கா முற்போக்கு முன்னனியினூடாக ஆரியபுலே கொட தலைமையில் 18 மாவட்டங்களில் போட்டியிடுவதென முடிவெடுத்து தேர்தல் பிரகடனமும் வெளியிடப்பட்டு (இதுவரை பிரகடனம் தமிழில் வெளிவரவுமில்லை வேட்பாளர்களில் ஒருவரும் தமிழர்கள் இல்லை.) முதலாவது தேர்தல் பிரச்சாரக் கூட்டம் JVP தலைவர் ரோகண விஜேவீராவின் 51 வது பிறந்தநாளான 14.7.94 அன்று நுகேகொடையில் நடாத்தப்பட்டது. கூட்ட மேடையில் ரோகண விஜேவீராவின் உருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொட்டும் மழையிலும் அசையாது கூட்டத்தில் கலந்து கொண்டனர். பாதுகாப்பின் நிமித்தம் சோமவன்ச கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அவரால் எழுதப்பட்ட 14 பக்க தேசத்தை மீட்கும் முன்னனியின் அறிக்கை வாசிக்கப்பட்டது.

தேசிய இனப்பிரச்சனை தொடர்பான நிலைப்பாட்டில் முன்னேற்றம் ஏதாவது இருக்கிறதா? என்று ஊடுருவிப்பார்த்தால் பூச்சியம்தான் இவர்களோடு சேர்ந்து போட்டியிடுவதற்காக ரகுமான் தலைமையிலான முஸ்லீம் முற்போக்கு முன்னனி இரண்டு கோரிக்கையை முன்வைத்தது. ஒன்று பாராளுமன்ற தெரிவுக்குழு முன் தமிழ்க் குழுக்கள் முன்வைத்த நான்கு அம்சக்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரிக்கையை ஏற்க வேண்டும் (வடக்கு – கிழக்கு இணைப்பு, அதிகாரப் பங்கீடு முஸ்லீம் மக்களின் நிலை, சிங்கள மக்களின் நிலை) மற்றயது முஸ்லீம் மக்கள் செறிவாக உள்ள இடங்களில் முஸ்லீம் பிரதேச சபைகளை உருவாக்க வேண்டும். இரண்டு கோரிக்கைகளையும் JVP யினர் ஏற்றுக் கொள்ள வில்லை இதனால் இவர்கள் கூட்டில் சேர்வதிலிருந்து விலகிக் கொண்டனர். அண்மையில் சோமவன்ச சிங்களப் பத்திரிகையான திவஜின விற்கு பேட்டியளிக்கும் போது வடக்கு – கிழக்கு இணைப்பையும் ஏற்றுக் கொள்ள முடியாது தமிழர் போராட்டத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறியிருந்தார். ரோகண விஜேவீரா உயிருடனிருந்த போது உள் சுற்றுக்கென விடப்பட்ட சுற்றறிக்கையிலும் இதே வாசகம் காணப்பட்டது.

கொழும்பு வாழ் தமிழ் இளைஞர்கள் சிலர் அண்மையில் JVP யின் முன்னனி உறுப்பினர்களைச் சந்தித்தனர். வடக்குக்,கிழக்கு இணைப்பையும், தமிழர் போராட்டத்தையும் நீங்கள் ஏன் எதிர்க்கின்றீர்கள் என்று கேட்டனர். தமிழர் போராட்டம் நாட்டைத் துண்டாடுவதற்காக ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் நடாத்தப்படுகின்றது அதனாலேயே எதிர்கின்றோம் எனக் கூறப்பட்டது.

உங்களை UNP பயன்படுத்துகின்றது உங்களின் தேர்தல் பிரவேசம் பொதுமக்கள் ஐக்கிய முன்னனியின் வெற்றியைப் பலவீனப்படுத்துகிறது என கூறப்படுகின்றதே அதற்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள் எனக் கேட்கப்பட்ட போது எங்களுக்கு UNP யும் பொதுஜன ஐக்கிய முன்னனியும் ஒன்றுதான். நாம் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறோம் எம்மை நாம் மீள புனரமைத்துக் கொள்ள வேண்டும் எனக் கூறப்பட்டது.

## எதிரி வெளியே அல்ல...

தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா வை இத் தேர்தலில் எப்படியும் வெற்றியடையச் செய்யக் கூடாது என்பதில் பொதுஜன முன்னனியைவிட ஜனாதிபதி அக்கறையுடையவராக இருக்கிறார் போலத் தெரிகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி மீது மக்களுக்குள்ள பாரிய அதிருப்தியை பூசி மெழுகி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு இ.தொ.கா முயன்று கொண்டிருக்கும் போது ஜனாதிபதியின் அண்மைக் கால தேர்தல் பிரச்சார உரைகள் தொண்டமானுக்கு மீண்டும் தலையிடியைக் கொடுத்துள்ளது.

தென்மாகாணசபைத் தேர்தலின் போது பெரும்பான்மையினம் மரம் சிறுபான்மையினம் அதன்மீது படரும் கொடி பெரும்பான்மை இனத்தவர்கள் சிறுபான்மை இனத்தவர்களை ஆளப்பட பிறந்தவர்கள். இ.தொ.கா ஒரு கோப்பை உணவிருக்க இரண்டு கோப்பை உணவு கேட்கிறது என்றெல்லாம் இனவாதப் பேச்சுக்களை பேசியிருந்தார். தேர்தல் தோல்வியின் பின்னர் தொண்டமானுடன் நல்லுறவும் பேணப்பட்டு இனவாதமும் அடக்கி வாசிக்கப்பட்டது.

இப்போ சந்திரிகா – அஸ்ரப் உடன்படிக்கை பொதுஜன முன்னனியின் தேர்தல் பிரகடனம் என்பன வெளிவந்த பின்னர் பழக்க தோஷத்தினாலோ என்னவோ மீண்டும் ஜனாதிபதி இனவாதத்தைக் கக்க ஆரம்பித்துள்ளார். பொது ஜன முன்னனியின் நிர்வாக எல்லைகளை மாற்றி நாட்டை துண்டு போட முயற்சிக்கின்றது என்றும் நாட்டைத் துண்டாடுவதற்கு அஸ்ரப்பும், சந்திரிகாவும் சதி செய்கின்றார்கள் என்றும் பேச ஆரம்பித்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ.தொ.கா வேட்பாளர்கள் வாக்குக் கேட்கச் செல்லுகின்ற போது தமிழ் மக்கள் சிலர் பத்திரிகையைக் காட்டிக் கூட ஜனாதிபதி இவ்வாறு பேசும் போது எப்படி நாங்கள் வாக்களிப்பது என கேட்கின்றார்களாம்.

ஜனாதிபதியின் உரையால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட இன்னோர் நபர் அமைச்சர் மன்சூர். தனது பரம்பரைக் கோட்டையான கல்முனையிலேயே முஸ்லீம் காங்கிரசின் எழுச்சியினால் தோல்வியைத் தழுவ வேண்டிய நிலையில் இருக்கும் போது ஜனாதிபதியின் உரைகள் அவருக்கு பெரிதும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

தொண் டமானும் மன்சூரும் தமது பிரதான எதிரி வெளியே அல்ல உள்ளேதான் என்பதை தற்போது புரியத் தொடங்கியுள்ளார்கள்.

## பிரேமதாசாவுக்கு எதிரிகள் ! விஜேதுங்காவிற்கு நண்பர்கள் !

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா உயிருடன் இருந்த போது மௌனமாக கட்சிக்குள் இருந்தவர்கள் அவர் இறந்த பின் பிரேமதாசா ஆதரவாளர்களை ஓரம் கட்டி அவரது எதிரிகளுக்கு முன்னுரிமை கொடுத்ததன் மூலம் பிரேமதாசா மீதான வஞ்சத்தை தீர்த்துக் கொண்டுள்ளார் போலத் தெரிகின்றது.

பிரேமதாசாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து பின்னர் DUNF அமைப்பதில் முன்னின்ற ஒன்பது பேரில் ஏழுபேர் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் காமினி திசநாயக்கா கண்டி மாவட்டத்திலும் ஜி.எம் பிரேமச்சந்திரா தேசியப்பட்டியலிலும் பிரேமரத்ன குணசேகர கொழும்பு மாவட்டத்திலும் எம். முத்துப்பண்டா பொலனறுவை மாவட்டத்திலும், லக்ஸ்மன் செனிவிரத்தினா பதுளை மாவட்டத்திலும் வின்செர் பெரேரா சந்திரா...... இரத்தினபுரி மாவட்டத்திலும் போட்டியிடுகின்றனர் ஏனைய இருவரில் சமரவீரவன்னி பதுளை மாவட்டத்தில் பொது ஜனஐக்கிய முன்னனியின் சார்பில் போட்டியிடுகின்றார். மற்றையவர் அத்துலத்முதலி ஏற்கனவே கொல்லப்பட்டுள்ளார் எனினும் அவரது மனைவியார் ஸ்ரீமணி அத்துலத்முதலி பொதுஜன ஐக்கிய முன்னனிசார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.

## விரக்தியின் விளிம்பில் ஹேமா

நாட்டின் பெருந்தலைவராக மதிக்கப்பட்ட தனது கணவர் பிரேமதாசா மறைந்து ஒருவருடம் முடியும் முன்னரே அவர் வளர்த்த கட்சியினர் இவ்வளவு தூரம் தன்னை அவமதிப்பார்கள் என்று ஹே மா பிரேமதாசா கனவிலும் நினைக்கவில்லை. கோரமாக கொலை செய்யப்பட்டு கணவன் இறந்த துயரத்தின் மத்தியிலும் மரணவீட்டிலேயே தான் நாட்டின் தலைவராக வரலாம் என கனவு கண்டார் ஹேமா. இன்று சாதாரண பாராளமன்ற உறுப்பினர் பதவியைக்கூட அனுகவிடாமல் தடுக்கின்றது யூ.என்.பியின் புதிய தலைமை.

பிரேமதாசாவின் மரணச்சடங்கில் ஏற்கனவே ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலையும் மாற்றி தானே பதிலுரையை வழங்கினார். இவ் உரை பிரேமதாசா விசுவாசி சிறிசேன கூரேயால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுதப்பட்டது) அவ் உரையில் பிரேமதாசா விட்டுச் சென்ற இடத்தைத் தான் நிரப்புவேன் என பிரகடனம் செய்தார்.

விழித்துக் கொண்டது யூ.என்.பி புதிய தலைமை. ஹேமாவும், பிரேமதாசா குடும்பத்தவரும் முன்னே வருவதற்கான எல்லாக் கதவுகளையும் அடைத்துக் கொண்டது. தென்மாகாண கட்சியின் அமைப்பாளர் பதவி பிரேமதாசாவின் மகன் சஜித் பிரேமதாசாவிற்கு கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. கட்சியின் உயர் பதவிகளில் இருந்த பிரேமதாசா விசுவாசிகள் பலவந்தமாக கீழிறக்கப்பட்டனர். பிரேமதாசாவின் பிரதான விசுவாசியான சிறிசேன கூரேயிடமிருந்து கட்சியின் செயலாளர் பதவி பலவந்தமாக பறிக்கப்பட்டது. தேர்தலில் போட்டியிடுவதில் இருந்தும் பலவந்தமாக விலக்கப்பட்டார். பிரேமதாசாவின் அடியாளும், யூ.என்.பியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான சொத்தி உபாலி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான். ஈற்றில் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் தருவதாக கூறி கடைசி நேரத்தில் தந்திரமாக ஹேமாவை வெட்டிவிட்டது தலைமை.

தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் தினத்தன்று கையொப்பம் இடுவதற்காக அரசாங்க செயலகத்திற்கு சென்றபோதே தமக்கு எதிரான சதியினைப் புரிந்து கொண்டார்கள். ஹேமாவும் மகள் துலாஞ்சலியும்.

உடனடியாக பிரதமர் ரணிலை சந்திக்க விரும்பினார் ஹேமா. பாதுகாப்பாளர்கள் அனுமதி கொடுக்கவில்லை இறுதியில் பாதுகாப்புத் தடைகளையும் மீறிக் கொண்டு கண்ணீர் மல்க செயலகத்தில் ரணில் இருந்த இடத்திற்கு சென்றார் வேட்பு மனுத்தாக்குதலுக்கான நேரம் பிந்திவிட்டது தம்மால் எதுவும் செய்ய முடியாது என கைவிரித்தார் ரணில். ஹேமா அரசாங்க அதிபரிடம் சென்றார் அரசாங்க அதிபர் நேரம் தருகின்றோம் வேட்பாளர் பட்டியலில் மாற்றம் செய்யலாம் என்றார் எனினும் ரணில் அதற்கு உடன்படவில்லை. ஹேமா நியாயம் கேட்டார் உரத்துக்கத்தினார் பாதுகாப்புப் படையினர் சமாதானப்படுத்தி வெளியே கொண்டுவந்தனர். வழியில் நின்ற ரணில் ஆதரவாளர்கள் ஹேமாவைக் கேலி செய்தனர். செருப்புகள் கூட அவரை நோக்கி வீசப்பட்டதாக தகவல்.

தலைவிரிகோலமாக வெளியே வந்த ஹேமா கூச்சலிட்டு மண்டபத்தில் ஓர் கூட்டத்தைக் கூட்டினார். தனக்கு எதிரான சதிமுயற்சி பற்றி பிரஸ்தாபித்தார். அழுதார் யூ.என்.பியின் புதிய தலைமையை வாயில் வந்தபடியெல்லாம் திட்டினார் கூட்டத்திலிருந்த பத்திரிகையாளர்கள் நீங்கள் வேறு கட்சியில் சேருவீர்களா? என்று கேட்டபோது என் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் எனத் திருப்பிக் கேட்டார்.

எனினும் வேட்புமனுத் தாக்குதல் தினத்திற்குப் பின்னர் பலநாட்களாக அவரின் மூச்சையே காணவில்லை. இறுதியில் யூலை 8ம் திகதி பிரேமதாசா விசுவாசிகளான ஒசி அபயகுணசேகரா, சஸ்கதாசா என்பவர்களை ஆதரித்து வாழைத் தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேடையில் திடீரென தோன்றினார்கள் ஹேமாவும் மகள் துலாஞ்சலியும். தனது கணவர் வளர்த்த ஐக்கிய தேசியக் கட்சியை பாதுகாக்கும் படியும் அதற்கு வாக்களிக்கும் படியும் கேட்டுக் கொண்டார். ஹேமா. மகள் துலாஞ்சலி பிரேமதாசா பயன்படுத்திய பேனா ஒன்றை ஞாபகச் சின்னமாக மேடையில் வைத்து ஓசியிடம் கையளித்தார்.

விரக்தியின் மத்தியிலும் எஞ்சியிருக்கும் பிரேமா விசுவாசிகளினூடாக கட்சிக்குள் நுழைய பார்க்கின்றனர் பிரேமதாசா குடும்பத்தினர். எனினும் தமது கட்டுப்பாட்டுக்குள் கட்சியைக் கொண்டு வரமுனையும் காமினி–ஜே.ஆர் கூட்டம் இதற்கு எங்கே வழிவிடப் போகின்றது!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(முன் அட்டை உள் பக்கத் தொடர்ச்சி)

மேலும் மண்டபம் நிறைந்த சனங்களை வரவழைப்பதிலும் வருகைதருபவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதிலும் தீவிரமாக ஈடுபட்டு தமது எதிர்ப்பு முயற்சியில் முழுமையான வெற்றியையும் பெற்றனர்.

இதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளிலிருந்து விடுபட்டு இவ் எதிர்ப்பு முயற்சிக்கு ஆதரவாக இருந்த ஒரு சிலரை புலிகள் கடத்திச் சென்று பலத்த சித்திரவதைக்கு உள்ளாக்கியதுடன் வெற்றுத்தாளில் ஒப்பம் வாங்கியுமுள்ளள்ளனர். அத்துடன் பிரதேச வேறுபாட்டை வெளிப்படுத்தும் வகையில் சில பிரதேசங்களைச் சேர்த்தவர்களுடன் சேரக்கூடாது என்றும் கண்டித்துள்ளனர்.

இச் செய்திகளையே இப்பிரசுரம் வெளிப்படுத்துகிறது. மேலும் இப்பிரசுரத்தில்.... "திரைப்படங்களைப் பார்வையிடுவதோ,தென்னிந்தியக் கலைஞர்களினதும், ஏனையோரினதும் நிகழ்சிகளுக்கு செல்வதோ, CD, ஓடியோ, திரைப்பட நாடாக்களைக் கேட்பதோ, அல்லது இவையனைத்தும் பகிஷ்கரிப்பதோ அனைத்தும் மக்களின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்குட்பட்டது. இவைபற்றிய சரி பிழை வெளியிட வேண்டியதும், அறிவுரை வழங்கவேண்டியதும், பத்திரிகைகளினதும் சமூகப் பொறுப்புடையவர்களினதும் கடமையாகும். ஆனால் பயமுறுத்தியும், வன்முறையைப் பயன்படுத்தியும், பலாத்காரங்களைப் பிரயோகித்தும் மக்களைத் தடுப்பது என்பது தனிமனித சுதந்திரத்திற்கு விடுக்கப்படும் சவாலாகும். இத்தகைய வன்முறைகள் மூலம் தமது மேலாண்மையின் கீழ் சுவிஸ்வாழ் தமிழ் மக்களைக் கொண்டுவருவதுடன் தமது அதிகாரத்தை இங்கும் நிலைநிறுத்த முனைவதன் பிரதான அம்சம் என்பதை நாம் உவரவேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளமை இப் பிரசுரத்தின் சத்தான அம்சமாகும்.

தென்னிந்தியத் திரைப்படக் கலைஞர்களின் வருகையுடன் எமக்கும் உடன்பாடு இல்லை என்பதுடன், இவர்களுக்கு நகையணிந்தும், பணம் கொடுத்தும், அவர்களை மகிழ்வுறச்செய்து தமது இரசனையைக் கீழ்மைப்படுத்துகின்ற எம்மவர்களின் நடவடிக்கைகளை நாம் எற்றுக்கொள்ள முடியாதது தான்.

இவ் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் விடுதலைப் புலிகளே ஏற்கனவே பல தென்னிந்தியக் கலைஞர்களை வரவழைத்து வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்கள் என்பது குறிப்பிடப்படவேண்டியதே.

ஆனால் இவ் எதிர்ப்பு நடவடிக்கைகளை வன்முறைகளைப் பயன்படுத்தியோ, அராஜகத்தை மேற்கொள்வதன் மூலமோ நிலைநிறுத்துவது எவ்வகையிலும் நியாயப்படுத்தப்பட முடியாதது. அத்துடன் இத்தகைய நடவடிக்கைகள் அதிகாரத்தை நிலைநிறுத்தும் முயற்சி என்ற வகையில் இவை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதுமே!

– ஆ–ர் குழு

www.tamilarangam.net

## யாழ் மாவட்டத்தில் 'சிரிப்புக்குரிய' நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள்

| தொகுதிகள் | எம் பி க்கு | வாக்குகள் |
|---|---|---|
| உடுப்பிட்டி | " | 5 |
| மானிப்பாய் | " | 8 |
| நல்லூர் | " | 9 |
| பருத்தித்துறை | " | 31 |
| கோப்பாய் | " | 40 |
| கிளிநொச்சி | " | 56 |
| காங்கேசன்துறை | " | 93 |

இராணுவகட்டுப்பாட்டுக்குட்பட்ட பிரதேசத்தில்....

வாழும் மக்களின் எண்ணிக்கை 6500
ஈ.பி.டி.பி க்கு கிடைத்த வாக்குகள் 10700

குறைந்த வாக்குகளை பெற்றால்
கட்டுக்காசை இழப்பர்.
இப்படி வாக்குகளைப் பெற்றால்
எதை இழப்பர்?
மானத்தை.........??